தமிழீழ ஆவணக் காப்பகம்

மார்ச் 1997

# எரிமலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அமைதி நகரின் மன்னம் பெரிகள்



அழகிய மன்னம் பெரி
அவள் ஒரு போராளி
அவளை அவர்கள் பிடித்தனர்
ஒரு அழகி என்பதால்
அவளிடம் இரகசியங்கள்
இருந்ததால்
அவளை அவர்கள் சிதைத்தனர்
நிர்வாணமாகக் குற்றுயிராக
தெருவிலே விட்டுச் சென்றனர்

அழகிய மன்னம்பெரி
ஆனால் அவளைப் போல
அவளது மரணம்
அழகானதேயல்ல

அழகிய கிருஷாந்தி
இவள் ஒரு போராளியல்ல
ஆனால் அவளை அவர்கள்
பிடித்தனர்
கைதடி வெளியெல்லாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பலமுறை சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்
அவளைத் தேடிச் சென்ற
தாயை தம்பியை அயலவரை
எல்லோரையுமே
கழுத்தை நெரித்து செம்மணியில்
புதைத்தனர்

அழகிய ரஜினி
இவளும் ஒரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள்
பிடித்தனர்
யாருமில்லாத வீடொன்றின்
சுவர்களில்
அவள் குரல்
மோதியழிய
அவளை அவர்கள் சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து ஒரு
மலக்கிடங்கில் புதைத்தனர்

ரஜினி, கிருஷாந்தி
இருவரும்
அமைதி நகரின் மன்னம் பெரிகள்....
விதவை அரசி
சொன்ன
பொய்களின் பின்
சென்றார்கள்
தனியே சென்றார்கள்.
வெண்தாமரைப் பொறிகளில்
சிக்கினார்கள்

அமைதி நகரம்
அவர்களின்
அழகை இளமையைக் கேட்டது
அதன் சாப இருளில்
பேய்கள்
பலம் மிகப் பெற்றெழுந்து

வருகிறார்
விதவை அரசி
வெற்றிக்கொடி
வெண்தாமரை
இரண்டிலும் குருதிவடிய

அதே வசியச் சிரிப்பு
அதே வெறித்த விழிகள்
அதே முறிந்த வாக்குறுதிகள்

வருகிறார் விதவை அரசி

கவனம்
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாச் சிறு
பெண்களும் கவனம்

மன்னம் பெரிகளின் ஆவி
விரைவில்
விதவை அரசிகளைத் துரத்தும்
முன்பொரு விதவையின்
வெற்றிக்கொடி
அறுந்து
மண்ணில் விழுந்தது போலே

மன்னம் பெரிகளின் ஆவி எழும்
அதுவரை
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாப் பெண்களும்
கவனம்
யாகத்தினால் நிராகரிக்கப்பட்ட
சதிதேவியின் கோபத்தோடு
புல் மூடிய புதைகுழி நீத்து
எல்லா
மன்னம் பெரிகளும்
எழுக

மன்னம் பெரிகளைத்
தூக்கிச் செல்கின்றன
மன்னம் பெரிகளுக்கு ஆபத்து
தனியாகப் போகும்
எல்லா அழகிய பெண்களுக்கும்
ஆபத்து

மன்னம் பெரிகளின் கதறல்
அமைதி நகரெல்லாம் நிறைகிறதே....

கைதடி வெளியே
செம்மணி வெளியே ஐயோ
அமைதி நகரமே
அமைதி நகரமே
அருவருப்பான ஒரு பொய்யே
உனக்கும் ஐயோ

இதோ சமாதானம்
அதன் மரண நெடியுடன்
ஒரு மாயை வலையென
எமது நகரங்களின் மீது
விழுகிறது

அமைதி நகரம் அழைக்கிறது
அமைதி நகரம் அழைக்கிறது
அதன் வாசலிலே கிருஷாந்தி
அமைதியுறா மனத்தினளாய்...
அன்றொருநாள்
ஊழிப் பெருநடனம் தோன்றக்
காரணமாய் இருந்த
சதிதேவியின் விழிகளைப் பெற்று
கைதடி வெளியெலா மாகி
செம்மணி வெளியெலா மாகி
வாசலிலே கிருஷாந்தி.

**யாழ். மாணவர் ஒன்றியம்**

**மன்னம் பெரி:** ஒரு அழகு ராணி. ஜே.வி.பி. போராளி 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது கைதுசெய்யப்பட்டு கடுமையாகச் சிதைக்கப்பட்டு பின் சுட்டுக்கொல்லப்பட்டாள். அவள் சிதைத்துக்கொல்லப்பட்ட விதம் பின்னாளில் சிறீமாவோ ஆட்சிக்கெதிரான மேடைகளில் அதிகமதிகம் சொல்லப்பட்டது. மன்னம் பெரியின் ஆவி சிறீமாவோவை அவர் தோற்கும் வரை துரத்திச் சென்றது.

**சதிதேவி:** ஒரு புராண நாயகி. தட்சனின் மகள் தன் தந்தையை மீறி சிவபெருமானைத் திருமணம் செய்தார். பிறகு தட்சன் யாகம் செய்த போது சிவனார் எச்சரித்ததையும் மீறி, அங்கு சென்றார். அங்கே யாதசாலையில் தந்தை தட்சனால் அவமதிக்கப்பட்டார். அதனால் தற்கொலை செய்துகொண்டார். இறந்த தன் மனைவியின் உடலை ஏந்தியபடி கோபமடைந்த சிவனார் ஆடியதே ஊழிப்பெருநடனம் எனப்படுகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே


★ வவுணதீவு, சீனன்குடா தாக்குதல்கள்!
சந்திரிகா அரசின் இராணுவ
மூலோபாயத்திற்கு
புலிகள் வழங்கிய மரண அடி
பக்கம் . . . . 04

★ 'எடிபல' இராணுவ நடவடிக்கை:
விடுதலைப் புலிகளுக்கு இன்னுமொரு
ஆயுதக் களஞ்சியம்
பக்கம் . . . . 06

★ நாமும் விழித்திருப்பதே நன்று
பக்கம் . . . . 24

★ சுதந்திரத்தைத் தேடி
பக்கம் . . . . 25

★ தார்மீக ஆதரவு
பக்கம் . . . . 28

★ விடுதலைப் புலிகள் மகளிர்
படையணியினரின்
சலனப்படங்கள் சொல்லும் செய்திகள்
பக்கம் . . . . 33

★ திரைகடலோடி தேச விடுதலைக்கு
உழைத்தவர்கள்
பக்கம் . . . . 35

★ உள்ளும் புறமும்
பக்கம் . . . . 36

★ பெண்நிலைவாதம் என்றால் என்ன?
பக்கம் . . . . 42

★ 'இருள் விலகிய காலம்' – சிறுகதை
பக்கம் . . . . . . 46





★ 'சத்ஜய'வும்
'ரிவிரச'வும் 'ஓயாத
அலைகளும்'
தவளையும்
– பக்கம் 08





★ தமிழகத்தின் எழுச்சி
– பக்கம் 14





★ நுனிக் கொம்பர் ஏறினார்
– பக்கம் 18





★ அவலமுறும் பெண்களுக்கு
ஒரு அழைப்பு
– பக்கம் 21





★ புதைக்க நினைக்கும் வரை
அவர்களுக்கான புதைகுழிகள் தொடரும்
– பக்கம் 22





★ விடுதலைப் பின்னணியும்
காசியானந்தன் கவிதைகளும்
– பக்கம் 29





★ பெண்மையின் மதிப்பு எங்கே
போய்க்கொண்டிருக்கிறது...?
– பக்கம் 29




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

★ நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம்; தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

★ பெண் விடுதலை என்பது, அரச அடக்குமுறைகளிலிருந்தும் சமூக ஒடுக்குமுறைகளிலிருந்தும், பொருளாதாரச் சுரண்டல் முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்.

★ ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது, ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல; இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்.

★ பெண்கள் சம உரிமை பெற்று – சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் சமத்துவமாக – கௌரவமாக – வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்.



★ ஆண்களும் பெண்களும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும் – சமத்துவத்தையும் – கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புக்களைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைத்து பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால்வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும்.

★ எமது விடுதலை இயக்கத்துடன் இணைந்துகொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும்.


★ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய தமிழர்களின் சரித்திரத்தில், போருக்குப் புறப்பட்டுப் போன ஆண்களை, வீட்டிலிருந்து தாய்மார்கள் - பெண்கள் - வழியனுப்பிவைத்தார்கள், 'சென்று வா மகனே! வென்று வா!'; ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிந்திய இன்றைய சரித்திரத்தில், போருக்குப் புறப்பட்டுச் செல்லுகின்ற பெண்களாகிய உங்களை எல்லாத் தாய்மாரினதும் சார்பில் நான் வழியனுப்பி வைக்கிறேன். 'சென்று வா மகளே! வென்று வா!'.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்
'தலைவரின் சிந்தனைகள்'



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

மார்ச் 1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# இராணுவத் தீர்வில் இன்னும் நம்பிக்கையா?

சந்திரிகா அரசின் யுத்த மூலோபாயம் தள்ளாடத்தொடங்கிவிட்டது. கிழக்கினையும், வடக்கினையும் ஒரே நேரத்தில் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியாத நிலையில் வடக்கினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் மூலோபாயத்தினை சந்திரிகா அரசு தேர்ந்தெடுத்திருந்தது. அதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியோ கிழக்கினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் மூலோபாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. இவ்விரு மூலோபாயங்களும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை தமிழர் மீது திணிப்பதையும் தமிழின அழிப்பினையுமே நோக்காகக் கொண்டவை. யாழ் குடாநாட்டினை ஆக்கிரமித்த பின்னர் தாம் யுத்தத்தில் வெற்றிபெற்று வருவதாக பீற்றிக்கொண்ட சந்திரிகா அரசிற்கு முல்லைத்தீவு, பரந்தன் பதிலடிகளைப்போல வவுணதீவிலும் சீனன் குடாவிலும் மரண அடி வீழ்ந்துள்ளது.

தென் தமிழீழத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல்கள் இராணுவத்தினரின் மனநிலையினை நிச்சயம் வெகுவாகப் பாதித்திருக்கும். தென் தமிழீழத்தில் அமைந்திருக்கும் முகாம்கள் ஒரு பட்டாலியனுக்கு குறைவான ஆள் பலத்தைக் கொண்டவை. இத்தகைய முகாம்கள் மிக இலகுவில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் இலக்குகளாகிவிடும் என்ற அச்சம் படையினரைப் பிடித்தாட்டத் தொடங்கிவிடும்.

இச்சூழலில் படைத்தரப்புக்கு இரு தெரிவுகளே எஞ்சப்போகின்றன. குறைந்த எண்ணிக்கையினைக் கொண்ட முகாம்களை விஸ்தரித்து ஆட்பலத்தினைக் கூட்டுவது ஒரு தெரிவு. அவ்வாறு செய்வதாயின் வடக்கிலிருந்து ஒரு பகுதிப் படையினரை கிழக்கு நோக்கி நகர்த்த வேண்டும். அவ்வாறு நகர்த்துவதாயின், அது வடக்கில் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும். இரண்டாவது சிறிய முகாம்களை சில இடங்களில் இருந்து அகற்றி ஏனைய முகாம்களை பெரிய முகாம்களாக்குவது. இது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினை அதிகரிக்கச் செய்வதோடு படைத்தரப்பின் விநியோகப் பாதையினை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும்.

இரண்டில் எத்தெரிவினை மேற்கொள்ளினும் சிறீலங்கா அரச தரப்பிற்கு பாதகமான நிலையே உருவாகும். எத் தெரிவையுமே மேற்கொள்ளாது தற்போது உள்ள நிலையினைத் தொடரினும் இராணுவத்தின் மனநிலை பாதிப்புக்குள்ளாகி புதிய நெருக்கடிகளை உருவாக்கும். சந்திரிகா அரசு அமுல்படுத்திவரும் இராணுவக் கொள்கை காரணமாக படிப்படியாக இராணுவத்தின் மனோபலம் வீழ்ச்சியடைந்து செல்லும் போது தென் தமிழீழம் முழுமையாக புலிகளின் கட்டுப்பாட்டில் வருவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்ற அச்சம் தற்போது சிங்களத் தரப்புக்கு ஏற்படத்தொடங்கிவிட்டது.

வடக்கில் தாம் நினைத்தவாறு இராணுவ நடவடிக்கைகளை நடாத்தி முடிக்க முடியாத நிலை; தென் தமிழீழத்தில் புலிகளின் கை ஓங்கியுள்ள நிலை. இவை இரண்டும், இரண்டும் கெட்டான் நிலைக்கு சந்திரிகா அரசினைத் தள்ளியுள்ளது.

இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களைத் தமது வாழ்விடங்களிலிருந்து விரட்டியடித்து அவர்கள் மீது தாங்கொணாத் துயரங்களைச் சுமத்துவதனைத் தவிர சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள் எவ்வித பயனையும் சிங்களத் தரப்பிற்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. இராணுவம் தொடுக்கும் தாக்குதலால் மக்கள் படும் துயரங்கள், உயிர் தப்பி ஓடும்போது கடலினுள் உயிருடன் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்து போவது வரை தொடர்கிறது. அண்மையில் படையினர் நடாத்திய ‘எடிபல’ இராணுவ நடவடிக்கையின் விளைவாகவே கடலில் மூழ்கிச் சாவடைந்த 130 தமிழ்ப் பொதுமக்களின் இழப்பினையும் நாம் நோக்க வேண்டும்.

எப்படியும் நிச்சயம் தோற்றுப் போகும் யுத்தத்திற்காக தமிழ்ப் பொதுமக்களை மட்டுமன்றி சிங்களப் பொதுமக்களையும் பலிக்கடாக்களாக்குகிறது சந்திரிகா அரசு. யுத்தத்தில் வெற்றிவாகை சூடுகிறோம் என்ற போலித் தோற்றத்தினை ஏற்படுத்தியவாறு யுத்தத்தினைத் தொடர்வதற்கான அங்கீகாரத்தினை சிங்கள மக்களிடம் கோரி நிற்கிறது. மார்ச் 21–ம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கும் யுத்தத்தினையே நம்பி நிற்கிறது.

இன்னும் காலங்கடந்துவிடவில்லை. தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து தன்னாட்சி உரிமை அடிப்படையில் பிரச்சினைகளை கையாள இன்றும் காலங்கடந்துவிடவில்லை. இதனை விடுத்து இராணுவப் பாதையினைத் தொடரின் சிங்கள மக்கள் எழுதப்போகும் நஷ்டக்கணக்கு தமிழ் மக்களினதைவிட அதிகமாகவே இருக்கக்கூடும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## வவுணதீவு, சீனன்குடா தாக்குதல்கள்!

# சந்திரிகா அரசின் இராணுவ மூலோபாயத்திற்கு புலிகள் வழங்கிய மரண அடி

மட்டக்களப்பு வவுணதீவிலும், திருகோணமலை சீனக்குடாவிலும், கடந்த 6.3.97 அன்று விடுதலைப்புலிகள் நடத்தியுள்ள தாக்குதல், சந்திரிகா அரசின் யுத்த மூலோபாயத்தினையே பலத்த கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

வவுணதீவில் அமைந்துள்ள மட்டக்களப்பின் பிரதான இராணுவத் தளம் மீதும், வவுணதீவுப் பாலத்துடன் அமைந்திருந்த இராணுவ முகாம் மீதும், 6.3.97 அன்று அதிகாலை 1.05 மணியளவில் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், காலை 7.30 மணியளவில் இவ்விரு முகாம்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருக்கின்றனர். உதவிக்கு விரைந்த சிறீலங்காப் படையினர் மீதும், வவுணதீவுப் பாலத்தினை உடைத்துவிட்டு எதிர்த்தாக்குதல் தொடுத்த புலிகள் ஏறத்தாள 12 மணி நேரம் அப்பகுதியில் நிலைகொண்டு சகல ஆயுதத் தளபாடங்களையும் அப்புறப்படுத்திவிட்டே அகன்றுள்ளனர். அத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அறியப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் 84 போராளிகள் வீரச்சாவை அடைந்துள்ளனர்.

வவுணதீவுத் தாக்குதலுக்கு சற்று முன்னர் 5.3.97 நள்ளிரவு சீனன்குடாவில் நடந்த தாக்குதல் படையினரை நிச்சயம் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கும். சீனன்குடாவில் மிகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த, கிழக்கின் பிரதான விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணி ஒரு Y-12 சீனத் தயாரிப்பு விமானத்தினையும் இரண்டு விமான எதிர்ப்பு ஏவுகணை நிலைகளையும் தாக்கி அழித்துள்ளது. ஒரு MI-24 தாக்குதல் உலங்குவானூர்தி பலத்த சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டதுடன் உதவிக்கு வந்த புக்காரா விமானமும் தாக்கி சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் பல விமானப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். புலிகள் தரப்பில் 3 கரும்புலிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

வவுனியா, மன்னார் வீதியினைக் கைப்பற்றிவிட்டதாக வெறும் பிரச்சாரங்களைச் செய்து உள்ளூராட்சித் தேர்தல் வெற்றிக்கணக்கினை எழுதுவதற்கு சந்திரிகா தயாராக இருந்த வேளையிலேயே இத்தாக்குதல்கள் நடந்துள்ளன. இவ்விரு தாக்குதல்களையும் தேர்தல் நேரத்தில் சந்திரிகா அரசிற்கு விழுந்த இரு பலத்த அடிகள் என வர்ணிக்கிறது, லண்டனில் இருந்து வெளியாகும் 'Financial Times' பத்திரிகை.

இத்தாக்குதல்கள் கூறும் செய்திதான் என்ன? இவை எவ்வகையில் சந்திரிகா அரசின் இராணுவ மூலோபாயத்தினை கேள்விக்குள்ளாக்குகின்றன? இத்தாக்குதல்களின் தாக்கத்தினை சந்திரிகா அரசு எவ்வாறு எதிர்கொள்ள முயலும்? இவை மக்கள் மனதில் சாதாரணமாக எழக்கூடிய கேள்விகள்.

இவ்விரு தாக்குதல்களையும் உன்னிப்பாக அவதானிக்கும் பொழுது, இத்தாக்குதல் இலக்குகள் இலகுவானதல்ல என்பதனை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். வவுணத்தீவுப் பகுதி காடுகளை அண்மித்திருப்பினும் இராணுவ முகாம் பகுதி திறந்தவெளிப் பகுதியாகவே இருந்தது. இதனால் அப்பிரதேசம் மீது தாக்குதல் தொடுக்கும்போது படையினருக்கு எதிர்த்தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருந்தது. வான் மீதான தாக்குதலும் இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். இவ்வாறு படையினருக்கு சாதகமான புவியியல் அமைப்பினைக் கொண்ட ஒரு பிரதேசத்தில், பெரிய தோர் படை நகர்வினை மேற்கொண்டு இரு முகாங்களைத் தாக்கி அழித்து ஆயுத தளபாடங்களை அள்ளிச் சென்றிருப்பது கிழக்கில் புலிகளின் தாக்குதல் திறனில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது. சீனன்குடா விமானத் தளம் அமைந்துள்ள பகுதி பரந்த பிரதேசமாகும். மிகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த இம் முகாமினுள் விடுதலைப்புலிகள் ஊடுருவியமை, தமது இலக்குகள் மீது குறி தவறாமல் தாக்குதல்கள் நடத்தியமை நிச்சயம் பாதுகாப்பு படையினருக்கு தமது பாதுகாப்பு குறித்த கேள்விகளை மீண்டும் ஒருமுறை எழுப்பியிருக்கும்.

இப்படியாக கிழக்கில் அதாவது தென்தமிழீழத்தில் இருக்கக்கூடிய அத்தனை இராணுவ முகாம்கள் மீதும் திட்டமிட்ட முறையில் தாம் தேர்ந்தெடுக்கும் நேரத்தில் தாக்குதல்களை நடத்தக்கூடிய வல்லமையினைப் புலிகள் பெற்றுள்ளனர் என்பதனை இத்தாக்குதல்கள் உறுதியாக முரசறைந்துள்ளன.

கிழக்கில், புலிகளது தாக்குதல்கள் அதிகரிப்பது சந்திரிகா அரசின் இராணுவ மூலோபாயத்தின் மீது பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இத் தாக்குதல்கள் மிகுந்த மன ஆறுதலைக் கொடுத்திருக்கும். ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் இராணுவ மூலோபாயத்தினை, அதாவது 45,000க்கும் மேற்பட்ட படையினரைக் கிழக்கில் குவித்து வைத்து, புலிகளின் பிடியில் கிழக்கு மாகாணம் சிக்கிவிடாமல் தடுப்பதுதான் இராணுவ மூலோபாயத்தின் பிரதான இலக்காக இருக்க வேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் மூலோபாயத்தினை நிராகரித்த சந்திரிகா அரசு, கிழக்கில் இருந்து படைகளை வடக்கினை நோக்கி நகர்த்தி வடக்

**வேந்தன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிலே இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சந்திரிகா அரசின் இம் மூலோபாயம் உடனடியாக சாதகமாகத் தோன்றினும் நீண்டகால நோக்கில் – சிறீலங்கா தரப்பிற்குப் பாதகமாகவே அமையும் என்று சில இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிய போதும் அரசு அதனை அசட்டை செய்தே வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில், 'கிழக்கு – வன்னி – குடாநாடு' என்ற ரீதியிலேயே படை நகர்வினை மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்ட போது, அதுவரை காத்திருந்திருப்பின், அதற்கிடையில் ஈழம் உருவாகியிருக்கும் என கேலியுடன் பதிலடி கொடுத்துவிட்டு, தமது வெற்றிகள் குறித்து இனவாதத்தினைக் கக்கியவாறு முழங்கினார் ரத்வத்தை.

சந்திரிகா அரசு, யாழ் குடாநாட்டினைக் கைப்பற்றிய போது, தமிழீழம் சாத்தியம் என்ற உளவியல் உணர்வினைத் தமிழ் மக்களின் உள்ளங்களில் இருந்து அகற்றிவிடலாம் என சந்திரிகா அரசு மகிழ்வடைந்திருக்கக்கூடும். ஆனால், தற்போதைய சூழலில் தமது இராணுவ மூலோபாயம் சரியானது தானா என்ற கேள்வி நிச்சயம் சந்திரிகா அரசின் இராணுவக் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் ஏற்படவே செய்யும்.

கிழக்கு மாகாணம், தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் வாழுகின்ற பகுதியாக தற்போது உள்ளது. சிங்களக் குடியேற்றங்கள் மூலம், கிழக்கினைச் சிங்கள மயமாக்கும் திட்டம், கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உறுதியாக இருப்பதன் மூலம்தான் சாத்தியமாகின்றது. தற்போது, கிழக்கின் 80 வீதத்திற்கும் மேற்பட்ட பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதனால் புதிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியம் அற்றதாக உள்ளது. அதுமட்டுமன்றி ஏற்கனவே குடியேற்றப்பட்ட சிங்களவர்களும் குடியேற்றங்களை விட்டு வெளியேறிச் செல்லும் நிலையே உருவாகியுள்ளது. இதனால், சந்திரிகா அரசின் புதிய இராணுவத் தந்திரோபாயம் காரணமாக, கிழக்கினைச் சிங்களமயமாக்கும் திட்டம் தோல்வியினைத் தழுவி வருகிறது. இது நீண்டகால நோக்கில் சிங்களத் தரப்புக்குப் பாதகமானதாக அமையும் என்பது சந்திரிகா அரசின் ஒரு கவலையாக அமையக்கூடும்.

அடுத்த மிக முக்கியமான விடயம், தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியிலே வளரவேண்டிய ஒருமைப்பாடு தொடர்பானது. கிழக்கு மாகாணம் இராணுவப் பிடியில் இறுக்கமாக இருக்கும் போது இவ் ஒருமைப்பாட்டினைக் குலைத்தல் இலகுவானதாக இருந்தது. தமிழ் – முஸ்லீம் மக்களிடையேயான உறவுகளில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதும் கடினமான ஒரு விடயமாக இருந்தது. இப்போது விடுதலைப் புலிகள் கிழக்கினைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் இன்றைய சூழலில் தமிழ் – முஸ்லீம் மக்களிடேயே மோதல்களைத் தூண்டும் செயற்பாடுகளை சிங்கள – பௌத்த இனவாதிகள் மேற்கொள்கின்ற போதும் – உறவுகளைச் சீராக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட முடிகிறது. உதாரணமாக அண்மையில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லீம் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களைக் குறிப்பிடலாம். இத்தகைய பேச்சுக்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் சூழலும் உள்ளது.

> **யாழ் குடாநாட்டினைப் படையினர் ஆக்கிரமித்திருந்தாலும் அது தமிழர்களின் பிரதேசம் என்பதனையும், என்றோ ஒரு நாள் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டிவரும் என்பதனையும் சந்திரிகா அரசு உணராமல் இருக்க முடியாது**

இப்படியாக, சந்திரிகா அரசின் இராணுவ மூலோபாயம், கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து, தமிழ் – முஸ்லீம் மக்களின் உறவு நிலையினைப் பலப்படுத்துமாயின் – அதனைத் தமிழர்களுக்குச் சாதகமான ஒரு மூலோபாயமாக சிங்கள இனவாதிகள் வர்ணிக்க பின்நிற்கப் போவதில்லை. இது குறித்த ஒரு அச்சமும் சந்திரிகாவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு எழாமல் இருக்காது.

மறுதலையாக, யாழ் குடாநாட்டினைப் படையினர் ஆக்கிரமித்திருந்தாலும் அது தமிழர்களின் பிரதேசம் என்பதனையும், என்றோ ஒரு நாள் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டிவரும் என்பதனையும் சந்திரிகா அரசு உணராமல் இருக்க முடியாது.

இச்சூழலில், தமிழீழத் தேசியத்தினைப் பலம்பெறச் செய்வதற்கு உதவும் வகையில் கிழக்கினைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் விட்டு – யாழ் குடாநாட்டினைக் கைப்பற்றிய சந்திரிகா அரசின் யுத்த மூலோபாயத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சியினரும் இராணுவ ஆய்வாளரும் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொள்ளவே செய்வர்.

இதனை எதிர்கொள்ள சந்திரிகா அரசு மீண்டும் இராணுவ நடவடிக்கை என்ற வழமையான அணுகுமுறையினையே மேற்கொள்ள முனையும். தள்ளாடியிலிருந்து பரந்தன் வரை ஒரு படை நகர்வினை மேற்கொண்டு குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையினைத் திறந்து விட்டோம் என வெற்றிக் கூக்குரல் எழுப்ப விரும்பும். ஆனால், எதிவரும் மார்ச் 21ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் இது சாத்தியமா என்பது ஒரு கேள்வி. ஏற்கனவே வவுனியா – மன்னார் பாதையில் ஏறத்தாழ ஒரு பிரிகேட் இராணுவத்தினரே நிலைகொண்டுள்ளனராம். ஒரு பிரிகேட் என்பது 4 பட்டாலியன்களைக் கொண்டது. சிறீலங்கா இராணுவத்தின் ஒவ்வொரு பட்டாலியனும் ஏறத்தாழ 800 பேர்களைக் கொண்டுள்ள நிலையில் 3200 பேர் வரையிலேயே மன்னார் – வவுனியா வீதியினைப் பராமரிப்பதற்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளனராம். இதனால் இவ் வீதிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் விரைவில் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்ற அச்சமும் எழுப்பப்படுகிறது. இத்தகைய நிலையில் சந்திரிகா அரசால் இனி மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் – 'ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் இருக்கும்' எனும் நியூட்டனின் விதியினை நினைவுபடுத்தவே செய்யும்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'எடிபல' இராணுவ நடவடிக்கை:

## விடுதலைப் புலிகளுக்கு இன்னுமொரு ஆயுதக் களஞ்சியம்


இலங்கைத்தீவு, சுதந்திரமடைந்து 49 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்படும் சிறீலங்காவின் 49வது சுதந்திர தினத்தை பெப்ரவரி 4ம் திகதி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், சிறீலங்கா ஆட்சியாளர்களும் மக்களும் கொண்டாடிக் கொண்டிருந்தவேளை, தமிழீழத்தின் ஒரு பகுதியில் யுத்தமேகங்கள் சூழ்ந்துகொண்டன.

இனமத அரசியல் பாகுபாடுகளை மறந்து ஐக்கியமும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த இலங்கையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்வரும் ஆண்டில் எமது சக்திகள் அனைத்தையும் பயன்படுத்துவதற்கு உறுதிபூணுவோமாக என்று சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா உறுதிமொழிந்த கையுடன், வவுனியாவில் இருந்து சிங்களப் பெரும்படை தமிழரின் பூமியை கீறிக்கிழித்தபடி மன்னார் திசைநோக்கி முன்னேறியது.

வழமைபோல வான்படையின் வெறித்தனமான தாக்குதல் வழியேற்படுத்திக்கொடுக்க, தமிழரின் நிலங்களை விரைவாக ஆக்கிரமிப்பதற்கென்றே, அமெரிக்காவிலிருந்து புதிதாகத் தருவிக்கப்பட்ட வேகம்கூடிய நவீனரக டாங்கிகள், தமிழரின் பூமியை நசித்துச் சிதைத்தபடி ராட்சதத் திமிருடன் முன்னேறியது.

சிறீலங்கா தனது சுதந்திரத்தை பகட்டும் படாடோபமுமாகக் கொண்டாடியவேளை, தமிழன் கட்டிய துணியுடன், வீடுவாசல்களை விட்டு, சொத்துக்களைவிட்டு ஓடிக்கொண்டிருந்தான். பெப்ரவரி 4ம் திகதி சிறீலங்கா தனது சுதந்திரதினத்தை தலைநகரில் கொண்டாடிக்கொண்டிருந்த அதேவேளை, வவுனியாவில் இருந்து 'எடிபல' என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்மூலம், தமிழர்கள், தம்மால் ஆளப்படும் விடுதலையடையா இனம் என்பதை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குறியீடாக உணர்த்தினார்.




### பலன் என்ன?

இந்த 'எடிபல' இராணுவ நடவடிக்கை, சிறீலங்கா இராணுவத்திற்கு என்ன பலனை தந்தது? இந்த நடவடிக்கையின் இலக்குதான் என்ன? இதற்கூடாக எதனைச் சாதித்துவிட்டார்கள்? இந்தக் கேள்விகளுக்கு பதில் தருவார் இல்லை. மன்னாருக்கான தரைவழிப் பாதையைத் திறந்தாகிவிட்டது என, சிறீலங்கா தரப்பில் தற்போது ஒப்புக்காகத் தெரிவிக்கப்படுகின்றபோதும், நடவடிக்கையின் இலக்கு அதுதானா? அதுதான் இலக்காயின் அதனைத் தக்கவைத்துக்கொள்வது இயலக்கூடிய காரியமா?

**சுப்பு**

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, அவர்கள் மிகச் சிக்கலான பகுதிகளில் கூட, நுணுக்கமாக திட்டமிட்டு, சிறப்பாக வெற்றிகரமாகத் தாக்குதல் நடாத்தும் வலுவையும் வல்லமையையும் கொண்டவர்கள். அதனை பலமுறை நிரூபித்துக்காட்டியுமுள்ளனர். வவுனியா – மன்னார் வீதியில், போடப்படும் இராணுவ வேலியைச் சிதைப்பதென்பது, அவர்களைப் பொறுத்தவரை சிரமமானதாக இருக்கப்போவதில்லை. சிறீலங்காப் படை எதிர்காலத்தில் இத் தாக்குதல்களைச் சந்திக்கவேண்டி வரும் என்பதில் சந்தேகமில்லை.

இவற்றை சிறீலங்கா அரசோ அல்லது படையினரோ அறியாமல் இல்லை. அப்படியிருந்தும் இந்த நடவடிக்கைக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கான தேவை என்ன என்பது பல விதமாக பார்க்கப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கைக் கூடாக, பத்தொன்பதாயிரம் அளவிலான மக்களை சந்திரிகா அரசு இருப்பிடமற்றவர்கள் ஆக்கியுள்ளது. பல ஆயிரம் ஏக்கர் வேளாண்மை நிலத்தை அரசு பாழ்படுத்தியுள்ளது. வீடுகள் விளைநிலங்கள் எரித்துச் சிதைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றிலும் மேலாய், அகதிகளாய் ஓடி ஓடி படகேறி உயிர் காக்கப்புறப்பட்ட தமிழர்கள் 130 பேர் பாக்குநீரிணையில் பரிதாபச்சாவடைய இந்த நடவடிக்கை காரணமாகியுள்ளது.

இந்த நடவடிக்கை ஓய்ந்துள்ள போதும், இன்னும் துயர் வடியாமல் பசியாலும் பட்டினியாலும், நோய் நொடியில் இருப்பிடம் இழந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

சிறீலங்காவின் சுதந்திர தினத்தில், அதன் ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்துவைத்த புதுயுகத்தின் ஆரம்பம் இதுதான்.

### நோக்கங்கள் பல

இந்த நடவடிக்கை திட்டமிடப்பட்டது முன்னராக இருந்தாலும், அவர்களது கணக்கின்படி, உள்ளூராட்சித் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டதன் பின் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. இந்நடவடிக்கையை, 'இது தேர்தல் இராணுவ நகர்வு' என சிங்களப் பத்திரிகைகளே குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினோம், கிளிநொச்சியைக் கைப்பற்றினோம், தற்போது மன்னார் பாதையைத் திறந்துவிட்டோம் என கூச்சலிட்டபடி அரசு வாக்குவேட்டையில் இறங்கப் போகிறது என 'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகை சுட்டிக் காட்டியதை நிரூபிக்கும் வகையில் சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையின் 'எடிபல' இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்றதன் போதான பத்திரிகையாளர் மாநாட்டுப் பேச்சு அமைந்துள்ளது.

இன்னொரு விதமாகவும், இந்நடவடிக்கையின் பயனை அறுவடை செய்ய அரசு திட்டமிட்டிருந்தது. மன்னாரில் இருந்து வெளியேறி புத்தளம் நீர்கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்களை மீளக் குடியமர்த்தும் திட்டமும் இதற்குள்ளே அடங்கியிருக்கின்றது. புத்தளம் நீர்கொழும்புப் பகுதிகளில் குடியேறியுள்ள முஸ்லீம் மக்கள், அங்குள்ள சிங்கள மக்களைவிட முன்னேறிவருகிறார்கள் எனவும், அங்கு சிங்கள மக்கள் பின்தள்ளப்படுகின்றனர் என்ற பார்வையும் நிலவிவருகின்றது. அதனைத் தவிர்க்க முஸ்லீம் மக்களை அங்கிருந்து வெளியேற்றவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்றாக, தரைப்பாதை ஒன்றைத் திறப்பதின் ஊடாக முஸ்லீம் மக்களை, கொண்டுபோய் மன்னாரில் குடியேற்றும் திட்டமும் உள்ளது.

> **பெப்ரவரி 4ம் திகதி சிறீலங்கா தனது சுதந்திரதினத்தை தலைநகரில் கொண்டாடிக்கொண்டிருந்த வேளை, வவுனியாவில் இருந்து 'எடிபல' என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம், தமிழர்கள், தம்மால் ஆளப்படும் விடுதலையடையா இனம் என்பதை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குறியீடாக உணர்த்தினார்.**

எல்லாவற்றிற்கும் மேலாக, சிங்கள இராணுவத்தினதும், அரசினதும் பிரதான கனவாக இருக்கும் வவுனியா, கிளிநொச்சி தரைப்பாதை திறப்பிற்கான முன்னோடி நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. வழமையான அவர்களின் இராணுவ சூழ்ச்சிப்பொறியாக இந்த நடவடிக்கை விரிக்கப்பட்டது. இப்பெரும் படைநகர்வை எதிர்கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஆட்பலத்தையும், ஆயுதபலத்தையும் இழப்பர் என்பதும், காயமடையும் பல ஆயிரக்கணக்கான புலிகளுக்கு மருத்துவ வசதியின்மையால், புலிகளின் பெரும் ஆட்பலம் முடக்கப்படுவதுடன், சோர்வு நிலை தோற்றுவிக்கப்படும் என்றும் சிங்களத் தலைமை கருதியது.

அதனைப் பாவித்து, பெருமெடுப்பிலான உக்கிரமான தாக்குதலை நடாத்தி அவர்களது பிரதான கனவான வவுனியா, கிளிநொச்சிப் பாதையைத் திறப்பது. இதுவே அவர்களது பிரதான நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

### நடந்தது என்ன?

ஆனால் விடுதலைப் புலிகள், இது குறித்து அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. தமது பிரதான திட்டத்திற்கு அவர்கள் வடிவம் கொடுத்துக்கொண்டிருப்பார்கள் எனறே கருதலாம். தேவையற்றதாகக் கருதும் மோதல்களில் ஈடுபட்டு பலம் இழப்பதை விடுத்து, தேவையான சமர்களில் ஈடுபட்டு பலம் சேர்ப்பதே விடுதலைப் புலிகளின் பாணி. சிங்களப்படையின் 'எடிபல' இராணுவ நகர்விற்கு விடுதலைப் புலிகள் முகம் கொடுக்கவில்லை என்ற போதும், ஆக்ரோசமான இராணுவ நகர்வு ஓய்ந்து அவர்கள் உட்காருகிறபோதுதான் விடுதலைப் புலிகள் தமது ஆக்ரோசமான தாக்குதலை நடத்துவது வழக்கம். எதிர்காலத்தில் அவற்றை நாம் எதிர்பார்க்கலாம்.

பல கிலோமீற்றர்கள் நீளமான பாதையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது, இராணுவத்திற்கு தற்போதுள்ள ஆட்பற்றாக் குறையில் பெரும் சுமையாகவே இருக்கப்போகின்றது. இது அவர்களின் எதிர்கால இராணுவ நடவடிக்கையை பெருமளவில் பாதிக்கப்போவதும் தெளிவு. இந்த இராணுவ வேலியை தக்கவைத்துக்கொள்ள பெரும் ஆட்பலத்துடன் ஆயுதபலம் தேவை. அடர்காட்டை ஊடறுத்துச் செல்லும் இந்த இராணுவ வேலி, விடுதலைப் புலிகளின் புயலையொத்த தாக்குதலுக்கு ஈடுகொடுக்குமா?

ஒன்று மாத்திரம் உண்மை, இந்த 'எடிபல' இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளுக்கு இன்னுமொரு ஆயுதக்களஞ்சியத்தை திறந்துவைத்திருக்கிறது.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# 'சத்ஜய'வும் 'ரிவிரச'வும் ஓயாத அலைகளும் தவளையும்

மூன்று கட்டங்களாக சிங்கள அரசு நடாத்திய 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் விளைவாக – கிளிநொச்சி நகர் உள்ளிட்ட 60 ச. கிலோ மீற்றர் நிலத்தில், சிங்களப் படைகள் நிலைகொண்டுள்ளன.

அத்துடன், படையினர் கைப்பறிய நிலப்பகுதியைச் சூழவுள்ள, மேலும் 100 ச. கிலோ மீற்றர் நிலப்பரப்பு, மக்கள் வாழாத வாழ்வதற்கு அஞ்சும் – பகுதிகளாக மாறிவிட்டன.

மொத்தத்தில், குடிசன அடர்த்தியையும் விளைநில வளங்களையும் உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்டத்தின் 150 ச.கிலோ மீற்றர் நிலத்தை, 'சத்ஜய' ஆக்கிரமித்துள்ளது.

இந்த நிலப்பரப்பில் இருந்து, சுமார் 1 1/2 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் கணிசமானோர் யாழ் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வந்து – வதிவிடங்களை அமைத்து வாழ்ந்த மக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுத் தளத்தின் (முன்னைய) முன்னணிக் காவலரண்கள் அமைந்திருந்த உப்பளம் மற்றும் தட்டுவன்கொட்டிப் பகுதிகளில் 26.07.96 அன்று ஆரம்பித்த 'சச்ஜய–1' சண்டை முனையிலிருந்து – இப்போது 'சத்ஜய' படையினர் நிலைகொண்டுள்ள (கிளிநொச்சி) டிப்போச் சந்திவரையான தூரம், 12 கி.மீ. நீளம் ஆகும்; இதன் அகலம் 3 1/2 கிலோ மீற்றர்.

'சத்ஜய' சமர் ஆரம்பிக்கும் முன்னரே, பரந்தன் சந்திவரையான நிலப்பகுதி, மக்கள் வாழாத பகுதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1279 ச.கிலோ மீற்றர் பரப்பளவை உடைய கிளிநொச்சி மாவட்டத்திலேயே, ஆனையிறவுப் படைத்தளம் அமைந்திருக்கின்றது..

கிளிநொச்சி நகர்ப் பகுதியையும் கைப்பற்றி ஆனையிறவுடன் இணைத்ததன் மூலம் இப்போது, இம்மாவட்டத்தின் மேலும் 60 ச.கிலோ மீற்றர் நிலப்பரப்பு, படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் வீழ்ந்துவிட்டது.

'சத்ஜய' சமரில் 269 படையினர் பலியாகினர் 311 பேர் காயமடைந்தனர்" என அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

"கிளிநொச்சி சண்டையில் காயமடைந்த படையினருக்குச் சிகிச்சை செய்ய இரத்ததானம் செய்யுங்கள்" என, சிங்கள மக்களிடம், சிறீலங்கா ஜனாதிபதி அவசர வேண்டுகோள் விடுத்திருந்தார். அத்துடன், "வழமையான சத்திரசிகிச்சைகளை தற்காலிகமாக நிறுத்திவிட்டு படையினருக்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிகிச்சை அளிப்பதாக' கொழும்பு பிரதான வைத்தியசாலை நிருவாகம் அறிவித்தமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அரசு சொல்லியிருப்பது போல 311 படையினருக்குச் சிகிச்சை அளிக்க இத்தனை தடபுடல்களும் தேவையா?

சிங்கள தேசத்தின் தலைமையும் அதன் பிரதான வைத்தியசாலையின் நிர்வாகமும் நெருக்கடியைச் சந்திக்கும் அளவுக்கு, 'சத்ஜய' சமரில், பெருந் தொகைப் படையினர் காயப்பட்டு விட்டனர் என்பதே உண்மையாகும்.

"இழப்புக்களை அரசு அரைப்பங்காகக் குறைத்து வெளியிட்டுள்ளது" என, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டியுள்ளதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது.

மூன்று கட்டங்களாக நடந்த 'சத்ஜய' சமரில், சுமார் 700 படையினர் கொல்லப்பட்டுவிட்டனர்; ஏறக்குறைய 2500 படையினர் காயமடைந்துவிட்டனர் என்பதே உண்மையாகும்.

இரண்டு 'பிரிகேட்'டுக்கள் 'சத்ஜய' சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, முன்னர் அரசு கூறியிருந்தது. ஆயினும், பின்னர் மேலும் ஒரு 'பிரிகேட்' சண்டைக்கு அனுப்பப்பட்டதாக அரசு அறிவித்திருந்தது. காயம்பட்டு அல்லது கொல்லப்பட்டதால் களத்திலிருந்து அகற்றப்பட்ட படையினருக்குப் பதிலாகவே, புதிய 'பிரிகேட்' சமர்முனைக்கு அனுப்பப்பட்டது என்ற கள யதார்த்தத்தை, எவரும் மறுக்க முடியாது. ஒரு 'பிரிகேட்' என்பது சிங்கள இராணுவ நடைமுறையில் 4500 இலிருந்து 5000 ஆட்தொகையைக் கொண்டதாகும்.

இதேவேளை, மூன்று கட்ட 'சத்ஜய' சண்டைகளிலும் 254 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

'சத்ஜய' சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்த வரையில், நிலத்தைக் கைப்பற்றிய விடயத்தில் சிங்களப் படை வெற்றியைப் பெற்றுள்ளது. ஆனால், இதற்காக அரச படைகள் செலுத்திய விலையைக் கருத்தில் எடுத்தால், அதை, புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும். 700 படயினரை இழந்து 2500 படையினர் காயப்பட்டதுடன், பாரிய தொகைப் படைக்கல சக்தியையும் (குண்டு + எறிகணைகள்) அரசுப் படைகள் செலவிட்டுள்ளன.


இந்த வகையில், 'சத்ஜய' சமரின் போது சிங்களப் படைகள் கொடுத்த உயிர் விலைக்கும் செலவிட்ட படைக் கலங்களுக்கும் இணையாக புலிகள் தரப்பில் இழப்புக்களை ஏற்படுத்த, அரசுப் படைகளால் முடியவில்லை. "புலிகள் தரப்பில் 1000 பேரைக் கொன்று 3000 பேரைக் காயப்படுத்தியதாக" அரசு பிரச்சாரம் செய்தது. 'சத்ஜய' சமருக்காக சிங்களப் படைகள் செலுத்திய விலைக்கு இணையாக, புலிகள் தரப்பில் எவ்வளவு ஆள் இழப்பு இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற சிங்களத் தளபதிகளின் கணிப்பே, 1000–உம், 3000–உம் என்ற சிங்கள அரசின் பிரச்சாரமாகும்.

குறைந்த எண்ணிக்கையான இழப்புடன் கூடிய எண்ணிக்கையான இழப்பை படையினருக்கு வழங்கிய செயலை, 'சத்ஜய' சமரில் புலிகள் பெற்ற ஒரு இராணுவ வெற்றியாகக் கொள்ளமுடியும்.

இதேவேளை, மக்கள் நெருக்கமாக வாழ்ந்த கிளிநொச்சியின் 60 ச.கிலோ மீற்றர் நிலத்தை சிங்களப் படை கைப்பற்றியதால், அங்கு வாழ்ந்த மக்கள் பெருந்துன்பத்தைச் சந்தித்துள்ளனர்; இவர்களது அன்றாட வாழ்க்கை பேரிடருக்குள்ளாகியுள்ளது. எனினும், பரந்த வன்னிப் பெருநிலத்தில் 60 ச.கிலோ மீற்றர் நிலத்தைச் சிங்களப்படை தனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்த செயல் புலிகள் இயக்கத்திற்கு எந்த ஒரு இராணுவப் பின்னடைவையோ அல்லது அரசியல் நெருக்கடியையோ வழங்கவில்லை.

'சத்ஜய' சமரின் இராணுவ நோக்கங்களில் ஒன்று, புலிகளைச் சமருக்கு இழுத்து – இயன்றவரை அழிப்பது என்று அரசு கூறியிருந்தது. அத்துடன் கிளிநொச்சியைப் பிடிப்பதன் மூலம் புலிகளின் பின்தளமான வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளுக்கு ஒரு இராணுவ அச்சுறுத்தலைக் கொடுப்பதுடன், அங்கே தனது இராணுவ மேல்நிலையைக் காட்டுவது என்பதும் 'சத்ஜய'வின் இன்னொரு இராணுவ நோக்கமாகும்.

**'சத்ஜய' சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்த வரையில், நிலத்தைக் கைப்பற்றிய விடயத்தில் சிங்களப் படை வெற்றியைப் பெற்றுள்ளது. ஆனால், இதற்காக அரச படைகள் செலுத்திய விலையைக் கருத்தில் எடுத்தால், அதை, புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும்.**






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இதில் முதலாவது இராணுவ நோக்கம் ஈடேறவில்லை. கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதும் அதன் இரண்டாவது இராணுவ நோக்கம் நிறைவேறி விடும் என்று முரசறைந்திருப்பது முட்டாள்தனமாகும்.

'சத்ஜய'வின் அரசியல் நோக்கங்களில் ஒன்று, முல்லைத்தீவு தோல்வியை கிளிநொச்சியைக் கைப்பற்றி ஈடுகட்டுவது; அடுத்து, புலிகளின் தற்போதைய நிர்வாக மையமான கிளிநொச்சியைக் கைப்பற்றிப் புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது.

முதலாவது அரசியல் நோக்கம் – சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை – ஈடேறி இருக்கலாம்; ஆனால், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு இது, எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது. நிர்வாக அலகுகள் இயங்கிய கட்டடங்களை அல்லது இடங்களைக் கைப்பற்றுவது என்பது, புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கைப்பற்றுவது என்றோ அல்லது அதை அழித்தொழிப்பது என்றோ அர்த்தமாகாது.



அத்துடன், பூகோள ரீதியில் காட்டையும் காடுசார்ந்த இடங்களையும் பிரத்தியேக இயல்பாகக் கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பை, புலிகள் இயக்கம் தனது பின்தளமாக மாற்றிக் கொண்டுவிட்ட இன்றைய சூழலில், புலிகளைக் காட்டிற்குள் அனுப்புவது என்ற அரசின் பிரச்சாரம் அல்லது அரசியல் நோக்கம் நகைப்பிற்கு இடமாக உள்ளது அல்லவா!

60 ச.கிலோ மீற்றர் பரப்பளவை படையினர் புதிதாகக் கைப்பற்றிவிட்டனர் என்பது, தமிழினத்திற்கு கவலை தரும் விடயமாகும். ஆனால், இந்த நிலப்பரப்புக்குப் பதிலாக 30 ச.கிலோ மீற்றர் நிலப்பரப்பை விழுங்கி வைத்திருந்த பூநகரித் தளத்தை அகற்றவேண்டிய தேவை அரசிற்கு எழுந்துவிட்டதை, நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

புதிதாக ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றி வைத்திருக்க வேண்டுமாயின், பழைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிலவற்றைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் அரசுப் படைக்கு இன்றும் இருக்கின்றது; இனியும் இருக்கும் என்பதே இராணுவ யதார்த்தம் ஆகும். குடாநாட்டைக் கைப்பற்றிவைத்திருக்க கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியைக் கைவிட வேண்டியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

"வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இராணுவத்தினருக்கு நான் எங்கே செல்வது....? கிழக்கில் இருந்து துருப்புக்களை எடுக்க நான் தயங்கமாட்டேன்" என்று, அண்மையில் ரத்வத்த குரலெழுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அழித்ததன் மூலம் புலிகள் இயக்கம் பெற்ற இராணுவ வெற்றி, கிளிநொச்சியை இழந்ததால் அர்த்தமற்றுப் போய் விட்டதல்லவா எனச் சிலர் கேள்வி எழுப்பக்கூடும்.

முல்லைத் தளம் மீதான தாக்குதலையும் 'சத்ஜய' சமரையும் ஒரே இராணுவத் தராசில் வைத்து எடைபோட்டுத் தீர்ப்புக்கூற முனைவது, ஒரு இராணுவத் தவறு ஆகும்.

முல்லைத் தளம் மீதான தாக்குதலின் இராணுவப் பரிமாணம் வேறு; 'சத்ஜய' சமரின் இராணுவப் பரிமாணம் வேறு.

முல்லைத்தீவுத் தாக்குதல், கெரில்லாப் போர் உபாயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாரிய திடீர்த் தாக்குதல்.

இத் திடீர்த் தாக்குதலை புலிகள் இயக்கமே நடாத்தியது.

தாக்குதல் திட்டம் தீட்டி – இரகசியமான முறையில் படைபலத்தை ஒருங்கு திரட்டி – திட்டத்திற்கேற்ப பயிற்சி அளித்து – தாக்குதலுக்கான நாள், நேரம் குறித்து – சிங்களப்படை நிலைமீது நடாத்தப்பட்ட ஒரு வலிந்த தாக்குதலே (Offence) முல்லைத் தளம் மீதான தாக்குதல் ஆகும்.

ஆனால், 'சத்ஜய' சமர் அப்படியானதல்ல.

இச்சமருக்கான போர்த்திட்டத்தை சிங்களத் தளபதிகள் வரைந்தனர். படையினருக்குப் பயிற்சி கொடுத்தனர். தாக்குதலுக்கான நாளும், நேரமும் நகரும் திசையும் குறித்தனர். இவ்விதம் தமிழர் படையின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த ஒரு பகுதி மீது, மரபு வழிப் போர்முறையில் படையினர் நடாத்திய ஒரு வலிந்த தாக்குதலே 'சத்ஜய' சமர் ஆகும்.

புலிகள் இயக்கத்திடமிருந்த மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும், பலத்தையும் அடிப்படையாக வைத்து, முல்லைத்தளம் மீதான தாக்குதலைத் தலைவர் பிரபாகரன் திட்டமிட்டு நடாத்தியிருந்தார். இத்தாக்குதல் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் புலிகள் வென்றுவிட்டனர்.

'சத்ஜய' ஒரு மரபுவழிச் சமர். ஆட்தொகையும், ஆயுத பலமும், படைக்கல சக்தி வளமும் இந்தவகைப் போர் முறையின் முதுகெலும்பு. சிங்களப் படையின் முதுகெலும்பு சற்றுப் பலமானது. இந்தப் பலத்தை அடித்தளமாக வைத்து, 'சத்ஜய' சமரை ரத்வத்த திட்டமிட்டார். கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதுடன் புலிகளுக்குப் பாரிய ஆள் இழப்பை உண்டுபண்ண வேண்டும் என்பதும், ரத்வத்தவின் பிரதான இலக்குகளாக இருந்தன. இதில் ஒன்று ஈடேறியுள்ளது; மற்றையது நடைபெறவில்லை. 'சத்ஜய' சமரில் ரத்வத்தவுக்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாதி வெற்றிதான்.

'சத்ஜய' சமரை இராணுவ ரீதியில் ஒப்பிட விரும்புவோர், 'ரிவிரச' சமருடன் இதை இணைத்துப் பார்க்கலாம்.

அதுபோல முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலை இராணுவ ரீதியில் ஒப்பிட விரும்புவோர் அதை, பூநகரித் தளம் மீதான தாக்குதலுடன் ஒப்பிட்டு அவற்றின் இராணுவ பரிமாணங்களை ஆய்வுசெய்து பார்க்கலாம்.

அதாவது, ஒரு மரபுவழிச் சமரை அதே இராணுவ பரிமாணத்தை உடைய இன்னொரு மரபுவழிச் சமருடனேயே ஒப்பீடு செய்து பார்க்க வேண்டும். அதுபோல, இராணுவத் தளம் மீதான ஒரு பெருந் தாக்குதலை, இன்னொரு தளம் மீதான பெருந் தாக்குதலுடன் ஒப்பிட்டு இராணுவ மதிப்பாய்வுகளைச் செய்வதே இராணுவ ரீதியில் சரியானதாகும்.

'ரிவிரச'வைப் போலவே 'சத்ஜய'வும் மூன்று கட்டங்களாக நடாத்தப் பட்டுள்ளது. 'சத்ஜய'வின் இரண்டாம் மூன்றாம் கட்டங்கள் தீவிர சண்டைகளைக் கொண்டிருந்தன. அதுபோல, 'ரிவிரச'வின் முதலாம் கட்டமான வலிகாமச் சமரை மட்டும், புலிகள் எதிர்கொண்டிருந்தனர்.

"ரிவிரசவின் வெற்றிக்குப் பிரதான காரணமாக 'ஆட்டிலறி'ப் பலத்தையே நான் கொள்வேன்" என, முன்னாள் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கூறியிருந்தார். 'ரிவிரச'வில் மட்டுமல்ல, 'சத்ஜய'விலும் எறிகணை – குண்டுப் பிரயோகம் பிரமாண்டமான அளவில் பயன்படுத்தப்பட்டது.

'ரிவிரச –1' அதாவது வலிகாமச் சமர், 50 நாட்கள் நடந்தது. அந்த ஐம்பது நாள் சமரில், தொண்ணூறாயிரம் (90,000) எறிகணைகளை அரசுப் படைகள், பயன்படுத்தியிருந்தன என, சிறீலங்காச் செய்திகள் தெரிவித்துள்ளன.

எனவே, நாளொன்றுக்கு 1800 எறிகணைகள் என்ற வீதத்தில், புலிகள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வலிகாமச் சமரில் 494 புலி வீரர்கள் வீரச்சாவடைந்தனர்; படையினர் தரப்பில் 750 பேர் வரையில் பலியாகியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க,

'சத்ஜய' சமரின் இரண்டாம் கட்டமும் மூன்றாம் கட்டமும் தீவிர சண்டைகளைக் கொண்டமைந்திருந்தன.

04.08.96 அன்று தொடங்கிய 'சத்ஜய–2' நான்கு நாட்கள் தீவிரமாக



நடந்தது.

22.09.96 அன்று தொடங்கிய 'சத்ஜய–3' பத்து நாட்கள் தீவிரமாக நடந்தது.

26.07.96 அன்று தொடங்கிய 'சத்ஜய–1' ஒருநாள் மட்டுமே தீவிரமாக நடந்தது.

மொத்தத்தில் 'சத்ஜய' சமர் 15 நாட்கள் தீவிரமான முறையில் நடந்தது என

> "வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இராணுவத்தினருக்கு நான் எங்கே செல்வது....? கிழக்கில் இருந்து துருப்புக்களை எடுக்க நான் தயங்கமாட்டேன்" என்று, அண்மையில் ரத்வத்த குரலெழுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

லாம். இந்தப் 15 நாள் சமரில் மட்டும் சுமார் 50,000 (ஐம்பதாயிரம்) எறிகணைகளை அரசுப் படைகள் பயன்படுத்தின எனக் கணிப்பிடக்கூடியதாக உள்ளது.

அதாவது, நாளொன்றிற்கு மூவாயிரம் (3,000) எறிகணைகள் வீதத்தில் புலிவீரர்கள் மீது ஏவப்பட்டுள்ளன. ('ரிவிரச'வில் நாளொன்றுக்கு 1800)

இது ஒரு கற்பனைக் கணக்கு என்று எவரும் கருதிவிடக்கூடாது. உதாரணத்திற்கு 26.09.96 அன்று அதிகாலை நடந்த சண்டையின் தன்மை பற்றி இங்கு பார்ப்போம்.

தியாகி திலீபனின் நினைவுநாளான அன்று, உருத்திரபுரத்தில் நிலைகொண்டிருந்த படையினர் மீது புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தி, 200 இற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றனர் என்பது முன்னர் வெளிவந்த செய்தி.

புலிகளின் அந்த அதிரடித் தாக்குதல், அதிகாலை 5.30 இலிருந்து 8.30 வரை மூன்று மணிநேரம் நடைபெற்றது. புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்காக அந்த வேளையில் படையினர் எறிகணைகளை அள்ளி விதைத்தனர். செக்கனுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட எறிகணைகள் என்ற வீதத்தில், அந்த மூன்று மணிநேரமும் எறிகணை வீச்சு இடம்பெற்றிருந்தது. அந்த மூன்று மணி நேரத்தில் மட்டும், அரசுப் படைகள் 10,000 (பத்தாயிரம்) எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பர் என்று கணிக்க முடியும். மேலும், சண்டை தீவிரமாக நடைபெறாத மிகுதி 55 நாட்களும் – தற்பாதுகாப்புக்காக எதிரி பல்லாயிரம் எறிகணைகளைப் பயன்படுத்தியிருப்பான். (இந்த எறிகணைகள் இந்த ஆய்வில் கையாளப்படவில்லை).

இவை ஒருபுறமிருக்க,

'ரிவிரச'வில் சிங்கள வான்படை வீசிய குண்டுகளை விட பல பத்து



www.tamileelamarchive.com

மடங்குகளை அவை, 'சத்ஜய' சமரில் வீசியுள்ளன. 'கிபீர்' உந்துவிசைப் போர் விமானங்களின் முழுவீச்சான குண்டு வீச்சுத் தாக்குதலை, கிளிநொச்சிச் சமர்முனை அனுபவித்தது.

ஆடி 26ம் திகதி 'சத்ஜய-1' இல் இருந்து 'சத்ஜய-3' ஓய்வுக்கு வந்த ஐப்பசி 2ம் நாள் வரையான சுமார் 65 நாட்கள், கிளிநொச்சியும் அதன் சுற்று வட்டாரமும் 'இரும்புக் கழுகுகளின்' எச்சம்பட்டு அதிர்ந்தபடியிருந்தன!

சண்டை தீவிரமாக நடந்த 15 நாட்களும், நாளொன்றிற்கு நான்கு தடவைகள் என்ற வீதத்தில் பறந்து வந்த 'கிபீர்' விமானங்கள் குண்டு வீசிச் சென்றன. ஒரு தடவையின் போது, இரண்டு 'கிபீர்' விமானங்கள் வந்து குண்டு வீசுவது வழமை. இந்த வகையில், 120 குண்டு வீச்சுப் பறப்புக்களை அந்தப் 15 நாட்களிலும் 'கிபீர்' விமானங்கள் செய்துமுடித்துள்ளன.

இதைவிட மற்றைய நாட்களில் நாளொன்றிற்கு இரண்டு தடவைகள் என்ற வீதத்தில் 'கிபீர்' விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. 'சத்ஜய'வின் இந்த 70 நாட்களில், சுமார் 10 அல்லது 15 நாட்கள் மட்டுமே குண்டுவீச்சு நடைபெறாத நாட்களாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, மிகுதி நாட்களில் 'கிபீர்' விமானங்கள் சுமார் 100 குண்டுவீச்சுப் பறப்புக்களை நடாத்தி உள்ளன எனக் கணிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் 'சத்ஜய'வின் 65 நாட்களில் சுமார் 220 குண்டுவீச்சுப் பறப்புக்களை 'கிபீர்', புக்காரா விமானங்கள் செய்துள்ளன.

ஒரு 'கிபீர்' அல்லது 'புக்காரா' விமானம் ஒரு பறப்பின் போது, 1500 கிலோ நிறைகொண்ட குண்டுகளை எடுத்துச்சென்று வீசவல்லது. அவை 500 கிலோ கொண்ட மூன்று குண்டுகளாக அல்லது 250 கிலோ கொண்ட ஆறு அல்லது 125 கிலோ கொண்ட பன்னிரண்டாக இருக்கும்.

அப்படியாயின், 220 பறப்புக்களின் போதும் மொத்தம் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் கிலோ எடைகொண்ட குண்டுகளை அவை வீசிமுடித்தன. இது ஏறக்குறைய 325 தொன்கள் ஆகும்.

இதேவேளை, 'சத்ஜய'வில் பயன்படுத்தப்பட்ட 50,000 எறிகணைகளின் எடையைப் பருமட்டாக மதிப்பிட்டால், அது ஏறக்குறைய 500 தொன் நிறையுடையது என்ற முடிவிற்கு வர முடிகின்றது.

எனவே, இந்த 825 (500 + 325) தொன் வெடிபொருளை கிளிநொச்சிச் சமர் முனையில் எதிரிப்படை பயன்படுத்தியும் கூட, புலிகளின் தரப்பில் 254 போராளிகளைக் கொல்ல மட்டும் தான் முடிந்தது. 'சத்ஜய' சமரில் புலி வீரர்களுக்குக் கிடைத்த ஒரு அற்புதமான இராணுவ வெற்றியாக இதைக் கருதுவது தவறா?!

மேலும், எறிகணை மழையையும் – வெடிமருந்துப் புயலையும் ஏவிவிட்டவர்களின் தரப்பில் 700 பேரைக் கொன்று 2500 பேரைக் காயப்படுத்திய புலிவீரர்களின் செயல், ஆச்சரியமூட்டும் ஓர் அற்புதமாகத் தெரியவில்லையா?!

'ரிவிரச' மற்றும் 'சத்ஜய' சமர் முனைகளில் ஏற்பட்ட இருதரப்பு இழப்புக்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களின் விகிதாசார வேறுபாடு, மற்றும் படையினர் செலவிட்ட படைக்கல சக்தியின் அளவு வேறுபாடுகள் என்பவற்றைக் கருத்தில் எடுத்து இரண்டு சமர்களையும் ஆராய்ந்து பார்த்தால், மரபுவழிப் போர்முறையில், 'ரிவிரச'வை விட 'சத்ஜய'வில் 'புலிகள் இயக்கம்' தனது போரிடும் திறனில் வளர்ச்சியைக் காட்டியுள்ளது எனலாம்.

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கும் பல்வேறு இராணுவ அம்சங்களில் மேற்குறித்த அம்சமும் ஒன்றாகும்.

ஆயினும் , நிலத்தைக் கைப்பற்றும் விடயத்தில் படையினர் பெறுகின்ற தற்காலிக வெற்றிகள், புலிகளின் பக்கமுள்ள மேற்குறித்த வெற்றிகர இராணுவ அம்சத்தை மறைத்துவிடுகின்றன என்பதே உண்மையாகும்.

*1939*–ஆம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் உலகப் போரில், இப்போது சிங்களப் படை நிலங்களைக் கைப்பற்றுவது போலத்தான் கிட்லரின் நாஜிப் படைகளும், வரிசையாக நாடுகளைப் பிடித்தன. புலிகள் இயக்கம் இப்போது தனது படைப்பலத்தைப் பாதுகாத்தபடி – குறித்த சில பகுதிகளில் இருந்து பின்வாங்குவதைப் போலத்தான், அமெரிக்கா – பிரிட்டன் உள்ளிட்ட நேச நாடுகளின் அணியும் அப்போது, சில பிராந்தியங்களை விட்டுப் பின்வாங்கித் தளங்களை நிலைப்படுத்தத் தொடங்கின.

ஆயினும். நிலங்களைக் கைப்பற்றி வைத்திருந்த நாஜிப் படைகளால் போரை வெல்லமுடியவில்லை. அது நிலங்களைக் கைப்பற்றிக் கைப்பற்றி, அதுகாரணமாக ஏற்பட்ட இராணுவத் தவறுகளினால் போரில் தோற்றது.

எதிரிப் படையானது அரசியல் – இராணுவ ரீதியில் பலவீனப்பட்டுச் சிதைவடையும் போது அதன் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே, உண்மையான இராணுவ வெற்றியாகும். குறித்த சில இராணுவ நோக்கங்களுக்காக அது தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்யும்போது அதன் நிலத்தைக் கைப்பற்றுவது என்பது, ஒரு நிரந்தர இராணுவ வெற்றியாகக் கொள்ளப்பட முடியாதது.

கிட்லரின் படைகள் படித்த அதே இராணுவப் பாடத்தைத்தான் ரத்வத்தவின் படைகளும் படிக்கப் போகின்றன என எதிர்வுகூறுவது தவறாகுமா?

★★★



## போராளியின் பேனாவிலிருந்து..

# விடிவிற்காய் எழுவோம்

இரவொன்று கரைந்துபோக
இன்னும் சில நேரம் மீதமிருக்கும்
புதுநாளின் பிறப்பிற்காய்
புள்ளினங்கள் பாட்டுப் பாடும்
ஒரு அதிகாலைப் பொழுது அது.
பனிமழையில் நனைந்தெழுந்த
பனைமரங்கள் சிலிர்த்து நிற்கும்.
பற்றைகளும் கூட – ஒரு
புத்துணர்ச்சி பெற்றிருக்கும்,
பட்டாசு வெடி போல
கிட்டவாய் சத்தம் எழும்
முன்னுக்கு பின்னுக்கு
முதுகிற்கு மேலாக – எம்
உயிரைத் தொட்டணைக்க
உலங்குவானூர்திக் குண்டு துடிக்கும்.

இன்று வரை அருகிருந்து
அம்மாவின் கதை சொன்ன
அன்பு நண்பியின்
ஆயுதம் அணைத்திருந்த
கரம் விறைத்து வீழும்,
செங்குருதி இம் மண்ணில்
புதிதாய் படம் வரையும்.

இம் மண்ணின்
இளம் புதல்வி ஒருத்தியின்
உயிர் இழந்த உடலொன்று
எம்முடன் இருக்கும்.
கனல் கக்கும் எம்விழிகள்
கலங்கி இருக்க – அவள்
கைப்பிடித்த துப்பாக்கி
கரம் மாறும்.
சட சடக்கும்.
எம் வேகம் அதிகரிக்க
பட்டாசு வெடிச் சத்தம்
தூரக் கேட்கும்.

பெற்றெடுத்த புதல்வி
பெருமகளாய்ப் போனதனால்
பூமித்தாயின் சோகநிலையாய்
மௌனம் பிறப்பெடுக்கும்
சிதைந்துபோன பனைமரமும்
சிறகொடிந்த குருவிகளும்
பற்றி எரிந்த பற்றைகளும்
எம் மண்ணின் விடுதலைக்காய்
ஏந்திய வடுக்களால்
இன்னும் நிமிர்ந்து நிற்கும்

குச்சொழுங்கைக் குறுகணிகளும்
குவிந்திருந்து குண்டுகளாய் மாற
தீர்மானம் எடுக்கும்,
குருதிச் சேற்றில்
பதியும் என் கால்கள்
குறிக்கோளை நோக்கி
விரைந்தோடும்.
நினைவுகளைத் தாங்கும்
என் விழிகள்
அடுத்த விடியலுக்காய்
காத்திருக்கும்.

-மேஜர் பாரதி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தமிழகத்தின் எழுச்சி

பாட்டாளி மக்கள் கட்சியின் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு பெப்ரவரி மாதம் 1ம் திகதி சென்னை மெரீனா கடற்கரை சீரணி அரங்கில் மிகப் பிரமாண்டமான முறையில் நடந்துமுடிந்தது.

7 மணிநேர ஊர்வலத்தைத் தொடர்ந்து, இரவு 8 மணிக்கு ஆரம்பமான மாநாடு அதிகாலை 3 மணிவரை நடைபெற்றது. ஊர்வலத்தினால் அண்ணா சாலை, பீட்டர்ஸ் சாலை, டாக்டர் பெசன்ட் சாலை, காமராஜர் சாலை பகுதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுமிருந்தும் பா.ம.கட்சித் தொண்டர்கள், கட்சிக் கொடியை ஏந்திய பஸ், வான், லாறி, ஆட்டோ, கார், ஜீப் போன்ற வாகனங்களில் வந்து பங்குபற்றினர். இவ் ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான வாகனங்கள் பங்குபற்றியுள்ளன.

டாக்டர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், டாக்டர் ராமதாஸ், சமதாகட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னான்டஸ், பா.ம.க. தலைவர் தீரன், பஞ்சாப் மனித உரிமைக் குழு தலைவர் ஒய்வுபெற்ற நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ், கோ.மு.வீரபத்திரன் (தென் ஆபிரிக்கா), பா.ம.க. பொதுச்செயலாளர் தலித் எழில்மலை, பா.ம.க. எம்.எல்.ஏ. கணேசன், சுவிட்சர்லாந்து தமிழீழ அமைப்பின் இணைச்செயலாளர் மதலீன் மைக்கேல், சத்திகமலாம்பாள், சிவகாமி வின்சன்ட், பு.தா.அருள்மொழி உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.



www.tamileelamarchive.com

"ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டைப் பா.ம.க. நடத்தியதில் முதல்வர் கருணாநிதிக்குச் சங்கடம் இருந்தால், என்னைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யட்டும்" என பா.ம.க.வின் நிறுவனர் டாக்டர் ச.ராமதாஸ் கூறினார்.

'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் கருணாநிதி தீர்வு காண்பார் என உலகில் உள்ள 8 கோடி தமிழர்களும் நினைக்கிறார்கள். ஆனால், மத்திய அரசின் நிலைதான் எங்களுடைய நிலை என அவர் கூறுவதைக் கேட்கவே வேதனையாக உள்ளது. ஈழத்திலுள்ள தமிழர்களை அழிப்பதுதான் மத்திய அரசின் கொள்கை. அதுதான் கருணாநிதியின் கொள்கையா?'



சங்கடம் இருந்தால், முதல்வர் கைது செய்யட்டும்
- டாக்டர் ராமதாஸ்

விடுதலைப் புலிகள் பிரச்சினையைக் காரணம் காட்டி, ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்களோ என தயவு செய்து அவர் அஞ்ச வேண்டாம். அப்பேரணியை – மாநாட்டைக் கருணாநிதி மறைமுகமாக ஆதரிக்கிறார் என யாராவது எழுதலாம். – பேசலாம். அது அவருக்குச் சங்கடமாக இருந்தால், பாதுகாப்புச் சட்டத்தில் எங்களைக் கைது செய்யட்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தமிழகத்தில் சலனம் இல்லையே என வெளிநாடுகளில் கேட்டனர். நீறுபூத்த நெருப்பாக அது உள்ளது என்றேன் நான். இப்போது அதை ஊதி இருக்கிறேன். கனன்று கொண்டிருக்கும் அதைப் பெரும் தியாக்க வேண்டியது தமிழ் உணர்வு படைத்த அனைவரதும் கடமை.

கனடா, லண்டன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குப் போய் பணம் வாங்கி வந்து, பேரணி – மாநாட்டை நான் நடத்துவதாகச் சிலர் கூறுகிறார்கள். அந்நாடுகளிலிருந்து நான் வாங்கி வந்தது 'உணர்வு' களைத்தான்.

தேர்தல் நேரத்தில் ஜெயலலிதாவிடம் நாங்கள் பணம் வாங்கி விட்டதாகச் சொன்னார்கள். 'சீட்டுக்கும் நோட்டுக்கும்' கை நீட்டுபவர்கள் அல்ல நாங்கள். மாநாட்டுக்கு வந்தவர்களிடமிருந்து 'ரூ.10 வீதம் வசூலித்துத்தான், மாநாட்டை நடத்தினோம்' என்றார் ராமதாஸ்.



தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு இழைக்கும் கொடுமையை உலகறியச் செய்யவேண்டும்.

– சுவிட்சர்லாந்து தமிழீழ ஒற்றுமை தொடர்பு மைய இணைச் செயலாளர் மதலீன் மைக்கேல்

இலங்கையில் சொந்த நாட்டிலேயே தமிழ் மக்கள் அகதிகளாக உள்ளனர். பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகின்றனர். பலர் காணாமல் மறைந்து விடுகின்றனர். வீடு வசதி இல்லாமல் காடுகளில் வாழ்கின்றனர். அவர்களுக்கு உணவு, மருந்து வழங்க இலங்கை அரசு தடை விதித்துள்ளது. இதனால் தொற்று நோய் பரவி அப்பாவி மக்கள் சாகின்றனர். தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு இழைக்கும் கொடுமையை உலகறியச் செய்யவேண்டும். தமிழீழப் போராட்டம் என்பது நீதிக்கும், சமத்துவத்துக்கும் நடக்கும் போராட்டம். இது சட்டரீதியான போராட்டம். சிங்கள ஆட்சிக்கு எதிராக, சட்டரீதியாக நடக்கும் போராட்டம்.

தமிழீழ மக்களின் விடுதலை போராட்டம், உண்மையான ஜனநாயக போராட்டம். இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்காக இங்கே மாநாடு நடத்துவது பொருத்தமானது.

இலங்கையில் நடக்கும் போரினால் சுவிட்சர்லாந்தில் 20 ஆயிரம் தமிழர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளில் ஒரு லட்சத்து 50ஆயிரம் பேர் தஞ்சம் புகுந்துள்ளனர். தமிழருக்கு என்று சொந்தமாக நாடு இல்லை. தமிழீழப் போராட்டம் வெற்றி அடைய வேண்டும்.

பாலஸ்தீனத்தில் ஒரு பகுதி யூதர்களுக்கு கொடுத்தது போல ஈழத்தில் ஏன் தமிழர்களுக்கு கொடுக்கக் கூடாது. வெற்றி பெறும் வரை நாம் ஓயமாட்டோம். தமிழீழம் உங்களுக்காக. தமிழீழம் தமிழ் மக்களுக்காக. தமிழீழம் வெல்லட்டும்.

இலங்கையில் இருந்து வருகிற அகதிகள் அத்தனை பேரையும் விடுதலைப்புலிகள் என்று எண்ணக் கூடாது. அவர்கள் இங்கே வரவேண்டிய அவசியம் இல்லை. ராஜீ காந்தி கொலையில் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்துக்கு தடையை நீக்க கோரலாமா என்று கேட்கிறார்கள். காந்தியைக் கொன்ற கோட்சேயின் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வாதாடி, போராடி வெற்றி பெற்றவர்கள் காங்கிரஸ்காரர்கள்தானே?

தமிழர்களின் பாதுகாப்புக்காக போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடையை நீக்க சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? கோரிக்கை வைப்பது எங்கள் உரிமை. தடை செய்யப்பட்ட இயக்கத்திக்கு சட்டத்திற்கு புறம்பாக உதவுவதுதான் தவறு. கருத்துக்களை சொல்லக்கூடாது என்றால் அரசியல் சட்டம் தந்த ஜீவாதார உரிமையையே பறிப்பதாகும்.



தமிழர்களின் பாதுகாப்புக்காக போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடையை நீக்க சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?
- பேராசிரியர் தீரன்

ஈழத்தமிழரை பாதுகாக்கும் நடவடிக்கையில் சிறைகளை நிரப்பவும் நாங்கள் தயார். நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலையின்றி இருக்கும் 35 இலட்சம் இளைஞர்களில் 50 ஆயிரம் பேர் மட்டும் இதில் கலந்து கொண்டாலே போதுமானது.

ஈழத் தமிழர்களுக்காக சிறைக்களம் மட்டுமல்ல எந்த தியாகம் செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இந்தியாவை முன்பு ஆண்டவர்கள் எல்லோரும் விடுதலை புலிகளுக்கு ஆதரவுதந்தார்கள். ஆனால் இப்போது இலங்கையில் தமிழர்கள் துன்பப்படும் வேளையில் வாய்திறக்க மறுக்கிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை. மனித உரிமை பற்றி பேசுகிறவர்கள், மனித உரிமையின் அடிப்படையே இலங்கையில் பறி போவதை பார்த்துக் கொண்டிருப்பது வேதனை.

கடந்த மாதம் பெங்களூரில் ஈழத் தமிழர் துயரம் குறித்து ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் நான் பேசும்போது மனித உரிமை மீறப்படுவது பற்றி விரிவாகப் பேசினேன். அந்த நிகழ்ச்சிக்கு பிறகு இந்தியா முழுவதும் எனக்கு தேசத்துரோகி பட்டம் கிடைத்தது.



“இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தியா மௌனம் சாதிப்பது கண்டனத்திற்குரியது,”
- சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்

பக்கத்து நாடாக இலங்கையில் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும், அமைதி காணவேண்டும் என்ற ஆர்வத்தில் நான் பேசினால் அது தேசத் துரோகமா. மனிதஉரிமை பற்றி பேசுபவர்கள், இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல, அது பற்றி தீர்வு காண அக்கறை இல்லாத நிலையில், அதை பற்றிப் பேசுவதையும் தடுக்க வேண்டுமா? இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்.

இலங்கைப் பிரச்சனையைப் பார்க்கிற போது புலிகளை வைத்து தான் இவர்கள் பார்க்கிறார்கள், இலங்கைப் பிரச்சனைக்கு காரணம் புலிகளா? அந்த நாளில் புலிகள் இயக்கம் தோன்றவே இல்லை. இலங்கை தமிழர் பிரச்சினையை தீர்க்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட பிறகுதான் புலிகள் உருவாகின்றனர். இந்த உண்மையை சொல்ல ஏன் மறுக்கிறீர்கள்.

ஒரு பிரச்சனையின் ஆழத்திற்கு சென்று பார்க்காவிட்டால், உண்மை தெரியவராது. புலிகள் இதற்கு காரணமல்ல. கொடுமைகள் இழைக்கப் பட்டதின் விளைவுதான் புலிகள் இயக்கம். இது தான் இலங்கை வரலாறு. ராஜிவ் மறைவுக்குபின் இந்தியாவில் நிலைமை மாறிவிட்டது என்கின்றனர். ராஜிவ் மரணம் துக்கமானது தான். கிருஷாந்தி 18வயது ஒரு பெண். கல்லூரியில் படிக்கும் வேதியல் மாணவி. செப்டம்பர் 7ம் திகதி தேர்வு எழுதிவிட்டு வீட்டுக்கு வருகிறார். அப்போது வீட்டின் அருகிலுள்ள ராணுவ முகாமில் இருந்த வீரர்கள் அப்பெண்ணை கடத்திச் சென்றுவிட்டனர். மகளைத் தேடிய தாய் மற்றும் சகோதரனையும் திடீரென்று காண வில்லை. சில நாட்களுக்கு பிறகு அவர்கள் பிணம் தான் கிடைத்தது. எதற்காக அப்பெண் கொல்லப்பட்டார் என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டாமா? இதற்கும் நாம் துக்கப்பட வேண்டாமா? எந்த உயிர் போனாலும் துக்கமும் துயரமும் கொள்வது இயல்பு தான்.

ஆனால் இந்த பிரச்சனையையே கண்டு கொள்ளமாட்டோம் என்பது கண்டிக்கத்தக்கது.

சிங்களவர்களால் தமிழர்கள் அகதிகளாக வெளியேறும் நிலை குறித்து தமிழகத்தில் இருந்து கொடுக்கும் குரல் மூலம் தான் தெரிந்து கொள்ளும் நிலையில் மத்திய அரசு இருக்கிறது. வெட்கக்கேடான நிலை இது. சொந்த நாட்டிலேயே நிற்கதியாக நிற்கும் தமிழர்கள் பற்றி ஐ.நா. சபையிலே இதுபற்றி இந்தியா பேச முயன்று இருக்க வேண்டும். இவ்வளவு கொடுமைகளும் அநியாயங்களும் ராஜிவை இழந்ததினால் தான் நடந்துகொண்டு இருக்கிறதா?

நமது நாட்டின் ஒற்றுமை, நாட்டு மக்களின் நலன் இவை அனைத்துமே இந்த தனிப்பட்ட தன்மை உடையவர்களால் தீர்மானிக்கப்படுகிறதே நியாயமா. இந்த சிக்கலை எப்படி தீர்ப்பது இந்த பிரச்னை பற்றி மனித உரிமையில் அக்கறை உள்ளவர்கள் கவலைப் படாமல் இருக்க முடியாது.





www.tamileelamarchive.com





சர்வதேச பிரகடனத்தில் வாழ்வுரிமை, வழிபாட்டுரிமை, இடம்பெயரும் உரிமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை இலங்கை அரசு மீறிவிட்டது. இலங்கை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இலங்கை அரசு மீறிவருகிறது. தமிழ் மொழியை அவர்கள் மொழிக்கு நிகராக அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். அந்தச் சூழ்நிலையில் தான் விடுதலைப்புலிகள் இயக்கம் தோன்றியது. போராளிகள் ஆயுதம் தாங்கி களம் புறப்பட்டார்கள்.

சர்வதேச சட்டங்களுக்கு எதிராக இலங்கை அரசு வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் போது விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தி போராடுகிறார்கள். விடுதலை அமைப்புகள் மொழி, சமூக, பொருளாதார, அரசியல் அந்தஸ்துக்காக முதலில் போராடினார்கள். தொடர்ந்து அது நிராகரிக்கப் பட்டபோது தனிநாடு கேட்டு போராட துவங்கினர்.



இலங்கை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இலங்கை அரசு மீறிவருகிறது.

- பஞ்சாப் மனித உரிமைக்குழு தலைவர் அஜீத்சிங் பெய்ன்ஸ்

ஒரு நாட்டில் மொழியை அழிக்க நினைத்தால் அந்த நாடே அழிந்துவிடும். இலங்கையில் நடப்பதும் அது தான். மொழியை அழிப்பதன் மூலம் இனத்தை அழித்து விடலாம் என்று நினைத்தார்கள். அதன் தொடர்ச்சி இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. கொடுமைகள் மூலமாக நாள் தோறும் நமது இனம் கொல்லப்படுகிறது. இதை எல்லாம் இனிமேலும் தாங்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டது. அப்போது உருவானதுதான் புலிகள் இயக்கம்.

ஆனால் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லக்கூடிய இந்தியா, தனது மண்ணிலேயே ராமேஸ்வரம் மீனவர்கள் அதாவது தமிழர்கள் கொல்லப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த பிரச்சினைக்கு மட்டுமல்ல இலங்கையில் நடந்துவரும் எல்லாப் பிரச்சினைக்கும் தமிழீழம் தான் தீர்வாக அமைய முடியும்.



எல்லாப் பிரச்சினைக்கும் தமிழீழம் தான் தீர்வாக அமைய முடியும்.

- கோ.மு. வீரபத்திரன் (தென் ஆபிரிக்கா)

# பேரணியில் ஏற்பட்ட விபத்து

ஈழத்தமிழர் பாதுகாப்பு வேண்டி பாட்டாளி மக்கள் கட்சியினர் நாடத்திய இவ் ஊர்வலத்தில், ஊர்வலமாக வந்த பஸ் வண்டிகளின் கூரைப் பகுதியில் பா.ம.க. தொண்டர்கள் உட்கார்ந்து கோஷமிட்டபடி வந்தனர். ராயப்பேட்டை பீட்டர்ஸ் ரோட்டில் வந்தபோது இவ் பஸ் வண்டிகளில் ஒன்றின் மீது எதிர்பாராதவிதமாக மரக்கிளை தட்டியதால், பஸ் வண்டியின் கூரையில் பயணம் செய்தவர்கள் கீழே விழுந்தனர். இந்த விபத்தில் சிக்கி 3 பேர் பரிதாபமாக இறந்தனர்.

1) முருகன் (வயது 25) பெரியார் மாவட்டம் சிங்கம் பட்டி கண்ணமனூர் கிராமம்.
2) ஆறுமுகம் (வயது 40) சிங்கம்பட்டி.
3) ஈஸ்வரன் (வயது 16) பெரியார் மாவட்டம்.

ஒருவர் ஆபத்தான நிலையில் ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். 22 பேர் காயம் அடைந்தனர். டாக்டர் பெசன்ட் ரோட்டில் மோட்டார் சைக்கிள் மீது வான் மோதியதில் பிரபாகர் என்பவரும் பரிதாபமாக இறந்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "நுனிக் கொம்பர் ஏறினார்"

சிதம்பரத்து இரகசியத்திற்கும் ிங்கள அரசியலுக்கும் இன்று எந்த வேறுபாடுமில்லை. சந்திரிகா தொட்டு த்வத்தை வரை எல்லாருமே சரத்முன சிங்க ஆகிவிட்டதால், எது உண்மை ன்பதே அங்கு எவருக்கும் புரியாத புதிர். ஒரு பக்கத்தில், பொறுக்காது, இனியும் போர்ச் செலவை சிங்களப் பொருண்மியம் பொறுக்காது எனப் புள்ளிவிபரங்களோடு ஊர் ஊராகச் சென்று விளக்கம் கொடுக்கும் ஜி.எல் பீரிஸ், ஒரு வழியாக இவ்வருட வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து முடித் துள்ளார். கனமான அமைச்சர்களான விக்கிரமரத்தினா, குணரத்தினா, கதிர் காமர் எல்லாரையும் அமெரிக்கா கூட் டிச்சென்று உலகவங்கியிடம் மடியேந்தி நிற்கின்றார். சிறீலங்காவின் மொத்த தேசிய உற்பத்தி 3 1/2 விழுக்காட்டைத் தன்னும் தாண்டமுடியாத நிலையில் பணவீக்கமோ 15 விழுக்காட்டை தாண்டிவிட்ட நிலையில், போர்ச் செலவோ 5000 கோடி ரூபாவை அண் மித்துப் பாய்ந்து செல்கையில், பங்குச் சந்தையோ 600 புள்ளிக்கு குறைவான அடிமட்டத்தில் அலைபாய்கையில், தென்னாசியாவிலே கடைநிலை பொருண்மிய வளர்ச்சி இவ்வருடம் இங்குதான் எனப் பொருமுகின்றனர் சிங்களத்தின் பொருளியலாளர்.





ஆனால், மறுபக்கத்தில் ரத்வத்தையோ தனது பக்கத்தில் தளுவத்தைகள். சமர சேகராக்கள், ரணசிங்காக்கள், ராஜ குருக்கள் ஏன் சரத்முனசிங்காவைக் கூட வைத்துக்கொண்டு கொழும்பில் இராணுவ தர்பார் நடத்துகின்றார். 'புலிகளை முடித்துவிட்டுத்தான் மறு வேலை; எப்பாடுபட்டும் போர் தொட ரும்; எப்படி எனது புதிய மூலோ பாயம்?' என இராணுவக் கூச்சல்க ளிட்டுத் தன்னைத்தானே மெச்சிக் கொள்கின்றார். என்ன அவரின் புதிய மூலோபாயம்? நவீன மரபுவழி இரா ணுவ தளபாடங்களை பெருமளவில் பயன்படுத்துதல்; கிழக்கு மற்றைய இடங்களிலுள்ள பெருமளவு துருப்புக் களை வடமுனைப் போர் அரங்கினுள் நகர்த்தல். 1994ஆம் ஆண்டில் இரா ணுவப் பரம்பல் எப்படியிருந்தது? 45 விழுக்காட்டுப் படையினர் கிழக்கில், கொழும்பில் 12 விழுக்காடு, எல்லைப் புறத்தில் 22 விழுக்காடு, மிகுதியே யாழ்ப்பாணத்தில். இப்போது கதையே மாறிவிட்டது என்கிறார் தளுவத்தை. இவற்றின் பொருள், இராணுவப் பூதத் தின் பெரும் பசிக்கு மேலும் மேலும் பெருமளவில் தீனி போடவேண்டும் என்பதேயாகும். வடபகுதியில் 50 விழுக்காட்டிற்கு மேலாக படையினர் குவிக்கப்படும்போது, அதேயளவு படை கள் புதிதாக சேர்க்கப்பட வேண்டும் என்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். எனவேதான் இப்போது சிங்களத்தில், ஒவ்வொருநாளும் சிங்கள இளைஞர் இராணுவத்தில் சேரும் நாளே எனப் பிரகடனப்படுத்துகிறார் தளபதி தளு வத்தை. எனவே, சிங்கள அரசியலில் புதிய மேலாதிக்க சக்திகளாக ரத் வத்தை குழுவினர் மாறிவிட்டனர் என்பது ஒன்றும் இரகசியமல்ல. இவர் களின் இராணுவப் பசி மேன்மேலும் பூதாகரமாக அதிகரிக்கின்றது.

இதேவேளை, இரண்டும் கெட்டான் நிலையிலிருக்கும் சந்திரிகா என்ன செய் கின்றார்? சொல்கின்றார்? நாட்டின் அபிவிருத்தியில் பெரும் கவனம்கொண் டவராக காட்டிக்கொள்ள ஜனாதிபதி மாளிகையாகிவிட்ட அலரி மாளிகை யில் நாள்தோறும் மணிக்கணக்கில் உயர்மட்ட மாநாடுகளை நடாத்துகின் றார்.; மிகுதி நேரத்தில் செவ்விகளை வழங்குகின்றார். அவரது பரபரப்பான செவ்வியொன்று, புரட்டாதி மாத இறுதியில் வெளிவந்த 'புரொன்ட் லைன்' ஏட்டில் வெளியாகியது. அவ ரது ஆலோசக வட்டத்தில் இடம் பெறும் ராம் மாணிக்கலிங்கத்தால் இச் செவ்வி காணப்பட்டதால், சந்திரி காவின் ஒப்புதலோடுதான் கேள்வி கள் கேட்கப்பட்டிருக்க முடியும். மூன்றாம் தரப்பு நாடொன்றை தான் நடுவராக ஏற்றுக்கொள்ளத் தயாரென் றும், அவ்வாறான நிலையில் புலிகள் நிபந்தனையின்றி பேசமுடியும் என்று கூறும் அவர், தான் ஒருபோதும் குறிப்பிட்டதொரு காலக்கெடுவினுள் போர் முடிவடையும் என்று கூறிய தில்லையென்றும் வேறு கூறிவைக் கின்றார். இவ்வாறாக தன்னை ஒரு மென்போக்காளராக அவர் காட்டிக் கொள்கின்றார். ஆனால், இச்செவ்வி வெளிவந்த ஒரு சில நாட்களுக்குள் படாதபாடுபட்டு கிளிநொச்சியில் இரா ணுவம் கால்வைத்தபோது, கதையை மாற்றினார் ரத்வத்தை. தலைவியின் கருத்தைப் புறந்தள்ளிய அவர், கணிச மான ஆயுதங்களை புலிகள் கீழே வைத்தாலே பேச்சு எனக்கூறி, தன்னை கறாரான கடும்போக்காளராகக் காட் டிக் கொள்கிறார். நல்லவேளை, புலி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கள் கீழே வைக்கவேண்டிய ஆயுதங்களில் முல்லைத்தீவில் தனது இராணுவம் வாரிவழங்கிய ஆயுதங்களும் உள்ளடங்க வேண்டுமா என்பது பற்றி அவர் ஒன்றும் கூறாதுவிட்டுவிட்டார்! இது மட்டுமா? கவலையுறும் தொழில் முனைவோர்க்கு, “அடுத்த வருடம் போர்ச் செலவு கணிசமாகக் குறையும்” என சந்திரிகா ஆறுதல் கூற ரத்வத்தையோ, “அதுபற்றி நிச்சயமாகக் கூறமுடியாது” (‘சண்டேரைம்ஸ்’ செவ்வி – 7.10.96) என்கின்றார்.

இவ்வாறாக இவர்கள் எல்லாரும் தம்முதுகிலேறிக் குதிரைச் சவாரி செய்ய வாக்களித்து வாய்ப்பளித்த சிங்கள வாக்காளப் பெருமக்களோ – இதுவரை இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? தாமுண்டு 2700 கோடி மானியம் உண்டு என்று இருந்தவர்கள் – இப்போது தவித்துத்தான் போனார்கள். ஏனெனில், திடீரென அவர்களைப் பார்த்து கோதுமைக்கு 700, உரத்திற்கு 150, நெல்லுக்கு 100, சமுர்த்திக்கு 800, கல்வி சுகாதார இலவசங்கட்கு 950 என கோடி கோடியாக 2700 கோடி செலவளிக்க முடியாது. “அபிவிருத்தியா அல்லது குறைந்த விலையில் பாண் தின்பதா?” எனக் கேள்வி கேட்டு, அவர்களின் பதிலுக்குக் காத்திராமலேயே, சந்திரிகா உலகவங்கி உத்தரவுகளை நிறைவேற்றத் தொடங்கிவிட்டார்.



கும்பி கொதிக்கத் தொடங்கும் சிங்களவர் விரைவில் கம்பெடுத்து, சந்திரிகாவை சங்கடத்தில் மாட்டிவிடுவர் என, அவர்களை நன்கறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக சிங்களத்தில் சிக்கல் நிறைந்த பக்கங்கள் நீள்கின்றன. இதேவேளை தமிழீழ மக்கள் நிலை எவ்வாறுள்ளது? எம்மக்களும் பல வினாக்களை, ஐயங்களை எழுப்புகின்றனர். எவ்வளவு காலம் இப்போரை சிங்களப் பொருண்மியம் தாக்குப் பிடிக்கும்? முல்லைச்சமர் வெற்றியின் பின் புலிகட்கு வெற்றி மேல் வெற்றிகுவியுமா? எவ்வளவு விரைவில் தமது விடிவு விரைவுபடுத்தப்படும்? இவை எம்மக்கள் கேளாமலேயே கேட்கும் கேள்விகள். இந்நம்பிக்கைகளில் சற்றுத் தொய்வேற்பட்டாலும் தளர்ச்சியடைகின்றார்கள். இங்கேதான் எம்மக்கள் மனங்கொள்ள வேண்டிய பெரும் செய்தியொன்று உண்டு. தனது இயங்கு விதிகட்கு அமைய இயங்கும் வரலாற்றன்னை மிகவும் பொறுமையானவள். தமிழ்த் தேசீய இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கு சிங்களம் தனக்கு முன்னுள்ள சகல தெரிவுகளையும் பயன்படுத்தி – தனது ஒருவழிப் பாதையின் முடிவை அடையும் வரை, வரலாறு காத்து நிற்கின்றது; வரலாற்றின் தவிர்க்க முடியாத நியாயப்படுத்தல் இது.ஒரு கணம் வரலாற்றின் நீண்ட பக்கங்களைப் புரட்டிப் பார்க்கலாம். அன்று தொட்டு இன்று வரை சிங்களம் பயன்படுத்திய தெரிவுகள் எவை? 1940–களிலிருந்தே பதவியாசை காட்டி விலைபேசி, அரை – முழு மந்திரிப் பதவி வழங்கிய தெரிவு முதல் தெரிவாகின்றது. இது, பொன்னம்பலம் தொட்டு தேவானந்தாவரை இன்றும் நீள்வது அவசியம்தான். விலை போவது தமிழர் தலைவர் எனப்படுவோரேயன்றி தமிழரல்ல என உணரப்பட்டபோது, தமிழரை சட்டம் போட்டு மட்டம் தட்டும் தெரிவு. ஆனால், நாடாளுமன்ற சனநாயக போர்வையை தமிழர் தூக்கி வீசியபோது, அடிகொடுத்து அடிபணிய வைக்கும் தெரிவு; இனக்கலவரங்கள், இராணுவ அடக்குமுறைகள். இவை எதிர்மாறான பலனைத் தந்தபோது உடன்பாடு, ஒப்பந்தம் என ஏமாற்று வித்தை காட்டும் தெரிவு. இவையெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிப் போக, வேறு தெரிவின்றி இப்போது இறுதித் தெரிவாக, முழுமையான போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது சிங்களம். இதுவே வரலாறு எதிர்பார்த்த தருணம். இத்தெரிவிலும் நம்பிக்கையை இப்போது சிங்களம் இழப்பதையே, சந்திரிகாவின் அண்மைக்கால செவ்விகள் குறிப்பதாக நாம் கொள்ளமுடியும். எனவே, மீண்டும் பழைய வரலாற்றுக் காலத்தில் பயணிக்க சந்திரிகா முயலக்கூடும். எம்மக்களுக்கு மேற்குறிப்பிட்ட அரசியல் மிகக் குழப்பகரமானதாக – முரண்பாடுகள் நிறைந்ததாக தோற்றம் கொடுப்பதில் வியப்பில்லை. அத்தோடு முழுமையான போர் என்பது எம் மக்களின் மீது முழுமையான அவலத்தை விதைப்பதும் என்றாகிவிடும். ஆனால், இங்கேயுள்ள வியப்பு என்னவென்றால் இக்காலப் பகுதியிலேயே, புலிகள் வரலாறே வியக்கும் வண்ணம் பெரும் வெற்றிகள் பெறும் – பெறப்போகும் காலமாகவும் அமையப்போகிறது. தமிழ் மக்கள் போராட்டம் வெற்றி, தோல்வி என்கிற நிலை தாண்டி தீர்க்கமான கட்டத்தினை நோக்கி நகர்கின்றது. இந்நிகழ்வுகள் யாவற்றையும் மாவோவின் வார்த்தையில் சுருக்கமாகச் சொல்வதானால், “போரில் தாக்குதலும் தற்காப்பும் – வெற்றியும் தோல்வியும் –முன்னேறுதலும் பின்வாங்குதலும் –ஒன்றோடு ஒன்று முரண்பட்டவைதான். ஆனால், ஒன்றின்றி மற்றதில்லை. இரண்டு கூறுகளுமே ஒரேவேளையில் ஒன்றோடொன்று மோதுகின்றன; ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. இவை போர் என்கின்ற முழுமையை உருவாக்குகின்றன; போரின் வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றன; இறுதியில் அதன் சிக்கல்களுக்கு தீர்வு காணுகின்றன” என்று அமையும். எனவே, முழுமையான போர் என்கின்ற நிலையை உருவாக்க சந்திரிகா – ரத்வத்தை குழு வரலாற்றின் கருவியாகப் பயன்படுவதும், அன்றுதொட்டு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இன்று வரையிலான தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியாக அமைவதும் பொருத்தமே. இதனை வேறுவிதமாகக் கூறினால், எவர் விடுதலைப் போரை கருவறுக்க முற்பட்டனரோ அவர்களே விடுதலைப் போர் வெல்லக் கருவியாகிவிடுவர். முல்லைச் சமரிலே புலிகள் பரிமாணம் அடைய வேண்டுமென ஆசீர்வதித்து ஆயுதங்கள் வழங்கியோர் யார் என்பதை உணர்ந்தால், இச்சமன்பாட்டை புரிவது கடினமாயிராது. இப்போது மீண்டும் சிங்களத்தின் நிலையைப் பாருங்கள். தான் தொடங்கிய பெரும் போரை இடையில் நிறுத்த சிங்களத்தால் முடியாது; போரைத் தொடர்வதாயின் இறுதியானதும் பெரும் பாதகமானதுமான விளைவுகள் ஏற்படும். இரண்டே இரண்டு வழிகள் தான் மீதமுள்ளன. ஒன்று, வலுக்கட்டாயமாக சிங்கள அன்னையரின் கொந்தளிப்புக்கு மத்தியில் ஆட்திரட்டல்; மற்றையது, போர்ச்செலவு எவ்வளவு ஆனாலும் அதை ஈடுகட்ட ஒட்டு மொத்தமான வரிவிதிப்பு. இப்போது வரும் செய்திகளின்படி மிக விரைவில் பொருட்கள், சேவைகட்கான வரி (Goods and Services Tax) என புதிய வரியொன்று விதிக்கப்படும் எனத் தெரிகின்றது. இது ஒரு கொடிய வரி. இவ்வரியானது உள்நாட்டில் வழங்கப்படும் சகல பொருட்கள் (இறக்குமதி செய்யப்பட்டவையுட்பட), சேவைகட்கு எவ்வளவு விழுக்காடு வரியினையும் விதித்து, அதனை ஆயவரிபோல மொத்தமாக அறவிட நிதியமைச்சருக்கு அதிகாரம் வழங்கும். இதன் பளு முழுவதும் விலையேற்றமாக சிங்களவர் முதுகிலே பாறாங்கல்லாகி அதல பாதாளத்துள் அவர்களைத் தள்ளி விடும்.

கட்டாய இராணுவ சேவையினால் சிங்களத் தாய்மாரின் கண்ணீர் ஆறாகப் பெருகி சிங்களத் தலைமையை அதில் மூழ்கடிக்கும். இது பற்றிய மேலதிக தகவல் வேண்டுமாயின், நாம் ருஷ்யா செல்லவேண்டும். செச்சனிய ஆக்கிரமிப்பிற்குபடைப் பற்றாக்குறையைப் போக்க இம்முறையை யெல்ட்சின் ஆமதிப்பதோடு பின்பற்றி, பல்லாயிரம் பேரை பலி கொடுத்த முன்னாள் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் பாவல் கிரசேவ்யெல்ட்சினாலேயே மிக்க அவமானகரமான முறையில் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். இப்போது, வீடுவிட்டு வெளியில் வர முடியாமல் ருஷ்ய அன்னையர் சிந்திய கண்ணீர் கொடும் வாளாக அறுக்கின்றது. எனவே, "போர் – மேலும் போர்" என போர் வெறிகொண்டு ஆடும் சிங்களத் தலைமை ஏறுவது நுனிக் கொம்பு. அது முறிந்தால் வள்ளுவர் 2000 ஆண்டுகட்குமுன்னே கூறி நிற்கின்றார்."நுனிக் கொம்பர் ஏறினார் – அஃதிறந்து ஊக்கின் உயிர்க்கிறுதி யாகிவிடும்"போரியல் வரலாற்றில் புது அத்தியாயத்தை எழுதும் தலைவர் அவர்களின் விடுதலைச் சூத்திரம் இது – சிங்களத் தலைமைக்கு அவர் போதிக்கும் அரசியல் அரிச்சுவடி; தமிழீழ மக்கட்கு விடிவின் ஒளி!

**— வே. பாலகுமாரன்**

# பாட்டாளி மக்கள் கட்சியால் நடாத்தப்பட்ட ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணி மாநாட்டில் எழுப்பப்பட்ட முழக்கங்கள்

ஈழத் தமிழர் எங்களின் இரத்தம்
அவர் இன்னல் உரைப்பது எப்படிக் குற்றம்
ஈழத்துப் பெண்கள் எங்கள் சகோதரி
அவர் துயரம் துடைப்பது எப்படிக் குற்றம்

மொழி உரிமை! மண் மீதுரிமை
இலங்கைத் தமிழர் கேட்பது தவறா?
கேட்பவர் மீது இராணுவம் ஏவி
மனித உரிமை மறுப்பது முறையா?

சொந்தநாட்டில் அகதிகளாக
ஏழு இலட்சம் ஈழத் தமிழர்!
இந்தக் கொடுமை நியாயம்தானா?
இந்திய அரசே பதில் சொல்லு!

காற்றுமில்லை; நீருமில்லை;
கட்டிக்கொள்ளத் துணியுமில்லை;
மருந்துமில்லை; உணவுமில்லை;
மடியுது தமிழினம் இலங்கையிலே;
பக்கத்து நாடாம் இந்திய தேசம்
வேடிக்கை பார்ப்பது எதனாலே?

அடிமை வாழ்வும் அகதி வாழ்வும்
தமிழர் வாழ்வில் தொடர்கதையா?

ஈழத்தமிழர் துயர் துடைக்கப்
பாட்டாளிப் பேரணி வருகுதையா

தீபத்திய அகதிகள் பெறுவது போல
இலங்கை அகதிக்கும் உதவிகள் தேவை!
தமிழ்நாட்டு அரசின் இந்திய அரசின்
தனித்தனிக் கவனம் உயனடித் தேவை!

ஈரின நாடு இலங்கை என்பதை
இந்திய அரசு ஏற்றிட வேண்டும்;
ஈழத்தமிழர் உரிமைப் போரில்
இந்திய அரசு உதவிட வேண்டும்.

ஐம்பதாண்டாய் பிரதமரான
அத்தனை பேரும் சிங்களர்தானே?
எந்தநாளும் தமிழர் அங்கே
பிரதமர் ஆவது கானல் நீரே!

வங்கநாடு விடுதலையாக
வழிவகுத்த இந்திய அரசே
செந்தமிழீழம் விடுதலையாக
செய்தது என்ன சொல்லிடு நீயே!

ஒண்ணரைக் கோடி சிங்களர் உறவே
இந்திய அரசின் இலட்சியமோ?
ஆறு கோடித் தமிழர் நாங்கள்
அடையும் வேதனை அலட்சியமோ?

ஒற்றுமை என்றே கூவும்
வெற்றுரை மனிதரே கேளுங்க;
ஒற்றுமை வேண்டிய தமிழர் தலைவர்
ஒன்றா இரண்டா சொல்லுங்கள்!

ஒப்பந்தங்கள் பல நம்பி
ஏமாந்தாரே மனம் வெம்பி!
இதற்குப் பின்னும் ஒற்றுமையா?
இதுதான் உங்கள் கட்டளையா?

எதிரிகள் ஏந்தும் ஆயுதமே
விடுதலை காணும் வழி சொல்லும்
என்று சொன்னவர் கார்ல் மார்க்ஸ்
வழியை வகுத்தவன் போராளி
வழியை மறித்தவன் கைக்கூலி!

மடியட்டும் மடியட்டும் மனிதக் கொடுமைகள்
விடியட்டும் விடியட்டும் ஈழத்தின் காரிருள்!
மலரட்டும் – மலட்டும் தமிழீழம்
உயரட்டும் உயரட்டும் பழந்தமிழ் கொடிமரம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவலமுறும் பெண்களுக்கு ஒரு அழைப்பு

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கு தாம் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சினைகளே தம் வாழ்வு என்ற நிலையாகி விட்டது. காலையில் எழுந்தால் தெருவுக்குப் போக முடியாது; சுற்றி வளைப்பு. கடைக்குப் போனால் பொருட்கள் ஒவ்வொன்றினதும் விலை எட்டமுடியாத உயரத்தில் இருக்கும். போகும் வழியிலுள்ள சோதனை நிலையங்களில் நேரதாமதம். தேவையற்ற கேள்விகள். விசாரணைகள். பள்ளி மாணவர்களால் நிம்மதியாகப் படிக்கமுடியாத நெருக்கடிநிலை. முதல் நாள் பாடசாலைக்கு வந்த மாணவன் மறுநாள் காணாமல் போயிருப்பான். பள்ளி விட்டுப்போன மாணவி பாலியல் வல்லுறவுக்கு ஆளாகிப் புதைக்கப்பட்டிருப்பாள். திடீர் திடீரென நடாத்தப்படும் சுற்றிவளைப்புக்களில் ஒவ்வொரு குடும்பமும் தம்மில் ஒருவரையாவது தொலைத்துவிடுவார்கள். இத்தனைக்கும் மத்தியில் தான் இன்று யாழ்ப்பாண மக்களின் வாழ்வு நகர்கின்றது.

இந்நிலையில் சாதாரண தமிழீழக் குடிமகன் ஒருவருக்கு இருக்கும் நெருக்கடியை விட தமிழ்ப் பெண் ஒருவருக்கு ஏற்படுகின்ற நெருக்கடிகள் வேறுபட்டவை; அதிகமானவை. யாழ்ப்பாணப் பெண்கள் ஒருபக்கம் இராணுவத்தினராலும் மறுபக்கம் சமூக விரோதிகளாலும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகக் காலத்தில் பெண்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பு இருந்தது. தமிழீழக் காவற்துறையும், நீதித்துறையும் தமிழீழ ஒறுப்புச் சட்டத்தின் மூலம் பெண்களின் உரிமைகளைப் பேணித் தந்தனர். பெண்களைச் சீண்டுதல், சொல்லாலோ, செயலாலோ துன்புறுத்தல், பாலியல் வன்முறையில் ஈடுபடுதல் என்பன கடும் ஒறுப்புக்குரிய குற்றங்களாகக் காணப்பட்டன. இதனால் பெண்கள் தமது குடும்ப, சமூக வாழ்வில் நிம்மதியுடன் ஈடுபட்டனர்.

ஆனால், இன்று அரச இராணுவத்தின் அடாவடித்தனங்களால் பெண்களின் வாழ்வே சிதைக்கப்பட்டு, கேள்விக்குறியாக்கப்பட்டு விட்டது. யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளாக நிர்வாகம் நடத்தும் இராணுவத்தினர் தான் அதிகளவில் பெண்களைத் துன்புறுத்துகின்றனர். அவர்களிடம் தமது பாலியல் வக்கிரங்களை தீர்த்து விட்டு கொலைசெய்து புதைக்கின்றனர்.

இதுவரை காலமும் சட்டத்துக்கும் ஒறுப்புக்கும் அஞ்சியோ அல்லது திருந்தியோ விட்டிருந்த சமூக விரோதிகள் இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கைகளால் ஊக்கம்பெற்றுத் திரிகின்றனர். ஒழிக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போதைப் பொருட்கள் தாராளமாகப் புழங்குகின்றன. இவற்றின் பிரதான வாடிக்கையாளர்களாக இராணுவமே விளங்குவதால், தடுப்பதற்கும் ஆள் இல்லை. இந்த நிலைமையாக கஞ்சா, போதைப் பொருட்களைப் பாவிப்பவர்களின் குடும்பத்துப் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களும் சமூக நெருக்கடிகளும் கொஞ்சமல்ல. சமூக விரோதிகள் வயது வேறுபாடற்று பெண்களுக்குத் துன்புறுத்தல் செய்கின்றார்கள். பள்ளிச் சிறுமிகள், கல்லூரி மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள், குடும்பப் பெண்கள் என்று எல்லோருமே இவர்களால் துன்பத்துக்கு ஆளாகின்றார்கள். முன்னர் இல்லாத இந்த இழி நிலையைத் தோற்றுவித்தது யார்? யாரால் இதைச் சீர்படுத்த முடியும்? இவையே இன்று யாழ்ப்பாண மக்கள் முன் எழுந்துள்ள கேள்விகள்.

சிறீலங்கா அரசாலும், அரச படைகளாலும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட இந்த நிலையை அந்த மக்கள் தான் மாற்ற முயல வேண்டும். தமக்கேற்பட்டுள்ள நெருக்கடியை அந்தப் பெண்கள்தான் தீர்க்க வேண்டும். முன்னர் இருந்த பயமற்ற, சுதந்திமான, நிம்மதியான வாழ்வை மீண்டும் மலரச் செய்யும் பொறுப்பு அவர்களின் கையில்தான் உள்ளது. இந்த மண் அவர்களிடம் எதை எதிர்பார்க்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு தமது வரலாற்றுக் கடமையில் ஈடுபட முன்வருவதே அவர்களுக்கு விடிவு வரும் ஒரே வழி.

[நன்றி: 'சுதந்திரப்பறவைகள்']





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புதைக்க நினைக்கும் வரை அவர்களுக்கான புதைகுழிகள் தொடரும்.....



சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி மீது சிறீலங்காவின் அதி ஒழுக்கசீல இராணுவம் மேற்கொண்ட காடைத்தனம் பல பத்திரிகைகளுக்கும் இன்று பரபரப்பான செய்தியாகியுள்ளது. க.பொ.த. (உ/த) பரீட்சை எழுதிவிட்டு, சிறீலங்கா இராணுவ வண்டியால் மோதுண்டு பலியான சகமாணவி ஒருவரின் வீட்டுக்குச் சென்று தோழியின் பெற்றோருக்கு ஆறுதல் கூறிவிட்டு, தனித்திருக்கும் தன் தாய் காத்திருப்பாள் என்ற அவசரத்தில் கைதடியிலுள்ள தனது வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள் கிருஷாந்தி. 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவில் சிறீலங்கா இராணுவத்தினரால் தடுக்கப்பட்டு பலவந்தமாக இராணுவத் தளத்துக்குள் கூட்டிச் செல்லப்பட்டாள். இதனைக் கண்ட சில பொதுமக்களின் தகவலையடுத்து, அழுது புலம்பியபடி சிறீலங்காப் படையினரின் வாசலில் பரிதவித்து நின்றனர் கிருஷாந்தியின் தாயான திருமதி இராசம்மா குமாரசாமியும் தம்பி பிரணவனும் அயல்வீட்டு நண்பர் கிருபாமூர்த்தியும். கிருஷாந்தி மீது தமது பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக் கொண்ட சிறீலங்காப் படைகள் தம் அட்டூழியத்துக்கு இவர்கள் சாட்சிகளாக இருப்பதை விரும்பவில்லை. பாலியல் வதைக்குள்ளாகிக் குற்றுயிராகிவிட்ட கிருஷாந்தியும், தாயும், தம்பியும், அயல்வீட்டு நண்பரும் கொல்லப்பட்டு செம்மணி வெளியில் அனாதைப் பிணங்களாகப் புதைக்கப்பட்டனர்.

தன் மகளைத் தேடிச் சென்ற திருமதி இராசம்மா குமாரசாமி கைதடியிலுள்ள முத்துக் குமாரசாமி வித்தியாலயத்தின் பிரதி அதிபராவார். இவர் தமது கடமையில் கண்ணானவர்; கண்ணியமானவர். பல மாணவர்களை நற்குடி மக்களாக உருவாக்கிவிட்டவர். சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு சமூக மதிப்பை பெற்றிருந்த இவர் வாழ்வு இனவாத அரச பயங்கரவாதிகளால் கொடூரமாகச் சிதைக்கப்பட்டது.

படிப்புக்காகக் கொழும்பில் தங்கிநிற்கும் கிருஷாந்தியின் அக்கா பிரசாந்தி சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தனது குடும்பத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து விளக்கக் கடிதம் ஒன்றை எழுதினார். நடந்தது என்னவென்றால் தனது வேலையாக அவ்வழியே சென்ற இளைஞன் ஒருவன் தற்செயலாகக் கண்டதனாலேயே அரைகுறையாக அழுகிய இச் சடலங்கள் பற்றிய உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. அத்துடன் ஒரு வெளிப்பூச்சு வேலையாகவே சிறீலங்காவின் படையினரில் பதினொரு பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். தடைகளை மீறி வெளிவந்தது ஒரு கிருஷாந்தியைப் பற்றிய உண்மைகள்தான். இன்னும் எத்தனையோ கிருஷாந்திகளின் உண்மைகள் ஆழமாகக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டன. ஏனெனில் சிறீலங்கா இனவாதிகள் தமிழ் தேசியத்தை அழிக்க ஆரம்பித்த காலந்தொட்டு தமிழீழப் பெண்கள் பல அவலங்களை அடுக்கடுக்காகச் சுமக்கத் தொடங்கிவிட்டனர். 1956, 1977, 1983களில் எல்லாம் கலவரங்கள் என்ற பெயரில் நடத்தப்பட்ட திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளினால் பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வதைக்குள்ளானார்கள். நிர்வாணமாக நடு வீதிகளில் நிறுத்தப்பட்டார்கள். மார்பிலே சூடான கம்பிகளால் சிங்கள 'சிறீ' பொறிக்கப்பட்ட கொடுமைக்குள்ளானார்கள். அதுமட்டுமல்லாமல் தமிழீழத் தாய்மார் என்ற காரணத்தினால் தாம் பெற்ற பிஞ்சுகளைக் கொதிக்கும் தார்ப் பீப்பாவுக்குள் சிங்களக் காடையர்கள் தோய்த்தெடுத்த காட்சிகளைக் கண்டு கதறினார்கள். இந் நினைவுகளெல்லாம் புதையுண்டு தொலைந்து போய்விட்டதாக யாரும் எண்ணிவிட முடியாது. மாறாக அழியாத நினைவுகளாக இவை ஆழமாக வேரூன்றிப் போயுள்ளன என்பதே உண்மை. தென் தமீழீழத் திசையெங்கும் எழுந்துகொண்டிருக்கின்ற எம் பெண்களின் அவலக் குரலலைகள் இன்னுமின்னும் எதிரொலித்துக்கொண்டேயிருக்கின்றன. பள்ளிக்குச் சென்ற மாணவிகளும், விறகொடிக்கச் சென்ற இளம் பெண்களும், சிறைப்பிடிக்கப்பட்ட தமது கணவன்மாரைத் தேடிச்சென்ற இளம் பெண்களும் சிறீலங்காப் படை அதிகாரிகள், சிப்பாய்களின் பொழுதுபோக்குக் களியாட்டங்களுக்குப் பலியான அவலங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்து ஏதிலிகள் தங்ககங்களிலும், காடுகளிலும் ஒடுங்கிப் போயிருக்கும் எத்தனையோ குடும்பங்களைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டுச் சிலநாட்களின் பின் துர்நாற்றம் வீசும் பிணங்களாகவே மீட்கப்பட்டனர். அழகிய தம் இயல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பான தோற்றங்களை அலங்கோலப் படுத்திக்கொண்டும், மிக இளம் வயதிலேயே திருமணம் செய்தும் இந்த இராணுவக் கொடுமைகளைத் தவிர்த்துக் கொள்ள முனைகின்றனர். சிறீலங்கா இனவாதிகளின் திட்டமிட்ட ஒரு செயற்பாடாகவே தென்தமிழீழத்தில் பத்தாயிரம் இளம் விதவைகள் உருவாக்கப்பட்டனர். இந்த உண்மைகள் எந்தப் புதைகுழிகளிலும் உறங்கிவிடப்போவதில்லை. இத்தகைய அவலங்களின் தொடர்கதையாகவே இன்று யாழ்ப்பாணத்திலும் பல கொடூரங்கள் அரங்கேறுகின்றன.

கைதடி மாணவி கிருஷாந்தி, கோண்டாவில் பகுதியில் காணாமற்போன இளம்பெண் ராஜினி, புத்தூரில் பாலியல் வதைக்குள்ளான பத்து வயதுச் சிறுமி ரேணுகா இன்னும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாலியல் வதைக்குள்ளாக்கப்பட்ட பல பெண்கள், மூடி மறைக்கப்பட்டாலும் மனதுக்குள் வெதும்பிக்கொண்டிருக்கும் அவர்களின் உணர்வுகள். நாளாந்தம் இராணுவக் காவலரண்களைக் கடக்கும்போது சந்திக்கும் சகிக்கமுடியாத பாலியல் துன்புறுத்தல்கள் – இவ்வாறு இவர்களின் அவலங்கள் நீண்டு செல்கின்றன. மாணவர்கள் புத்தகப் பைவைக்கும் மிதிவண்டியின் தாங்கிகளில் (Carrier) இராணுவத்தினர் ஏறிக் குந்திவிடுவதால், பல இடங்களில் இப்போது தாங்கி கழற்றப்பட்ட மிதிவண்டிகளிலேயே மாணவிகள் பள்ளி செல்கின்றனர். தாம் அவர்களைக் காதலிப்பதாகவும், மணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் கூட சிறீலங்கா இராணுவம் மாணவிகளிடம் கூறி வருகின்றது. நேரடியாக எதிர்ப்பைக்காட்டமுடியாத நிலையில் எரிமலையாய் குமுறும் உணர்வுடன் அமைதியாக இவர்கள் நடமாட வேண்டியுள்ளது. இந் நிகழ்வுகளையெல்லாம் இயல்பான மனித பாலியல் பலவீனங்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. சிறீலங்கா இனவாதிகளின் தமிழின எதிர்ப்புணர்வின் கொடூர வடிவில் இதுவும் ஒன்று. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட பல நாட்டுப் பெண்களையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் காலம் பிந்தியே வெளியுலகு அறிந்துகொண்டது. காலம் கடந்தபின் அப்பெண்களின் கவலைகளை அறிந்து ஆறுதல் கூறுவதால் கருகிப்போன, அவர்களுடைய உணர்வுகளை மீண்டும் மலரச் செய்துவிட முடியாது. செம்மணி வெளியில் கண்டெடுக்கப்பட்டுக் கொழும்பில் இனங்காட்டப்பட்ட கிருஷாந்தியின் குடும்பம் பற்றிய செய்திகளும், விசாரணைக்கென கைதுசெய்யப்பட்ட பதினொரு இராணுவத்தினர் பற்றிய தகவல்களும் இப்போது மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒரு உண்மை வெளிவந்தது நன்மையே. ஆனால் கைதுகளும் விசாரணைகளும் தீர்வுகளும் வெறும் கண்துடைப்பு நாடகங்களாகவே அமையும் என்பதே வரலாறு தரும் பாடமாகும்.

தமிழீழப் பெண்களின் எழுச்சியானது விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான வளர்ச்சிக் கட்டங்களையெல்லாம் தாண்டிச் செல்கின்றது. சிறீலங்கா இனவாதிகளின் காடைத்தனங்களும் இந்திய வல்லாதிக்கப் பிசாசுகளின் அரக்கத்தனங்களும் தமிழீழப் பெண்களைப் போர்க்கோலம் பூணச் செய்த வரலாற்றுக் காரணிகளில் முக்கிய இடம்பிடிக்கின்றன. ஒரு சரியான தலைமையின் வழிகாட்டலால் செம்மையாக நெறிப்படுத்தப்பட்ட புரட்சிப் பெண்கள் போர் வீரர்களாக, உயிராயுதங்களாக, முகவரி விரும்பாத முத்துக்களாக உலவிடும் நாட்டில் அவல நாடகங்களின் அரங்கேற்றம் இனியும் தொடருவது எவ்வகையான எதிர்விளைவுகளை உருவாக்கும் என்பதை எதிரிகள் உணர்ந்துகொள்வது நல்லது. எமது மனோபலத்தை உடைப்பதற்கு எதிரி எத்தகைய இழிவான செயல்களிலும் ஈடுபடலாம். ஆனால், அதற்கான பயனை அனுபவிக்கப் போகின்றவர்களும் அவர்களேதான்.

“அவலத்தைத் தந்தவர்க்கே அதைத் திருப்பிக் கொடு” என்பது எமது தலைவர் கற்றுத் தந்த பாடம். தமிழீழப் பெண்களின் வாழ்வைக் குலைக்க முயன்ற அவலமான உண்மைகள் காலத்தால் புதைந்து, தொலைந்துபோய் விடுமென எதிரிகள் எண்ணும்வரை, அவர்களுக்கான புதைகுழிகளும் தொடரும் என்பதைச் சொல்லி வைக்கின்றோம்.

**— சந்திரிகா**



சென்ற வருடம் புரட்டாதி மாதம், அச்சுவேலிச் சிறுமி ரேணுகா மீது சிறீலங்கா அரச படைகள் பாலியல் வல்லுறவைப் பிரயோகித்த விடயம் யாவரும் அறிந்ததே. இச்செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து, இராணுவ அதிகாரிகள், ரேணுகாவையும் அவளின் தந்தையையும் மிரட்டி, அவ்வாறானதொரு சம்பவம் நடைபெறவில்லை என அவர்களிடமிருந்து வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்டனர். மகளினதும் தந்தையினதும் வாக்குமூலங்களை உலக நாடுகளுக்கு அனுப்பிய சிறீலங்கா அரசு தன் படையினரை உத்தமர்களாகக் காட்டிக்கொண்டது. வழமைபோலவே புலிகளின் பொய்ப் பரப்புரையால் தான் இவ்வாறானதொரு செய்தி பரவியது என்று சொல்லிக்கொண்டது. ஆனால் அண்மையில் குமார் பொன்னம்பலம் எழுப்பிய சில வினாக்கள் சிறீலங்காப் படையினரின் முகமூடிகளைக் கிழித்து உண்மையை வெளிப்படுத்திவிட்டன.

அப்படியொரு சம்பவம் நடக்கவில்லையென்றால் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் முகாமிலுள்ள படையினரைச் சிறுமியால் இனங்காட்டவென்று அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டிய தேவை என்ன அச்சிறுமியின் தந்தை வாக்குமூலம் கொடுக்கும் அளவுக்கு ஒத்துழைக்கிறாரென்றால், ஏன் அந்தச் சிறுமியை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் சோதனைக்கு உட்படுத்த முடியவில்லை?முழுப் பிரதேசமும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கையில், இடம்பெறக்கூடிய விளைவுகளைக் கருத்திற் கொள்ளாது, இராணுவத்துக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை முன்வைப்பார்களா?



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நாமும் விழித்திருப்பதே நன்று

நேற்றிரவு
வளவுத் தலையில் நிலவு இருந்தது.
அருகில் உருகிக்கரையும் வாய்க்காலும்
அதற்கப்பால்.....
நிலவிற் குளித்தபடி காடும் கிடந்தது.
மௌனத்தில் உறைந்திருந்தது
செம்மண் புழுதித் தெரு.
இலக்கேதுமின்றி கால்போன போக்கில்
தெருவைத் தட்டியெழுப்பியபடி நடந்தேன்.
மொட்டைப் பாலம் வரை வந்தாச்சு,
இனி எட்டி நடந்தால் இரணைமடுக்குளம்
எனக்கென்ன விசரா பிடித்துவிட்டது?



ஏன் நடக்கின்றேன்?
காலிற் செருப்பில்லை
மேலிற் சட்டையில்லை
எவரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?
'க்ளுக்....' ஏதோ சத்தம்
தலையைத் திருப்பினேன்.
வாய்க்கால் நீரிலிருந்து மேலெழுந்து போனது
ஒரு தனித்த பறவை.
என்னைப் போல் அதுவும் ஊர்பிரிந்திருக்கும்
தூக்கமின்றித் திரிகிறது போலும்!
ஒருவர் கூட தெருவிலில்லாது
இப்படியேன் 'திருவையாறு' நித்திரை கொள்கிறது?
யாரேனும் ஒருவராயினும் வாருங்களேன்
பேசலாம்.
பகலில் எனக்கும் நேரமில்லை
உமக்கும் நேரமில்லை
இரவிலாவது பேசலாம் எழும்புங்களேன்.
காடதிரக் கத்தவேண்டும் போல....
ஒரு தவனம்.
எம் ஊரெங்கும் பேய்கள்.
காடேறிகளின் காலில்
எம் கையளைந்த மண்
இங்கும் 'யமர்' வரலாமெனும் அசுமாத்தம்
எப்படித் தூங்கலாம் நீங்கள்
'டுடும் டும்...' எறிகணைச் சத்தம்
எந்தப் பக்கம்?
தட்டுவன் கொட்டியா
பரந்தன் பக்கமா?
தொடர்ந்து துப்பாக்கிகள் கக்கின சத்தம்.
'பிள்ளைகளும்' விழிப்புத்தான்
'காவல் தெய்வங்களுக்கு' கோடி நமஸ்காரம்
கனகாம்பிகை அம்மன் பக்கமாய் திரும்பி
ஆத்தாளே காப்பாற்று அவர்களை என்று
சொல்லி நடந்தேன்.
ஊர் உறங்கியது ஏனென்று விளங்கியது
"பிள்ளைகள் விழித்திருப்பார்கள்" எனும்
பெருநம்பிக்கை
நம்பிக்கை பொய்யாகாது தான்
எனினும்
நாமும் விழித்திருப்பதே நன்று,
விடியும் வரை

- புதுவை இரத்தினதுரை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சுதந்திரத்தைத் தேடி...





கப்டன் சிவகாமி

அவள் ஒரு ஓட்ட வீராங்கனை. அவள் பங்குபற்றுகின்ற ஓட்டப் போட்டிகள் அனைத்திலுமே பரிசு வாங்காமல் வந்ததில்லை. எந்த நேரமும் கால்கள் நிலத்தில் படாதவாறு துறுதுறுத்தபடி பறந்து திரிவாள்.

சிவகாமி என்ற போராளி 'மின்னல்' நடவடிக்கையில் மணலாற்றில் வீரச்சாவடைந்ததை நினைவு கூர்ந்து, செல்வி என்ற இவளுடைய இயற்பெயர் சிவகாமி ஆனது.

இவளும் மேஜர் மதுஷாவும் நெருங்கிய தோழிகள். இயக்கத்திற்கு வந்த பின் சிவகாமி தன் போராட்ட வாழ்க்கையில் மதுஷாவுடனேயே இருந்தாள். அந்த உறவு, மதுஷா திருமலைக் கடலுக்கு கரும்புலியாகச் சென்ற சமயம் தனக்கும் மதுஷாவுக்கும் ஒன்றாக வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அது நிறைவேறாமல் போக, தன்னைவிட்டு பிரிந்து போன மதுஷாவுக்காய் உள்ளுக்குள் அழுதாலும் மேன்மேலும் உறுதியாய் நின்றது.

அவள் பிறந்து வளர்ந்து மீன் குஞ்சுபோல் நீந்திப் பழகிய மயிலிட்டிக் கடற்கரைக்கு ஒருமுறை போய் வந்தது அவளுக்கு மறக்க முடியாத அனுபவம். அடிக்கடி கடற்கரையில் நின்றபடி பேய் குடிகொண்ட பூமியாய் தூரத்தே தெரிகின்ற தன் ஊரைச் சுட்டிக் காட்டி 'நனவிடை தோய்பவள்' உண்மையாகவே அந்த வாய்ப்புக் கிடைத்தபோது அங்கு போய் வந்தாள். எல்லோரிடமும் " என்ரை ஊருக்குப்போய் வந்தனான்" என்று கூறிக் கூறி மாய்ந்து போனாள்.

குழந்தை போல எதையும் சொல்லிக் குதூகலிக்கின்ற பண்பினாலோ என்னவோ, எங்கள் சிவகாமி மனத்தளவில் ஒரு குழந்தைபோல எல்லோருக்குள்ளும் நிறைந்து போனாள்.

மேஜர் மதுஷா திருமலைக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்ததை அடுத்து அந்தக் கடலிலேயே தானும் வீரச்சாவடையவேண்டும் என்பதை மனதளவில் வரித்துக் கொண்டாள்.

"மதுஷாக்கா வெடிச்ச கடலில் தான் நானும் போக வேண்டும்" என்ற அவளது ஆசை போல 1995.10 அன்று எங்கள் சிவகாமி திருமலையின் ஆழமான கடலலையோடு கரைந்து போனாள். கடற்படைக்குச் சொந்தமான ஒரு துருப்புக்காவிக் கப்பலும், ஒரு டோறாப் படகும், ஒரு லாண்டிங் கிறாப்பும் வெடித்துச் சிதறின, எங்கள் சிவகாமியைப் போல.

மேலும் மூன்று கரும்புலிகளையும் கடலன்னை தன்னோடு அணைத்துக் கொண்டாள். எங்களுக்குத் தெரியும் திருமலையில் புலிக்கொடி பறக்கும் வரை அந்தக் கடலன்னை தனது பிள்ளைகளைத் தனக்குள் எடுத்துக் கொண்டே இருப்பாள் என்று. அதுவரை எங்கள் கரியபுலிகள் ஓயப்போவதில்லை அந்தக் கடலலைகளைப் போலவே.

அது அவளது கடைசிநாள். வைகறைக் குவியலில் ஒரு செம்பருத்திப் பூவைப் போல மலர்ந்திருந்த முகத்தோடு எமது தேவகி.... கண்ணாடிக்கு முன்னால் நின்றபடி தனது ஒட்ட வெட்டிய தலை முடியை படிய வாரியபடி ...... சிலும்பிநின்ற முடிகள் அவளது சீப்புக்குப் படிய மறுத்தன.

"அக்கா தலை படிஞ்சிட்டுதே"

அவளைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. சண்டைக்குப் போக நிற்கின்ற அந்த மகிழ்ச்சி அவள் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அன்று அவள் முகமெல்லாம் சிரிப்பாகச் சென்றாள். அது அவளது கடைசிச் சண்டை. ஏன், அவளது கடைசி நாளும்கூட என்பதை நாங்கள் நினைக்கவில்லை. அவளும் நினைத்திருக்க மாட்டாள் என்றுதான் நாம் எண்ணுகிறோம். 'நிறையச் சண்டைக்குப் போய் வர வேணும்' என்ற நீண்ட கனவு அவளிடம் இருந்ததை நாங்கள் அவள் வாயிலாக அடிக்கடி கேட்டோம். ஆனால், மாறாக அவளது உயிரற்ற உடல் அன்றே தலையின்றி வந்த



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போது, காலை தலைபடிய வாரிய தேவகி "தலைபடிஞ்சிட்டுதோ அக்கா" என்ற கேட்ட தேவகி நெஞ்சுக்குள் அதிர்வாய் வந்துபோனாள்.

**தேவகி!**

எல்லாவற்றிலும் மேலோங்கி நின்ற அவளது இரக்க குணம் போராட்ட வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தலை தூக்கி நின்றது.

"நேற்றுப் போட்ட அந்தப் புதுச் சேட் எங்கை தேவகி" என்று கேட்கும் போது, முகாமுக்கு புதிதாக வந்த பிள்ளையிடம் அதைக் கொடுத்து விட்டு வந்து "நான்தான் குடுத்தனான் அக்கா" என்றபடி நிற்பாள்.

யாருக்காவது உதவி எனின் சட்டென்று உதவி செய்யத் தேடிச் செல்கின்ற அந்தப் பண்பினால்தான் தேவகி எல்லோருக்குள்ளும் நிறைந்திருந்தாள்.

முகாமில் எந்த உந்துருளியாவது அவளது கைப்பட்டதாகத்தான் நிற்கும். உந்துருளியில் ஏறியிருந்தால் அவளது வேகமும் கூடவே. எந்த நெருக்கடிக்குள்ளும் செல்கின்ற திறமையும் அந்த வேகமும் எல்லா விடயங்களிலும் பளீரிட்டது.

எப்போதும் புயலைப் போன்ற வேகம் ' அவளிடம் இருந்தது, அது அவளது மறைவிலும்கூட.....

எங்கள் போராட்ட வரலாற்றில் அவர் ஒரு தனி அத்தியாயம். எங்கள் தலைவரின் சேனைக்குள் உருவான "அக்கினிக்குழந்தை" மெல்ல உயிர்ப்புப் பெற்றபோது அந்த உயிர்ப்புக்காக உழைத்தவர்களில் லெப்.கேணல் அகிலாவின் பங்கும் அளப்பரியது.

அவருள் இருந்த அந்த ஆளுமை, பலதுறை விற்பன்மை,எமது தேசத்தைக் கடந்து பரந்து போன பெருமை... அவரது தனித்துவமான இடம் நிரப்பப்பட முடியாததுதான்.

எப்போதுமே காற்சப்பாத்துக்களைக் கழற்றியறியாத கால்கள் நடந்துவரும் போது தனியான தொரு கம்பீரம் நடையிற் தெரியும். அந்த மெல்லிய உருவத்தின் வல்லமை, அதை விட அவரது உறுதியின் வலிமை, எல்லாவற்றிலுமே முன்னுதாரணமான போராளி அகிலாக்கா,

எல்லாப் போராளிகளையும் தொட்டுச்சென்ற அவரது நினைவுகள். இழப்பை நெஞ்சம் ஏற்க மறுக்கும். பெயர் கூறமுடியாத சாதனைகளுக்குள்ளும், இன்னும் 'ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிப்போன உண்மைகளுக்குள்ளும்' அவர் ஆற்றிய பங்கு, அவரது உழைப்பு..... இவை அவரை இனங்காட்ட முடியாத பக்கங்கள்; எழுத்திலே வடிக்க முடியாத வரலாற்று நிகழ்வுகள்.

அவர் இயக்கத்துக்கென சேவையாற்றப் புறப்பட்ட காலங்கள் மிக நெருக்கடியானவை. போராட்ட உத்வேகங்கொண்ட பெண்களணி ஒன்று, தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ளே போராட்டம் நடத்தி வெளியே வந்து இந்தத் தேசத்துக்காய் தம்மை அர்ப்பணிக்கத் தொடங்கியது. லெப்.கேணல். திலீபனினால் உருவாக்கப்பட்ட 'சுதந்திரப்பறவைகள்' அணிக்குள் அவர்கள் ஒன்று திரண்டனர். இருண்மைச் சகதிக்குள் உறங்கிக் கிடந்த மனங்களைத் தட்டியெழுப்ப அவர்கள் அல்லும்பகலும் பாடுபட்டனர். அந்த அணிக்குள் அகிலாவும் தன்னை இணைத்துக்கொண்டார். அன்று தொட்டு இன்று வரை தனது செயல்களினால் மட்டும் தன்னை இனங்காட்டி வந்தார்.



லெப். கேணல் அகிலா

அவரது துப்பாக்கியிலிருந்து புறப்படும் ரவைகள் எப்போதுமே இலக்குத் தவறியதில்லை. பெயர் சொல்லக் கூடிய இலக்காளர். அந்த இலக்குத் தவறாத தன்மை அவரது போராட்ட வாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் ஊடுருவியிருந்தது. எந்த வேலையாயினும் செய்து முடிக்கின்ற வரையில் அவரது அயராத உழைப்பு, செய்து முடிக்கவேண்டும் என்ற ஓர்மம் அவரிடம் தனித்துவமாக விளங்கியது.

எல்லாவற்றையும் விட பிரச்சினைகளை அணுகுகின்ற முறை வித்தியாசமானது. எப்படிச் செய்வது? குறித்த நாட்களுக்குள் செய்து முடிக்க முடியுமா? யோசித்து யோசித்து மண்டையைப் போட்டுக் குழப்பிப் போய் அவர் முன்னால் நின்றால், இவ்வளவு நேரமும் இதற்கா போய் நின்றோம் என்ற மாதிரி, செய்கின்ற வேலை இலகுவானதாகிவிடும். ஒவ்வொரு போராளியையும் சுயமாக வளர்த்தெடுப்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் செயலாற்றலும்..... எங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள் அவரை ஆழ இருத்தி விட்டது. எந்த வேலையாக ஓடி அலைந்து திரிந்தாலும் நித்திரையின்றிய இரவுகளைச் சந்தித்தாலும் தானே நேரம் ஒதுக்கி போராளிகளுக்கு கல்வியறிவூட்டிய அந்த நாட்கள்...... எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்ற அவரது கொள்கை செயலுருப் பெற்றபோது முகாமில் அனேகமான போராளிகள் இயந்திரங்களைத் திருத்துவதிலிருந்து எவ்வாறு சுவையாகச் சமைப்பது என்பது வரை கற்றிருந்தனர்.

அவருக்குரிய வரலாற்றின் முகவுரைக்கு எடுத்துக்கொண்ட சில வரிகள் இவை. இந்த அறிமுகத்துக்குரிய லெப். கேணல் அகிலாவின் கடைசி மூச்சு *30.10.1995* இல் 'சூரியக்கதிர்' படர்ந்த காலைப் பொழுதோடு கலந்து போனது. வலிகாமத்தின் மிகப் பெரிய சமருக்குள் ஊரெழுவின் சிவப்பு மண்ணுக்குள் குருதிதோய எங்கள் அகிலாக்கா கலந்து போனார்.

**தமிழினி,**

இப்போதும்கூட குழந்தையாக அந்த உருண்டமுகம். அதேபோல இன்னும் குழந்தைத்தனம் மாறாத உள்ளம். உன்னை நினைக்கும் போது கண்கள் பனித்துக்கொள்கின்றன. நீ குரங்குபோலத் தாவி ஏறிநின்ற வலிகாமத்தின் மாமரங்கள் இந்தத் தனிமையில் உன்னை நினைத்து அழுமே. மீண்டும் வலிகாமம் செல்லும் நாளில், நீ இல்லாத அந்த இடங்கள் நிரப்பப்பட முடியாதனவாகத்தான் இருக்கப் போகின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கப்டன் தேவகி

நேற்று அந்த ஏழாலை அம்மாவின் வீட்டுக்குச் சென்றதும் அம்மா முதற் கேள்வியாக,

"பிள்ளை அண்டைக்கு உங்களோடை வந்து கூழ் குடிச்சிட்டுப் போன பிள்ளை எங்கை" என்று கேட்டபோது நெஞ்சைத் துயரம் அடைத்துக் கொண்டது.

யாருடனும் சட்டெனப் பழகிவிடும் பண்பினாலோ, அல்லது நீ மக்களோடு வைத்திருந்த சரியான அணுகு முறையினாலோ என்னவோ, குறுகிய காலத்தில் நீ அவர்களுக்குள் ஒருத்தியானாய். எத்தகைய தன்மையுள்ள மக்களையும் நீ உன்வசப்படுத்தி நின்ற தன்மை எத்தனையோ தடவைகள் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பின்தங்கிய கிராமப்புற மக்களின் வீட்டுத் திண்ணைகளில் அந்தக் குடும்பங்களின் அங்கத்தவராய் நீ இருந்த அந்த நாட்கள்.... வீட்டிலுள்ள குழந்தைகளெல்லாம் உன்னைச் சுற்றியிருக்க, நீயும் அந்தக் குழந்தைகளில் ஒருத்தியாய் சிரித்து நின்ற பொழுதுகள்.... அரசியல் வேலை செய்யும் ஒரு போராளிக்குரிய மிக உயர்ந்த பொறுமையையும் சரியான அணுகுமுறையையும் உன்னிடம் நாங்கள் கண்டோம். அநேகமாக ஒருமுறை நீ சென்ற வீடுகள், அடுத்த முறை அங்கு செல்கின்ற வேறொரு போராளியிடம் உன்னைச் சுகம் விசாரிக்கும். "கனகாலமா தமிழினியை இந்தப் பக்கம் காணேல்லை."

"தமிழினியை ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லுங்கோ"

அந்த மக்களுக்கு நீ செல்லப் பிள்ளை. உடுவில் வட்டுப் பொறுப்பாளராக நீ வேலை செய்தபோது, நீ அந்தப் பிரதேச மக்கள் அனைவருக்கும் பரிச்சயமானவளாக இருந்தாய். அந்த மக்களின் சாவீடு, திருமண நிகழ்வு எங்கேயாவது நீ முன்னுக்கு நின்று பெரிய மனிதத் தோரணையுடன் எதையாவது செய்துகொண்டிருப்பாய். இப்போது எங்கேயாவது அந்த மக்கள் தங்கள் தமிழினியை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். உன்னைச் சுற்றிநின்று கதைகேட்ட பிள்ளைகள் போராட்டத்திற்கு வந்திருப்பார்கள்.

நேரந்தவறாமல் உனக்குச் சாப்பாடு வேணும். ஒருபொழுதும் நீ பசிதாங்க மாட்டாய். எல்லோருக்கும் ஐஸ்கிறீம் என்றால் பிரியம். ஆனால், உனக்கு அது தான் சாப்பாடாக வேணும். எந்த அகால வேளையும் ஐஸ்கிறீம் என்றால் சப்புக் கொட்டுகின்ற உன்னோடு எப்போது சென்றாலும் ஐஸ்கிறீம் கிடைக்கும்.

அவை உனது கடைசிக் காலங்கள்.

"என்னை சண்டைக்கு விடுங்கோ" என்று பொறுப்பாளரை நச்சரித்து உனது ஆசை நிறைவேறியபோது, நீ எப்படிப் பூரித்துப் போனாய்!

வலிகாமச் சண்டைக்கு நீ பாதை காட்டியாகப் போனாய். அந்தக் குச்சொழுங்கைகள், தார் படிந்த கறுப்பு வீதிகள் உனது கால் பட்டவை. வெயிலிலும் மழையிலும் நீ நின்ற இடங்கள் உனக்குத் தண்ணீர்பட்டபாடு. நீ நின்ற இடங்களிலேயே உனக்கு சண்டைக்கான களங்கள் அமைந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

## "என்னை சண்டைக்கு விடுங்கோ" என்று பொறுப்பாளரை நச்சரித்து உனது ஆசை நிறைவேறியபோது, நீ எப்படிப் பூரித்துப்போனாய்!

...... அன்றைய தினமும் நீ வேவு எடுப்பதற்கென முன்னே சென்றாய். சிறிது நாட்களுக்கு முன்னர், நீ மிதி வண்டியில் ஓடித்திரிந்த அந்த இடங்களில் எதிரியின் கண்படாதவாறு ஊர்ந்து செல்வது உன்னை நிச்சயம் வலிக்கச் செய்திருக்கும். அந்த வலியையே ஆவேசமாக்கி நீ சென்றிருப்பாய் என்பது எங்களுக்குத் தெரியும். உனது கடைசி மூச்சும் மிகுந்த உக்கிரத்தோடுதான் பிரிந்திருக்கும். அந்த உக்கிரமான நெருப்பு எம்மக்களைப் பற்றிக் கொள்ளும் என்ற எங்கள் நம்பிக்கையுடன் அவர்களிலிருந்து இன்னும் தமிழினிகள் வருவார்கள்.

★★★






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தார்மீக ஆதரவு

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி உட்பட, சில கட்சிகளைத் தவிர பல கட்சிகள் குறிப்பாகத் திராவிடக் கட்சிகள் என்று கூறப்படுபவை இனப்பிரச்சினை குறித்து இரட்டை அணுகுமுறை போன்றதொரு நிலைப்பாட்டையே வெளிக்காட்ட முனைகின்றன. இவை, ஒரு புறம், இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமது தார்மீக ஆதரவு உண்டு என்கின்றன. ஆனால் அவர்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு இல்லை என்று கூறுகின்றன. அடுத்ததாக இந்திய மத்திய அரசின் நிலைப்பாடே இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது நிலைப்பாடு எனவும் தெரிவிக்கின்றன. ஆனால் இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்ட தமிழகக் கட்சிகளின் அணுகுமுறையானது பெரிதும் குழப்பம் நிறைந்ததாகும். ஏனெனில் தமிழ் மக்களுக்கு தார்மீக ஆதரவு என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு என்பதற்குப் புறம்பானதாக ஒருபோதும் இருக்கமுடியாது. அதேசமயம் அவ்வாறு இருப்பது சரியானால் அது புலிகளுக்கு மாறானதாகவும் இருக்கவும் முடியாது. ஏனெனில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை புலிகளே வழிநடத்திச் செல்கின்றனர். இந்த வகையில் இக்கட்சிகள் இவ்விடயத்தில் முரண்பாட்டைக் கொண்டவையாகவே உள்ளன.

இதேபோன்றே இந்திய மத்திய அரசின் நிலைப்பாடே தமது நிலைப்பாடும் என்ற இக்கட்சிகளின் நிலையானது முன்னைய நிலைப்பாட்டுடன் முரண்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது. அதாவது இந்திய மத்திய அரசைப் பொறுத்து, இலங்கை இனப்பிரச்சினை என்பது அண்டை நாடு ஒன்றின் உள்விவகாரம் என்ற ரீதியிலேயே நோக்கப்படுகின்றன. இந்த வகையில் சிறீலங்காவுடன் நட்பு நிலையைப் பேணுவதோடு அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது இல்லை என்பதே இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர்பான கொள்கையாக உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலை மற்றும் இன ஒடுக்குமுறை குறித்தும் இந்திய அரசு அக்கறை காட்டவோ அன்றி அலட்டிக்கொள்வோ போவதில்லை. இவ்வாறான மத்திய அரசின் அணுகுமுறைதான் தமிழகக் கட்சிகளின் அணுகுமுறையானால் தமிழ்க் கட்சிகளும் இனப்படுகொலையையும், ஒடுக்கு முறையையும் ஏற்றுக்கொள்கின்றனவா? அவ்வாறானால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இவை வழங்கும் தார்மீக ஆதரவு என்பதுதான் என்ன? இவர்கள் காட்டும் தார்மீக ஆதரவினால் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபம் என்ன? தமிழக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபம் என்ன? தமிழகத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கென மருத்துவப் பொருட்களைக் கூட கொள்வனவு செய்யமுடியாது எனின் தார்மீக ஆதரவின் அர்த்தம்தான் என்ன? இந்த நிலையில் தமிழகக் கட்சிகளின் நிலைப்பாடு என்பது குழப்பமானதாகவும் முரண்பாடானதாகவும் உள்ளமை தெளிவாகும்.




இவ்வாறு முரண்பாடு கொள்வதற்குக் காரணம், கட்சிகள் ஒருபுறம் உலகத் தமிழினத்தின் காவலர்கள் என தம்மைக் காட்டிக் கொள்ள முனையும் அதேவேளை மத்திய அரசில் இருந்து தமது ஆட்சி அதிகாரத்திற்கு அச்சுறுத்தல் வந்துவிடுமோ என்று அஞ்சுவதாலேயுமாகும். ஆனால் இக்கட்சித் தலைவர்களின் இந்த நடவடிக்கையானது இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல்களை அதிகரிக்கவும், சிங்களப் பேரினவாதம் மேலும் ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளவும் உதவக்கூடியதாகும். ஏனெனில் தமது இனம் அண்டை நாட்டில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் போது அதைப் பார்த்துக்கொண்டிருப்பதன் மூலம் இவ்வொடுக்குமுறைகளுக்கு உற்சாகத்தையும், சர்வதேசத்திற்கு அலட்சியத்தையும் உருவாக்கும் ஒன்றாக இருந்துவிடும். இவை யாவற்றிற்கும் மேலாக தமிழீழ மக்களின் உணர்வுகளை மழுங்கடிக்கும் நடவடிக்கையுமாகவே இது இருக்கும். கட்சித் தலைமைகள் தமிழக மக்கள் தமது சகோதரர்களுக்கு ஆதரவு காட்டுவதை மழுங்கடிக்க முனைவது உலகத் தமிழினத்திற்கு இவர்கள் செய்யும் கேடாகவே இருக்கும். ஆனால் இவர்கள் தமிழ் மக்களின் விடயத்தில் அக்கறை செலுத்துவதோ அன்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை என்றோ தட்டிக் கழித்துவிட முடியாது. ஏனெனில் பாட்டாளி மக்கள் கட்சி பெப்ரவரி மாதத்தின் தொடக்கத்தில்தான் இலங்கைத் தமிழர்களுக்கும், விடுதலைப் புலிகள் தலைமையில் முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஆதரவான மாபெரும் மநாடு ஒன்றை நடத்திக் காட்டிவிட்டனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலைப் பின்னணியும் காசியானந்தன் கவிதைகளும்



"தமிழீழ விடுதலைப் புலிகளின் சரியான தலைமையை நான் தாமதமாகவே புரிந்துகொண்டேன். கவிஞர் காசியானந்தனின் இலக்கியப் பங்களிப்பையும் தாமதமாகவே புரிந்துகொண்டேன்" என்றும் "கவிஞர் காசியானந்தன் வாழ்க்கைக்கும் கவிதைக்கும் வேறுபாடறியாத ஒரு போராளிக் கவிஞன்" என்றும் கவிஞர் இன்குலாப் அவர்கள் கவிஞர் காசியானந்தன் பற்றிக் கூறியிருக்கும் வாசகங்கள் காசியானந்தனின் கவிதைகளை மதிப்பீடு செய்வதில் தனியான சில அளவீடுகளின் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன எனலாம். இன்குலாப் போன்ற கவிஞர்களாலேயே சிறைப்பிடித்துக் கொள்ள தாமதப்பட்டுப் போனமையானது, காசியானந்தன் கவிதைகள் பற்றி சில செய்திகளைச் சொல்வதாயுமுள்ளது. காலப் பெருவெள்ளைத்தைத் தாண்டி நிலைத்து நிற்கும் கவிதைகள் அனைத்திற்கும் முதலில் புரிந்துகொள்ளப்படாதிருந்தமையே வரலாறாகும். இது காசியானந்தனின் கவிதைகளுக்கும் பொருந்தி வருவது அவர் படைப்புக்களின் சிறப்பிற்கு அடையாளமாகும். அவர் கவிதைகளில் தெளிக்கப்பட்டுள்ள வீரிய விதைகளை அடையாளம் காண்பதென்பது தமிழ்க் கவிதைகளின் கலைக்கான மதிப்பீட்டிற்கு மிக அவசியமானதாகும்.

காசியானந்தன் கவிதைகள் பற்றி நோக்குவதானால் மேலும் சில பின்னணிக் காட்சிகளைத் தீட்டி, அவரின் வரிகளின் மீது ஏற்ற ஒளி பாய்ச்சும் போதுதான் அதை அழகாகக் காட்சிப்படுத்திக்கொள்ள முடியும். தமிழில் கிடைக்கக்கூடிய ஆரம்ப இலக்கியங்களான சங்கப் பாடல்கள், சிலப்பதிகாரம் போன்றவற்றைப் படிப்பது வீண் என்றும், வடமொழியை விட்டு தனியாக இயங்கும் வல்லமையற்றது தமிழ் என்றும், ற, ன, டி, எ, ஒ என்னும் ஐந்தே ஐந்து சிறப்பெழுத்துக்களைக் கொண்டு தமிழென ஓர் பாஷையை அமைக்க முடியுமா? என்றும் வாதிட்டவர் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த, 'இலக்கணக் கொத்து' என்னும் நூலின் ஆசிரியரான சுவாமிநாத தேசிகர் என்பவர். 19ம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டைச் சேர்ந்த 'கால்டுவெல்' என்பவர், "தமிழ் சமஸ்கிருத குடும்பத்திலிருந்து முழுமையாக வேறுபட்ட, திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தது" என்று நிறுவும் வரை சுவாமிநாத தேசிகர் போன்றோரின் கொள்கைகள் முற்றாக நிராகரிக்கப்படவில்லை. கால்டுவெல்லின் பின்னரே மீண்டும் தமிழர்கள் தமிழின் பெருமையை உணரத் தலைப்பட்டனர் என்று கூறுவர். இது போலவே தமிழீழத்தின் போராளிக் கவிஞர்களது கவிதைகளை உலகத் தரத்திற்கு நிகரானவை என்று நிறுவுவதற்கு கால்டுவெல் போல ஓர் ஐரோப்பிய அளவுகோல் வரும்வரை காத்திருப்பதோ; அத்தகைய குரல் தமிழரல்லாத ஒருவர் வாயால் வரக்கேட்டு, மகிழ்ந்து போவதோ விடுதலை நேயத்திற்குரிய சமூகத்தின் கலைப்பணிக்கு ஏற்புடையதல்ல. எனவேதான் போர்க் காலக் கவிதைகளை சரியாக மதிப்பீடு செய்வது கலைத்துவத்தின் தலைமைப் பணியாகிறது.

அவயவிக் கொள்கை அல்லது உறுப்பாக்கவியற் கொள்கை என்பது சங்க காலப் பாடல்களை மதிப்பீடு செய்யும் திறனாய்வுக் கொள்கையாகும். இது போலவே மருவிய காலத்தில் நீதியைப் போதிப்பதே கவிதையின் தலைமைப் பணியாக இருந்திருக்கிறது. அடுத்து அழகியற் கொள்கை சமுதாயவியற் காலமென சுமார் இரண்டாயிரம் ஆண்டுகால தமிழ்க் கவிதைப் பரப்பிற்கு ஓர் திட்டமிட்ட ஒழுங்கில் திறனாய்வுக் கொள்கைகள் வகுக்கப்பட்டிருப்பது தெரிகிறது. இத்தகைய திறனாய்வுக் கொள்கைகள் அனைத்தையும் ஒன்றாக்கி அவற்றையே சற்று விலகிநின்று சீர்தூக்கினால், தமிழின் இலக்கிய வரலாறும்; அதற்குரிய திறனாய்வும் சங்கப் பாடல்களைப் போல திட்டமிட்டுக் கட்டப்பட்டிருக்கும் உறுப்பாக்கக் கொள்கை சார்ந்தவையே என்ற உண்மை தெட்டனப் புலப்படும். இதன்பொருட்டே இன்று பழைய அளவுகோல்களை நிராகரிக்கும் போக்கை எங்குமே அவதானிக்க முடிகிறது. எனவே காசியானந்தன் போன்றவர்களின் கவிதைகளை மதிப்பீடு செய்வதற்காக சில புதிய எடுகோள்களைத் தேடிச்செல்ல வேண்டியதும் அவசியமான பணியே.


உலகப் புகழ்பெற்ற கவிஞரான மில்டனின், "இழந்த சொர்க்கம்" பதிப்புரையில் சி.எஸ். லூயி என்பவர் கூறும்போது, "மாதா கோயிலை ஆராய வருகிறவன், அது மக்கள் வழிபடுவதற்காகக் கட்டுப்பட்டது என்பதை மறந்துவிடலாகாது!" என்பார். இதுபோலவே போராளிக் கவிஞர்களின் கவிதைகளை மதிப்பிடும் போதும், அவை மக்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலைக்காகப் பாடப்பட்ட கவிதைகள் என்பதையும்; இவற்றை எழுதியோர் தம்மை எழுத்தாளர், கலைஞர்கள் என்று மட்டும் காட்டிக் கொள்ளும் போக்கை விட்டு களத்தில் நின்று போராடி கவி படைத்தோர் என்ற தளத்தில் நின்று அவற்றை மதிப்பீடு செய்யவேண்டியதும் அவசியம். உண்மையில் கவிஞர்களின் வாழ்வும், போக்கும் கவிதை அல்ல; எனினும் அவையே கவிதை பிறக்கக் காரணிகள் என்பதை மறந்துவிடலாகாது என்பார்கள். "தமிழினத்தின் இன்றைய அவலங்களுக்கு விடிவுதரப் பாடுபடாத ஒரு எழுத்தை எழுதுவதில் யாது பயன்?" என்று கவிஞர் முருகையன் கேட்பார். இத்தகைய கேள்விக்கான நேர்மையான பதிலிலேயே கவிஞர் காசியானந்தன், புதுவை இரத்தினதுரை போன்றோரின் உயிர்மை வாழ்ந்துகொண்டிருக்கிறது எனலாம்.



"ஆனந்தச் சேவல்கள் எங்கும் கூவின, அடிமை வறுமைகள் அந்தாரம்போயின, ஊனம் தவிர்ந்தது சுதந்திரச் சூரியன் உதித்தனன்" என்று இலங்கையின் சுதந்திரத்தைப் பாடி மகிழ்ந்தார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். ஆனால் கிடைத்திருக்கும் சுதந்திரம் அடிமை வாழ்வின் தொடக்கம் என்பதை ஈழத்துக் கவிஞர்கள் அறிந்துகொள்ள அதிக காலம் எடுக்கவில்லை. எப்படி 1937ல் இந்தியாவில் இந்திமொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழர்கள் அதைக் கட்டாயமாகக் கற்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டபோது, வடமொழியையும் அதேபோல தமிழ் மொழியையும் போற்றும் இருமொழித் தேசியத்தைக் கடைப்பிடித்த பாரதி போன்றேரே, இருமொழித் தேசியத்தை உதறி தமிழ் நேசப் பாடல்களைப் பாடினார்களோ அதுபோல இலங்கையில் வந்த தனிச் சிங்களச் சட்டம் தமிழ் மொழி மீதான தீவிரப் பற்றைக் கவிஞரிடையே தூண்டிவிடக் காரணமாகிறது.

"தமிழ் மொழியாம் தாய்நாடே உனைக்காக்க தலையரிந்து தருவேன்" என்று சபதமிடும் ஈழத்து இராஜபாரதி போன்றோரின் கவிக்குரல்களைக் கேட்கிறோம். 1962ல் வெளிவந்த 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்ற கவிதைத்தொகுப்பு, 'தமிழ் அன்னை ஆசனத்தில் ஏறாளோ?', 'கன்னித் தமிழை காவல் செய்', 'அரியணை இருந்த தமிழ்', 'தமிழ் எங்கள் தாய்' என்னும் தீவிரத்தன்மை மிக்க தலைப்புக்களை உடையகவிதைகளால் நிறைந்திருக்கக் காண்கிறோம். இவ்விதம் இன ஒடுக்குமுறைக்கு எதிராகத் தோன்றிய விடுதலை உணர்ச்சியின் கொடுமுடியே கவிஞர் காசியானந்தனின் கவிதைகள் எனலாம்.

ஈழத்தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைகள் படிப்படியாக சகல தளங்களிலும் விரிவடைய விரிவடையவும் அதற்கேற்ப கவிஞர்களும் தமது கவிதை வரிகளைக் கூர்மைப்படுத்தலாயினர். "தாயை ஒறுத்தோரை எதிர்த்திரு!" என முருகையனும் கிழக்கு மாகாணத்தில் நிலம் பறிப்போவதை எதிர்த்து ஈழத்து மகாகவி, "பறையெல்லாம் அதிர்க படையெல்லாம் திரள்க!" என்றும் கவிபடைக்கத் தொடங்குகின்றனர். இச்சூழலில் 1968ல் வெளிவருகிறது காசியானந்தனின் 'தமிழன் கனவு'. அக்கவிதை நூல் அக்காலத்தில் புரட்சிகர இளைஞர்களின் போராட்ட சக்திக்கு பெரும் ஊக்குவிசையாக நின்றதென்பதை மறுத்தல் முடியாது. தொடர்ந்து தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கவும் அதற்கேற்ப ஈழத்துக் கவிதைகளும் போர் பற்றிய சொல்லாட்சிகளை தன்னுள் சேர்த்துக்கொள்ள ஆரம்பிக்கின்றன. இராணுவம், கைது, சிறை, துப்பாக்கி போன்ற அனுபவங்களை அவை பதிவுகளாக்கின. அடக்குமுறையை எதிர்கொள்ளும் கருவிகள் பற்றி, கெரில்லா வீரர்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் இரவல் வாங்காத அனுபவங்களாகப் பேசத் தொடங்குகின்றன. தமிழீழத்தில் 'காலம் எழுதிய வரிகள்' என்னும் தலைப்பிட்டு அ. யேசுராசாவினால் தொகுக்கப்பட்ட 51 கவிஞர்களின் படைப்புக்களில் காணக்கிடைக்கும் காசியானந்தன் கவிதையிலே "காரை முள் குத்தி செந்நீர் கனிந்த கால்கள், பேரலை கடைத்தோணி பித்தெடுத்த இருப்பு, போராடி சிறுகுண்டு புதைந்த இளம் தோள்கள்!" என போராட்டத்தின் கஷ்ட துன்பங்களை விழிகள் மறப்பதில்லை என்பதை தத்ரூபமாக, அனுபவச் செறிவோடு விளக்கிவைக்கிறார். "என் நாட்டையும் விடுதலை உணர்வையும் ஒருபோதும் இழக்கமாட்டேன்!" என்ற உறுதியான எஃகு உள்ளமுடைய ஓர் கவிஞரிடமிருந்துதான் இவ்வரிகள் பிறப்பெடுக்கும் என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தமிழகத்தில் உள்ள கவிஞர்களாலேயே, "மனித சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக யாவற்றையும் இழக்கத் தயாரான கவிஞர் காசியானந்தன்" எனப் போற்றப்படக் காரணம் அவரது கவிதையும் வாழ்வுமே.

1938ல் பிறந்த கவிஞர் இதுவரை, 'உயிர் தமிழுக்கு', 'படகோட்டியின் பாடல்', 'தமிழா உன்னைத்தான்', 'காசியானந்தனின் கவிதைகள் தொகுதி 1, 2', 'காசியானந்தன் கதைகள்', 'தம்பி ஜெயத்திற்கு', 'தமிழன் கனவு' ஆகிய நூல்களையும், 'பட்டினி கிடந்து', 'நம்புங்கள் தமிழீழம்', 'அடைக்கலம் தந்த வீடுகளே', 'பத்துத் தடவை பாடை வராது', 'மரங்கிளியும் மாங்கொத்தியும்' போன்ற தமிழர் காதுகளுக்குள் என்றென்றும் ஜீவனம் பண்ணும் எண்ணற்ற இசைப்பாடல்களையும் எழுதி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யுள்ளார். இவையாவற்றிற்குமாகவே தமிழீழ மக்களால் அவர் மாமனிதர் விருதளித்துக் கௌரவிக்கப்பட்டார். உண்மையில் இந்த இலக்கிய முயற்சிகள் அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் எல்லா இடங்களிலுமே விடுதலையே ஜீவ ஒளியாக வீசிக்கொண்டு இருக்கிறது. அனுபவமும் உணர்வுமே நல்ல கவிதைகளின் அடிப்படை என்பார்கள். கவிஞரின் கவிதைகளுக்கும் அதுவே அடிப்படை என்பதைவிளக்க;

*நீள நெடுமதில்*
*சூழ இருட்டறை*
*நெருப்பில் கிடக்கிறேன்*
*ஈழ எழில் நிலம்*
*வாழக் கொடுஞ்சாவின்*
*இடுக்கில் நடக்கிறேன்*

என்று சிறையிலிருந்தபோது அவர் எழுதிய வரிகளை விட வேறெந்தச் சான்றுகளையும் சமர்ப்பிக்கவேண்டியதில்லை. தயக்கங்களிலிருந்தும் தடுமாற்றங்களிலிருந்தும் மக்களை விடுதலை பெறவைக்கும் அவரது கவிதைகளை திறனாய்வுத் தராசில் எடைபோட முன் மேலும் சில விடயங்களைக் கவனித்தல் அவசியம். விமர்சனம் என்பது போற்றல், தூற்றல், தவிர்த்தல் ஆகிய பணிகளுக்கு அப்பாலும் கடந்து நின்று பல நேரிய பணிகளைச் செய்யவேண்டியுள்ளமை பற்றி தற்போது நிறையவே பேசப்படுகிறது.

"தராசை
முதலில்
எடைபோடு!"

என்ற கவிஞரின் வரிகளை நோக்கினால் தமிழின் விமர்சனத்துறையும் விடுதலையொன்றிற்காகக் காத்திருக்கும் உண்மையை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கவிஞர் காசியானந்தன் இரண்டு வாழ்க்கை வாழத் தெரியாதவர்; இரண்டு பேச்சு பேசத் தெரியாதவர். துயரங்களின் இடிபாடுகளிடையேயும் நம்பிக்கையின் நண்பராக வாழ்பவர். அவர் தமிழீழத்தில் வாழ்ந்த போதும், தமிழகத்தில் வாழ்ந்த போதும், 1976ல் கியூபா சென்று ஹவானாவில் நின்று கவி பாடிய போதும்கூட,

"கோல வானைக் குருவி விழுங்குமோ
கொடுவாய் முதலை விழுங்குமோ ஆற்றை
ஈழமண்ணை லங்கா விழுங்குமோ"

என்றே பாடினார். எனவேதான் தமிழீழ விடுதலைப் போருக்குரிய இலட்சிய சாட்சியமாக அவருடைய கவிதைகள் திகழும் என்று கூறுகிறார்கள். கவிஞரும் அவரைத் தொடர்ந்து அவர் குடும்பத்தினரும் அடைந்த இன்னல்கள் எழுதி முடியும் கொடுமைகள் அல்ல. அவர் தம்பி சிவஜெயம் தாளங்குடாவில் எதிரிகளின் முற்றுகையில் வீரச்சாவடைந்தபோது,

*"மண்ணுக்காய் நீ*
*மடிந்த சாவினை*
*எண்ணி மகிழ்கிறேன்*
*இருந்தும் அழுகிறேன்"*

என்கிறார். இது இரவல் வரியல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் தங்கை சிவமலர் கைதானபோது,

*"தங்கை மலரை*
*தனிச் சிறையில்*
*எங்கோ கொடியர்*
*இருத்தினார்களாம்..."*







என உணர்வுக் கவி படிக்கிறார். அன்று தொடங்கி இன்று வரை அவருடைய குடும்ப வாழ்வே விடுதலைக்காய், இழப்புக்களும், துயரங்களுமாய் நடைபெற அந்த இடிபாடுகளுக்குள்ளே நடக்கிறது அவர் கவிதைகள்.

பாரதியை மகாகவியென இப்போது எல்லோருமே ஏறத்தாழ ஒப்புக்கொள்கின்றனர். சுதந்திரத்தின் நெருப்பாக வர்ணிக்கப்படும் பாரதிக் கவிஞனே 1918 கார்த்திகை 20ம் திகதி புதுச்சேரியை விட்டுப் புறப்பட்டபோது, கைதுசெய்யப்பட்டு 34 நாட்கள் காவலில் இருந்தான். அப்போது விடுதலை பெறவேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்த சூழலில், "இனி அரசியல் தொடர்பான பாட்டுக்களை வெளியிடுவதில்லை, பேசுவதில்லை!" என எழுதிக் கொடுத்தே விடுதலை பெற்றான். (ஆதாரம்: கவிதையின் உயிர் உள்ளம் உடல்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

க.ப. அறவாணன் – பக். 292) இந்த இடத்தில் பாரதியைக் குறைவாகப் பார்க்கும் பார்வையைத் தவிர்த்துக் கொண்டே நாம் காசியானந்தனின் சிறை வாழ்வையும், அவரது மாற்றமில்லாத உறுதியான கொள்கையையும் அவரது கவிதைகளோடு தொடர்புபடுத்திப் பார்ப்பது நலம். இத்தகைய விடயங்களை நன்கு உள்வாங்கிய பின்பே தமிழக முதல்வர், கலைஞர் கருணாநிதி, "ஈழம் தந்த இனமான வேழம் கவிஞர் காசியானந்தன் வெஞ்சிறை வாழ்விற்கும் வன்கணாளர் கொடுமைக்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்டவர். அதனாலே அவர்பால் எனக்கொரு மதிப்புண்டு!" என்று 1982லேயே காசியானந்தனின் கவிதைத் தொகுதிக்கான முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.



பட்டினிகிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - என்றன்
கட்டுடல் வளைந்து கைகள் தளர்ந்து
கவலை மிகுந்தாலும்
தொட்டு வளர்த்த தமிழ் மண்ணின் துயர்
துடைக்க மறப்பேனா?"

என்ற உறுதியில் இந்த வினாடியளவும் தளராது கவிபுனையும் ஆன்ம ஒளி அவர் கவிதைகளில் வீசித் தெறிக்கிறது. ஒரு நல்ல கவிதையில் ஒவ்வொரு வார்த்தையும் பேசுகிறது. அது போலவே ஒவ்வொன்றும் தவிர்க்க முடியாதவை. மாற்றுச் சொற்கள் அற்றவை என்று கூறுவார்கள்.

"மாங்கிளியும் மரங்கொத்தியும்
கூடுதிரும்பத் தடையில்லே"

"எங்கள் உடலில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா? நாங்கள்
தங்கி இருந்தநாள் சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா?"

"எங்கள் தோழர்களின் புதைகுழியில்
மண்போட்டுச் செல்கின்றோம்"

என்று வரும் அவரின் வரிகளை இசைமீட்டினால் எங்குமே ஒரு சொல்லைக்கூட நீக்க முடியவில்லை. எனவேதான் தமிழீழ விடுப்பு வேள்விக்காக போர்க்கோலம் பூண்ட காசியானந்தன் கவிதைகளை தமிழினம் தன்னளவில் மிக உயர்வாக மரியாதைப்படுத்துகிறது. பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின் கவிஞர் காசியானந்தனே என்ற தமிழகத்தின் குரல் மிகைக் கூற்றல்ல. காசியானந்தனின் வாழ்வும், கவிதைகளும் நெடிய அனுபவச் செறிவு கொண்டவை. உண்மையில் அவற்றிற்கான சுவைத்தல் கலையையும், உள்ள உயர்வுகளைக் கோடிட்டுக் காட்டவும் இச்சிறு கட்டுரை போதுமானதல்ல. மேலும் ஆழமான பார்வைகள் அவசியம். மிகைப்படுத்தலற்ற நேர்மையான விமர்சனங்கள் மூலம் மற்றத் தேசிய இனங்களிடையேயும் அவர் கவிதைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியம். மற்றத் தேசிய இனங்கள் தமது கவிஞர்களையும் அவர்தம் கவிதைகளையும் மேம்படுத்த ஆற்றிவரும் பணிகளின் வியத்தகு போக்குகள் எதையும் சீர்தூக்காது; அத்தகைய மாற்றங்கள் எதுவும் நம்மை வந்துசேரவில்லை என்ற நிலையிலேயே நின்று; விடுதலைக் கவிஞர்களையும் அவர்தம் கவிதைகளையும் பற்றிப் பேசாது விடுதல் அறிவுடைமையல்ல. இதுகுறித்து தமிழன் நவீன விமர்சனத்துறைக்குரியோர் நிறையவே பணியாற்ற வேண்டியிருக்கிறது.

**— கி. செ. துரை**

## "சுதந்திரம்"

சுதந்திரம் என்றால்....
சுத்தமான காற்றை
நீ சுவாசிக்க வேண்டும்

விலங்குகள் போடும்
வேலிகள் ....
சுதந்திரக் காற்றை
உன்னால்
சுவாசிக்க முடியுமா?

உன்முற்றத்து
தென்றலில்
கந்தநெடி
கலந்து வருகிறது!
நச்சுக்காற்றை
எப்போதும்
நம்பியிராதே!

நல்ல சுவாசத்தை
நீயே தேடிக்கொள்!

உன்
சந்ததிவாழ
சூழலை சுத்தப்படுத்து!

பொன்வேண்டாம்!
பொருள் வேண்டாம்!
எங்களுக்கு
இந்த மண் வேண்டும்!

நாம்
துள்ளி விளையாட
தும்ம...இரும...
நிம்மதியாய் இருந்து
நீள் மூச்சு வாங்கிவிட
எங்களுக்கு
இந்த மண்வேண்டும்!

ஈழமண்ணில்
விடியலைத் தேடி
இன்னொரு சந்ததி
எழுந்திட வேண்டாம்!

தமிழன் புலிக்கொடி
பறந்திடும் பாராய்!
தரணியில் ஈழம்
பிறந்திடும் நாளை!

- துறையூரான்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினரின்

# சலனப்படங்கள் சொல்லும் செய்திகள்



தமிழீழத்தின் குறும்பட வரலாற்றில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி இதுவரையில் ஐந்து குறும்படங்களை வெளியிட்டுள்ளது. இக் குறும்படங்களின் மூலம் எமது மண்ணின் விடுதலைப் போராட்டத்தையும், சமூகப் பிரச்சினைகளையும், பெண்ணொடுக்குமுறையையும் எதிர்காலச் சந்ததியினருக்கும், வெளியுலகுக்கும் வெளிப்படுத்துவதோடு, சம்பவங்கள் ஆவணங்களாக்கப்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டே குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறும்பட வரலாற்றில் பெண் போராளிகள் கால் பதித்து இரண்டு வருடங்கள் பூர்த்தியான நிலையில் இவ்விமர்சனத்தை எழுதுகிறோம்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது குறும்படம் 'இனி.....' இப்படம் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் ஒளிவீச்சில் வெளிவந்துள்ளது. இது நிதர்சனம் மகளிர் பிரிவின் தயாரிப்பில் அமலா, கலைமணி ஆகியோரின் நெறியாள்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவச் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு, விடுதலையாகி வரும் பெண் தன் கணவரால் கைவிடப்படும் கதை. இதில் கதாநாயகியும் பிள்ளைகளும் கப்பலிலிருந்து இறங்கும் போது மக்கள் துறைமுகத்தினுள் நிற்பது தெரிகிறது. ஆனால் பெண்ணும் பிள்ளைகளும் துறைமுகத் தளத்தில் நடந்துவரும்போது பின்னணி, மக்கள் யாருமற்று வெறுமையாகத் தெரிகின்றது. இதை நெறிப்படுத்தியவர் சரியான முறையில் கவனிக்கவில்லை. இதே நேரம் துறைமுகத்தினுள் இருந்து இவர்களுடன் சேர்ந்து வரும் ஒரு வயோதிபப் பெண் திடீரென காணாமல் போகிறார். இவர் ஏன் காட்சியில் காட்டப்பட்டார் என்பதும், பின்னர் எதற்காக காட்சியிலிருந்து நகர்த்தப்பட்டார் என்பதும் புரியாமலே உள்ளது.

இதில் கதாநாயகி நடந்து செல்லும் போது பழைய நினைவுகளைக் காட்டும் யுக்தி நன்றாக அமைந்துள்ளது. மீனவக் குடும்பங்களுக்கேயுரிய ஏக்கமான சூழலிலும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்த குடும்பம் என்பது இயல்பாகவே காட்டப்படுகிறது.

இப்படத்தின் உச்சக்கட்டம், கணவனும் மனைவியும் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் சந்திப்பது. அதிலும், எந்த விசாரணையுமின்றி தன்னை நியாயப்படுத்துவதற்காக "ஏன் இஞ்ச வந்தனி? எதுக்கு வந்தனீங்கள்? இரண்டு வருடமாக அவனோட இருந்திட்டு" என்று குற்றம்சாட்டுவது சமூகத்தின் ஆணாதிக்கத் தன்மையை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

இப்படத்தின் முடிவில் கணவனால் நிராகரிக்கப்பட்ட பெண்ணினதும், குழந்தைகளினதும் வாழ்க்கை கேள்விக் குறியாகவே முடிந்துள்ளது. இதில் மறுதிருமணம் செய்துகொண்ட பெண்ணின் வாழ்க்கையுமே கேள்விக்குறிதான் என்பதை சூட்சுமமாகக் காட்டியுள்ளார்கள்.

லெப். கேணல் நவம் அறிவுக்கூடத்தின் சலன உருவாக்கப் பிரிவு பெண் போராளிகளின் முதலாவது தயாரிப்பு 'விடிவு' 1994ம் ஆண்டு ஒக்ரோபர் மாத ஒளிவீச்சில் இது பதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ வன்முறைகளால் பெற்றோரை இழந்து வீதியில் அலைந்த சிறுவன் அறிவுச்சோலைக்கு அனுப்பப்படுகிறான்.

பசுமையான ஒரு மரத்தைக் காண்பிப்பதோடு இந்தப் படம் ஆரம்பமாகின்றது. இந்தப் பசுமையான மரத்துக்கும் கதைக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாறிவரும் உலகில்... என்ற பாடல் கருத்துச் செறிவான பாடல். குரலும் நன்றாக அமைந்துள்ளது. ஆனால் பாடலின் வசன உச்சரிப்புக்கள் தெளிவாக இல்லை.

இதில் சிறப்பான காட்சியமைப்பு என்னவென்றால், நீண்ட வீதிகளில் சிறுவன் தன்னந்தனியாக அலைந்து திரிகின்றான். அவன் நேர்மையான வழியில் செல்வதை, தனது பசிக்கு வாயால் கேட்டு, வேலை செய்து கொடுத்துவிட்டுச் சாப்பிடும் காட்சி மூலம் காட்டப்படுகின்றது.

இராணுவச் சுற்றிவளைப்பின்போது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாய் மகளை மட்டும் ஓடும்படி அனுப்புகிறாள். வழமையாக கணவன்மாரைத் தான் பெண்கள் அனுப்புவது வழக்கம். இங்கே கணவரை விட்டு ஏன் மகளை மட்டும் அனுப்புகிறாள் என்பது விளங்கவில்லை.

இறுதியாக விடிவின் பாதை திறந்தது என்ற பாடல் கருத்துள்ளதாகவும், குரல் இனிமையாகவும், வசனங்கள் விளங்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

'வெள்ளைத்துணி' விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் முதலாவது தயாரிப்பாகும். இது அமலாவின் படப்பிடிப்பில் 1994ம் ஆண்டு நவம்பர் மாத ஒளிவீச்சில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது இனவாத அரசின் அரக்கத்தனமான குண்டுத்தாக்குதலால் தமிழ் ஏழைச் சிறுமி பாதிக்கப்படும் கதை.

இதில் தாயும் மகளும் மா இடித்து அரிக்கின்றனர். வீட்டுக்காரப் பெண் அருகில் கதிரையில் இருக்கின்றார். அவரின் மகள் வந்து அவரைக் கூட்டிச் சென்று தலைசீவும் போது, திரையில் ஒரே நேரத்தில் இரண்டு குடும்பங்களும் காட்டப்படுகின்றது. மா இடிப்பவர்களுக்குப் பக்கத்திலிருந்த கதிரை திடீரென்று காணாமல் போகின்றது. இதை நெறியாளர் கவனிக்கவில்லையோ?

இதில் மனதை உருக்கும் காட்சி, ஆசிரியரிடம் சிறுமி அடிவாங்கும் காட்சியும், வெள்ளைத் துணியை வைத்துக்கொண்டு சிறுமி காணும் குட்டிக் கனவும்.

தமிழீழத்தில் அரக்கர்களின் குண்டு வீச்சால் சிறுவர்களின் சாவு நடப்பது இயல்பானது என்றாலும் இச்சிறுமியின் சாவு வித்தியாசமாகக் காட்டப்படுகின்றது. அவளின் ஆசைக்குப் புதுச் சட்டையைப் போடாமலேயே சாகும் அந்தக் காட்சியே மனதில் பதிகிறது.

இப்படத்தின் நெறியாள்கை, ஒலியமைப்பு, காட்சியமைப்பு எல்லாமே மிகவும் நன்றாக இருந்தது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவும் நிதர்சனம் மகளிர் பிரிவும் முல்லைமாவட்ட கலைபண்பாட்டுக் கழகமும் ஒருங்கிணைந்து படைத்த ஒரு படைப்பே 'எதிர்காலம் கனவல்ல'. 1995ம் ஆண்டு மே மாத ஒளிவீச்சுக்காக கௌசி நிர்வாக உதவி வழங்க வைகறையின் ஒளிப்பதிவில் உருவாக்கப்பட்டது. இது அடிக்கடி இராணுவ வன்செயல்களால் பாதிக்கப்படும் ஒதியமலை கிராமத்தின் உண்மைக்கதை.

இதில் இராணுவத்தினர் நிற்பதைக் கண்டுவிட்டு சைக்கிளைப் போட்டுவிட்டு ஒருவர் ஓடுகிறார். இவருக்கு மிக அண்மையில் இராணுவம். இவர் சைக்கிளைப் போடும் சத்தமும், ஓடும் போது எழும் சத்தமும் படத்தில் கேட்கவில்லை. அவர் சைக்கிள் போடும் போதும் ஓடும்போதும் கேட்கும் சத்தத்தில் இராணுவம் திரும்பிப் பார்த்திருக்கும். ஆனால் அந்தக் காட்சி அப்படியாக அமையவில்லை.

அடுத்தது, அலுவலகக் காட்சி – அது தொடர்ந்து நடக்கும் காட்சி போலவே காட்டப்படுகின்றது. பழைய நினைவுகள் என்பது தெளிவாக இல்லை.

இதில் மனதை உறையவைக்கும் காட்சி – ஒவ்வொரு சிறுவரும் தமக்கு அப்பா இல்லை என்று கூறுவது. ஒதியமலையில் மட்டுமன்றி இன்று தமிழீழத்தில் பெரும்பாலான சிறுவர்களுக்கு இதேநிலைதான்.

வயலில் கும்பம் வைத்து பூசை செய்து அரிவுவெட்டை ஆரம்பிக்கும் ஒரு சின்னக்காட்சி, ஒதியமலை ஒரு பாரம்பரிய விவசாயபூமி என்பதை மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

கடைசியாக, சரிந்திருக்கும் பெயர்ப் பலகையை ஆசிரியர் நிமிர்த்துவது. இந்தக் காட்சியமைப்பு மிகவும் நன்றாக அமைந்துள்ளது. சரிந்திருக்கும் பலகையை நிமிர்த்துவதன் மூலம் ஆசிரியரின் மனமாற்றம் காட்டப்படுகின்றது. ஆனால் அவர் கடிதத்தைக் கிழிப்பது ஒரு தேவையற்ற மேலதிகமாக தோன்றுகிறது.

சாரதாவின் நெறியாக்கத்தில், தமிழ்ச் செல்வி, மிருணா ஆகியோர் நிர்வாக உதவி வழங்க உருவானது 'விடியலைத் தேடி....' இது 1995ஆம் ஆண்டு யூலை மாத ஒளிவீச்சில் பதிவாகியுள்ளது. இந்திய அமைதிகாக்கும் படைகள் எமது மண்ணுக்கு வந்து சூறையாடிய காலத்தில் அவர்களின் வால்பிடிகளான தேசத் துரோகிகளால் அவஸ்தைப்பட்ட ஒரு பெண்ணின் கதை.

இதில் கதாநாயகி தொடக்கத்திலிருந்து முடியும் வரை தீவிரப் போக்குள்ள பெண்ணாகவே எந்தவொரு சிக்கலும் இல்லாமல் நகர்த்தப்படுகிறாள். எதிரிகள் பலம் கூடியவர்கள் என்று தெரிந்தும், அவர்கள் சைக்கிளைப் பிடித்து நிறுத்தும் அத்துமீறிய செயலை எதிர்க்கும் கதாநாயகியின் துணிவு எல்லாவற்றிலும் பார்க்கச் சிறப்பாக அமைந்துள்ளது.

இப்படத்தில் பல கதாபாத்திரங்கள் நடித்தாலும் கதாநாயகியின் தீவிரம்தான் எம்மைக் கவர்ந்தது. கடைசியில் அவள் திரும்பிப் பார்க்கும் பார்வையிலேயே அவளின் முடிவு தெளிவாகின்றது.

தேச விடுதலையுடன், பெண் விடுதலையையும் வென்றெடுப்பதே விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினரின் தலையாய கடமையாகும். ஆகவே அவர்கள் குறும்படங்கள் என்ற வடிவத்தை தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகமாகப் பயன்படுத்த வேண்டும். நம் நாட்டின் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை குறும்படங்களாக்கி ஏனைய பெண்களுக்கும் விழிப்புணர்வைக் கொண்டுவரவேண்டும். இந்த வகையில், 'இனி....', 'விடியலைத் தேடி' போன்றவை வெற்றித் தயாரிப்புக்கள். இவை போன்ற படங்களை இவர்களிடமிருந்து நாம் மேலும் எதிர் பார்க்கின்றோம்.

**— உலகமங்கை**



## உயிர் நாற்றுக்கள்

— செல்வசதீசன்

எல்லோருடைய கையிலும்
ஒரு பிடி
மண்ணுடன் வாருங்கள்
இவன் தான்
வாழ எமக்கொரு
நாடு வேண்டும் என்றவன்
உங்கள் கையில்
மண்ணை மட்டும் அள்ளாதீர்
அவன் ஆன்மீகத்தையும் எண்ணுங்கள்
ஏனெனில்!
அவன் புதைக்கப்பட்டவன் அல்ல
விதைக்கப்பட்டவன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**தமிழீழத்திலிருந்து வெளிவரும் வெளிச்சம் மாதாந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டது**



கப்டன் கஜன்

# திரைகடலோடி



லெப். கேணல் நாதன்

# தேசவிடுதலைக்கு உழைத்தவர்கள்

தாயக விடுதலைப் போராட்டத்துக்காக சர்வதேச ரீதியில் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளை பாரிஸ் நகரில் 26.10.96ல் சிறீலங்கா அரசு படுகொலை செய்துள்ளது. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அழித்துவிட சொந்த மண்ணிலேயே போர் புரிந்துவரும் பேரினவாத அரசு, தன் பயங்கரவாதத்தை வெளிநாடொன்றிலும் இப்போது முதன்முறையாக கொண்டு சென்று செயற்படுத்தியுள்ளது. மிகவும் இழிவான முறையிலும், அநாகரிகமான வகையிலும் இந்தக் கொலைகளைச் சிறீலங்கா அரசு செய்துள்ளது.

அரசியல் ரீதியாக வெல்லமுடியாத ஒரு நிலையிலே பயங்கரவாத நடவடிக்கை மூலம் தன் திட்டத்தை நிறைவேற்ற இந்தக் கொலையைச் சிறீலங்கா அரசு செய்துள்ளது. சர்வதேச உலகும், சர்வதேச தமிழ்ச் சமூகமும் எமது போராட்டத்துக்கு வழங்கிவரும் ஆதரவைத் தடுப்பதற்காகவும், ஆதரவுச் சக்திகளுக்கு அச்சமூட்டவும் இந்த நடவடிக்கையை அது மேற்கொண்டுள்ளது. 'சமாதானம்' என்ற பொய் வாசகத்துடன் எதிர்வரும் ஆண்டுகளில் எவ்வாறு போரை நடத்தலாம் என்பதற்கென ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் அரசின் இன்னொரு கபட நடத்தையே இந்தக் கொலைகள்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ள போராளிகளான லெப்ரினன்ட் கேணல் நாதன் (கந்தையா பேரின்பநாதன்), கப்டன் கஜன் (கந்தையா கஜேந்திரன்) ஆகியோர் எமது தாயக விடுதலைப் போராட்டத்துக்கு அளப்பரிய அளவில் பங்காற்றியவர்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு சர்வதேச நிதியினைத் திரட்டும் பொறுப்பில் நாதனின் திறனும் பங்கும் மிகப் பெரியது. தாயக மண்ணின் நிகழ்வுகளை வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் எடுத்தியம்ப பாரிஸ் ஈழமுரசு மூலமாகவும் புலம்பெயர்ந்த அம்மக்களது கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு உழைப்பதிலும் பரப்புரை செய்வதிலும் கஜன் பங்காற்றினார். சர்வதேச தமிழ்ச் சமூகத்தின் ஆதரவை எமது போராட்டத்தின்பால் திரட்டுவதற்கு இவர்கள் அரும்பாடுபட்டனர். இவர்களுடைய இந்தப் பணிக்கு முகங்கொடுக்க முடியாத சிங்களப் பேரினவாதம் இந்தப் படுகொலைகளை, வெளிநாடொன்றில் வைத்தே செய்ய முன்வந்தமையானது தமிழருக்கெதிரான பயங்கரவாதத்தன்மையை புரிந்துகொள்ள சர்வதேசத்துக்கு உதவும்.

ஒரு நாடோ அல்லது ஒரு இனமோ தனது பண்பாடு, அறிவியல், தத்துவம் போன்றவற்றையே உலக அரங்கில் அறிமுகப்படுத்தவும் பரப்பவும் முயலும். ஆனால், சிறீலங்கா சிங்கள அரசு தனது பேரினவாதத்தையும் பயங்கரவாதத்தையுமே வெளியுலகத்திலும் பரப்ப முனைகிறது.

ஈழத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக உலகின் எந்த மூலையில் செயற்பட்டாலும், குரல் கொடுத்தாலும் சிறீலங்கா அரசுக்கு அது விரும்பத்தகாத ஒன்றாகவேயுள்ளது. தமிழர்கள் எங்கே வாழ்ந்தாலும் அடிமைகளாக, மௌனப்பிறவிகளாக, உணர்வற்றவர்களாக வாழவேண்டும் என்பதுதான் சிங்கள அரசின் எதிர்பார்ப்பு.

சிங்களப் பேரினவாதத்தின் இந்தச் சவாலை எதிர்த்து தமிழ்ச் சமூகம் ஒருமித்து நின்று முகம் கொடுக்க வேண்டும்.

எதிரியின் எல்லாச் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது விடுதலைப் போராட்டத்துக்காக தம் இறுதி மூச்சுவரை உழைத்த இந்த மாவீரர்களுக்கு வெளிச்சம் தன் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. தாயக விடுதலைப் போராட்டத்துக்காக குரல் கொடுத்த ஒரு பத்திரிகை (ஈழமுரசு – பாரிஸ்) தன் ஆசிரியரை இழந்து தவிக்கும் துயரத்தில் வெளிச்சமும் பங்கெடுத்துக் கொள்கின்றது.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளும் புறமும்

**ஒடுக்குமுறைக்கு எதிராகப் போரிடுதலே உண்மை விடுதலை என்ற அடிப்படைத் தத்துவத்தைப் புதைத்துவிட்டு தமது லாபநட்டக் கணக்கின் வாதங்களை அதன்மேல் அடுக்கிக்கொண்டிருந்தார்கள்; வரலாற்றுக் குருடர்கள்.**

ஒரு காலத்தின் பிரச்சினைகளும் நிகழ்வுகளுமே அக்காலகட்டத்தின் கலையாகின்றது. கால நீட்சியில் இடையறாமல் பிரச்சினைகளும் அவற்றிற்கெதிரான தீர்வு முயற்சிகளும் நடக்கின்றன. இதுவே புதிய கலை பிறப்பதற்கான வழியைத் திறந்துவிடுகிறது. நீதிக்கும் அநீதிக்கும், உண்மைக்கும் பொய்க்கும் இடையில் சதா நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டமே கலையின் கருப்பொருள். அது அகம் சார்ந்தும் இருக்கும்; புறம் சார்ந்தும் இருக்கும். நீதியும் அநீதியும் உண்மையும் பொய்யும் எவ்வாறெல்லாம் ஒவ்வொரு காலப் பகுதியிலும் இயக்கமுறுகின்றனவோ அதன்வழிதான் புதிய கலை முகிழ்க்கின்றது.

ஈழத்தில் தமிழின் நவீன இலக்கியத்தின் ஆரம்பத்தில் சமூகப் பிரச்சினைகளே பேசப்பட்டன. 60–களில் வெளிவந்த அல்லது நிகழ்த்தப்பட்ட கலை வெளிப்பாடுகளில் இதனைத் திட்டவட்டமாகவும் பெரும்பான்மையாகவும் அவதானிக்க முடியும். சாதி மற்றும் பிரதேச வேறுபாடுகள், வர்க்கப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினை, லஞ்ச ஊழல் போன்ற விடயங்கள் அன்றைய கலை வெளிப்பாட்டில் முக்கியத்துவம் பெற்றன. இவற்றுடன் குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள், மது, முறையற்ற பாலியல் நடத்தைகள், சமூக வன்முறை என்பனவும் அவற்றில் இடம்வகித்தன.

இவை அன்றைய வாழ்வின் ஒருபக்கமாக இருந்த பிரச்சினைகள்தான். எனினும் அன்றே இனப்பிரச்சினையின் சிக்கல்களும் அவற்றிற்கெதிரான முனைப்பு நடவடிக்கைகளும் நடைபெற்று வந்தன. ஆனால், இனப்பிரச்சினை தொடர்பான படைப்புக்கள் அல்லது கலை வெளிப்படுத்தல்கள் அக்காலகட்டத்தில் பெருமளவில் முன்வைக்கப்படவில்லை. இது துக்கம் தரும் நிகழ்வே.

1956 இல் இனப்பிரச்சினையின் தவிர்க்கமுடியாத வெளிப்பாடாக சிங்களப் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம், தமிழர் வாழ்வில் பெரும் கேள்வியை எழுப்பி, அச்சத்தைத் தோற்றுவித்தது. இதன் தன்மையைப் புரிந்துகொண்ட சிலர் மட்டும் இனக்கலவரத்தை வெளிப்படுத்தியும் அரசியல் நிலைப்பாடு கொண்டதுமான படைப்புக்களை முன்வைத்தனர். ஏனையோர் சமூகப் பிரக்ஞையுள்ள கலை, இலக்கியம் என்ற வாய்ப்பாட்டுடன் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை பேசும் படைப்பே கலையென்று விமர்சித்து வாதிட்டு நிறுவமுற்பட்டு வந்தனர். சிங்களப் பேரினவாதத்தின் வளர்ச்சியைக் கணக்கிட்டு அதைக் கருத்திற் கொண்டோர் இனவாதத்திலிருந்து விடுபடுவதற்கானதும் பேரினவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டியதற்குமான படைப்புக்களை தம்மால் இயன்றளவு முன்வைத்தனரே தவிர அவர்களால் நிறுவன ரீதியாகச் செயற்பட முடியவில்லை.

ஆனால், இனவாதத்தின் போக்கையும் அதன் கொடூரத்தனத்தையும் அதன் வளர்ச்சியையும் பொருட்படுத்தாத அல்லது பெரிதுபடுத்தாத அணியினர் சமூகப் பிரக்ஞையுள்ள கலையென்பது சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளையும் அநீதிகளையும் ஒழிப்பதே என்று செயற்பட்டனர். அதேவேளை அவர்கள் நிறுவனமயப்பட்டுச் செயற்பட்டமை இங்கே கவனிக்கத்தக்கது. இவற்றுக்குக் காரணம் அன்றைய அரசியல் நிலைப்பாடு என்பதை நாம் அவதானிப்பில் கொள்ளுதல் அவசியம். தேசியக் கட்சிகளோடு இணைந்து நிற்கும் போது இவர்கள் நிறுவன ரீதியாக இயங்குவதற்கும் பலம்பெறுவதற்கும் அக்கட்சிகள் ஆதரவளித்தன. அன்று தேசியக் கட்சிகள் என்பவற்றோடு நின்றவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் ஆட்சியிலிருக்கும் கட்சியின் தயவையும் ஆதரவையும் பெறுவதற்காக சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து தம்லாபத்தை ஈட்டிக்கொண்டார்கள். அந்த விட்டுக்கொடுப்புக்களே இன்று அவர்களையும் சேர்த்து ஒரு பெரும் பிரச்சினையாக விரிந்து நிற்கிறது. இந்த விட்டுக்கொடுப்புக்கள் என்னவெனில் கொதிநிலையிலிருந்த ‘இனப்பிரச்சினையை முதன்மைப்படுத்தாது, அதேவேளை சமூகத்தின் உப பிரச்சினைகளை முதன்மைப்படுத்தியதே.

இங்கே ஒரு சுவாரசியமான உண்மையை அவதானிக்கலாம். வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறிய இவர்கள், அதாவது ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராடுவதாகக் கூறியவர்கள் செயல்முறையில் எதிர் நிலையிலேயே நின்றனர். இது மிகப் பாரதூரமான தவறாகும். உண்மையில் ஒடுக்கப்படும் மக்களை (இனரீதியாகவும், வர்க்க ரீதியாகவும்) விட்டு விட்டு, ஒடுக்கும் அதிகார அரசுடன் சேர்ந்தும் லாபத்தை ஈட்டிக்கொண்டனர். இது அமைப்பு ரீதியாகவும் உதிரியாகவும் நடந்தது. துயருறும் மக்களை விட்டு மிகமிகத் தொலைவில் சென்றார்கள். உரிமைகளுக்காக யாசிப்பவர்களாகவும், சமாதானத்துக்காக கெஞ்சுபவர்களாகவும் காட்டிக்கொண்டார்கள். ஒடுக்குமுறைக்கு எதிராகப் போரிடுதலே உண்மை விடுதலை என்ற அடிப்படைத் தத்துவத்தைப் புதைத்து விட்டு, தமது லாபநட்டக் கணக்கின்

**கருணாகரன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாதங்களை அதன்மேல் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்; இந்த வரலாற்றுக் குருடர்கள்.

பின்னர், 70களில் இந்த நிலைமை எல்லோருடைய கட்டுக்களையும் மீறி புதிய வடிவம் பெறத்தொடங்கியது.

70களில் இனப்பிரச்சினை முக்கிய இடமாகப் பரிமாணமடைந்தது. சிங்களப் பேரினவாதம் வளர்ச்சியடைந்து நிறுவனமயப்பட்ட பொலிஸ் இராணுவச் சக்திகளைக் கொண்டு தமிழின அழிப்பில் ஈடுபடத் தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில்தான் தமிழர்களின் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் எழுச்சி நடவடிக்கைகளை இராணுவமும் பொலிசும் நசுக்கத் தீவிரமாக முற்பட்டன. அரச பயங்கரவாதம் ஆரம்பமாகியது. அரசமைப்பில் ஏற்பட்ட சட்டங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதும் மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. இதில் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பிரச்சினைகள் முக்கிய பிரச்சினைகளாக அப்போது முன்னின்றன. இனவாதத்தின் காலிலேயே இந்தப் பிரச்சினைகள் பிறந்தன. 70களின் ஆரம்பத்தில் இந்தப் பிரச்சினைகளின் சாரத்தோடுதான் படைப்பிலக்கியங்கள் உருவாகின.

70 களிலிருந்து படைப்பிலக்கியத்தின் போக்கு புதிய திசையில் நகரத் தொடங்கியது. வர்க்க விடுதலை, சாதி மற்றும் பிரதேச இலக்கியம் என்று பேசியோரும் 70களின் இறுதிப் பகுதியில் இனப்பிரச்சினை பற்றிய இலக்கியத்திலேயே கவனம் செலுத்தினர். எல்லாப் பிரச்சினைகளையும் பின் தள்ளிவிட்டு இனப்பிரச்சினை பூதாகரமாக எழத்தொடங்கியதே இதன் காரணம். எனினும் அப்போதும்கூட இனப்பிரச்சினை – விடுதலைப் போராட்டம் என்பவற்றில் ஒரு பகுதிப் படைப்பாக்கவாதிகள் மட்டத்தில் தவறான கண்ணோட்டமே இருந்தது. அவர்கள் யதார்த்தத்திலிருந்து வெகு தொலைவில் நின்றார்கள்; சூழலையும் நிலவரத்தையும் விட்டு எங்கோ சென்றுகொண்டிருந்தனர். 80கள் வரையில் இவர்களிடம் இந்த இழுபறி தொடர்ந்தது. 80களில் ஒட்டுமொத்தமாக ஈழத்தின் தமிழ் இலக்கியம் என்பது விடுதலைப் போராட்ட அரசியல் இலக்கியமாகவே வெளிப்பாடடைந்தது. 80களில் முனைப்படைந்த ஆயுதப் போராட்டம் ஈழத்தமிழர் விடுதலைக்கு சாத்தியமான ஒரு வழியாக தமிழ் மக்களால் உணரப்பட்டது. இளைஞர்கள் முன்ன

# துளிர்ப்போம் எனும் நம்பிக்கையில்

- தேவதாஸன் எழில்மங்கை
(போராளி) தமிழீழம்

நீங்கள் அறிந்தீர்களா?
நாங்கள் சிறுகச் சிறுகச்
சேமித்துச் சேர்த்த சொத்துக்களை,
வீட்டை, வளவை, ஊரை
உறவினர்களை உயிர்ப்பலி கொடுத்து
பிழைத்த மற்றவையுடன்
பின்நோக்கி ஓடி வந்ததை

சூரியக் கதிர்களால்
எம் பிறப்பிடமாகது "யாழ்ப்பாணம்"
சுட்டெரிக்கப்பட்ட வேளையில்
கிளாலிக் கடல் தாண்டி
புலம் பெயர்ந்து
காலாற ஒரு குடிசை கட்டி
ஓய்வெடுத்து அமர முன்பாக

உண்மை வெற்றி என்று
சங்கேதப் பெயருடன் சிங்களவன்.
கிளிநொச்சி நகருக்குள்
ஆக்கிரமிப்பாளன் புகமுயல
நாங்கள் அகதிகளாய்.........
அனாதைகளாய்......
உடற்சுமையுடன் மனச்சுமை அழுத்த

வன்னியின்
கிறவற் தரைப் புழுதியில்
தூசி படித்த மேனியுடன்
தலையில் சிறு துணிமூடை
மற்றெல்லாம் அந்தப்படி
அவ்விடத்தில் அழிந்து போய்
இயலாமையால் துவண்டு வாடி

குழந்தைகள், கர்ப்பிணிகள் முதியவர்
இளைஞர்களென இரண்டு இலட்சம்.
தமிழருடன் தெருக்களில் "நானும்"
எல்லாக் குழந்தைகளும்
பாவம் பசி கிளற
போர்க்கால நிலை என்பது
புரியுமா அவர்களுக்கு?

ஒட்டிய வயிற்றுடன்
நடக்கப் பலனற்றுச் சோர்ந்ததை....
முப்பது நாட்களாயும்
நிவாரணம் எதுவுமற்று
பட்டினிச் சா விழிம்பில் தவித்ததை.....
"கோடை" ஆவணி ஆனால் வெய்யிலில்
இயற்கையும் பகைவனாய் இருந்ததை
அறிவீர்களா நீங்கள்?

பரந்துள்ள வனத்துள் பரவி
வீசப்படும்
ஒவ்வொரு உரல் போன்ற குண்டிற்கும்
உயிர் தப்பி
வாய்க்கால் மோட்டைகளில்
நீர் வற்றிப் போன வழித்தடம் பார்த்து
பரிதாபமாய் கண்ணீர் கசிய

படுக்கப் பாயின்றி
மனைவியின் சேலையே
குடும்பத்தின் படுக்கையாய்...
விடிந்தால்
உயிர்ப்போராட்டம்
அன்றேல் உணவுக்காய்ப் போராட்டம்

நானும் மனைவியும் விழித்து
மேல் தெரியும் வானம் போல்
வெறித்துப் போய்ப் பார்த்தோம்
வார்த்தைகள் எதுவுமின்றி
வெறுமையாகியது எம் நெஞ்சம் – எனினும்
துளிர்ப்போம் எனும் நம்பிக்கையில்
நானும், மனைவியும், அயலவர்களும்.





www.tamileelamarchive.com

ணிச் சக்தியாக போராட்டத்தில் தம்மை முழுவதுமாக இணைத்துக் கொண்டனர். மக்கள் ஆயுதப் போராட்டத்துக்கு நேரடியாக ஆதரவளித்தனர். இந்த வரலாற்று வளர்ச்சிப்போக்கின் அடியொற்றியே படைப்பாளர்களும் விமர்சகர்களும் நிற்கவேண்டியதாயிற்று. சிங்களப் பேரினவாதம் தமிழ் பேசும் அனைத்து மக்களையும் ஒடுக்குதலுக்கும் அழிப்புக்கும் உள்ளாக்கிவரும் சந்தர்ப்பத்தில் தமிழர் மத்தியிலிருந்த சாதி, பிரதேச வேறுபாடுகள், வர்க்கப் பிரச்சினைகள் என்பன இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. அரச பயங்கரவாதத்திற்கு 'தமிழ்' என்ற பொது அடையாளம் ஒன்றுதான் இலக்கு. அதற்குப் பிரதேசம், பால், வயது, வர்க்கம், சாதி, மத வேறுபாடு எதுவும் பொருட்டல்ல; அவசியமுமல்ல. எனவேதான் தமிழ் மக்களும் தமது எதிர்ப்புணர்வையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஒருமித்துநின்று மேற்கொள்ளவேண்டியிருந்தது. தமிழ் மக்களின் அரசியல் எழுச்சியை அடக்குவதற்காக அரசு மேலும் அரசபயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.

80 களின் முற்பகுதி இலக்கியம் அரசபயங்கரவாதத்தைக் கூறுவனவாகவும் அதை எதிர்க்கும் எதிர்ப்புணர்வு இலக்கியமாகவும் வந்தது. ஒரு காலத்தின் பிரச்சினைகள் இலக்கியமாக்கப்படும் போது அவை இரத்தமும் சதையுமான மெய்மைத் தன்மை மிக்க படைப்பாக என்றும் உணரப்படும். அவற்றின் பெறுமானமும் உணர்வு ஆழமும் மிக அதிகமானது. அனுபவம் சார்ந்து வரும் இத்தகைய படைப்புக்களின் சாட்சியங்கள் ஏனைய மனிதர்களையும் உலுப்பிவிடும் உணர்வு ஆழம் கொண்டனவாக இருப்பதுடன் அவர்களை இந்தப் படைப்புக்களூடனும், இந்தப் படைப்புக்களில் பேசப்படும் பிரச்சினைகளோடு நெருக்கமாக உறவுகொள்ளத் தூண்டும் ஆற்றலுள்ளனவாகவும் இருக்கும். 80களின் இலக்கியம் இப்படித்தான் இருந்தது. 80களில் வெளிவந்த ஈழத்தின் கலைகளுக்கு தமிழக மக்களிடமிருந்தும் கலைஞர்களிடமிருந்தும் பரவலான அறிமுகமும் ஆதரவும் கிடைத்தது. அவர்களை எமது போராட்ட ஆதரவுச் சக்தியாக இணைப்பதில் அவை வெற்றியும் பெற்றன. ஆயினும் அப்போதும் தொடரும் சாப நிழலாக அரச அமைப்புக்களின் பரிசுகள், போட்டிகள், தேர்வுகள் என்ற ரீதியில் சில தமிழிலக்கியப் படைப்பாளர்கள் தம் நலனுக்காக மழுப்பல் இலக்கியம் படைத்தே வந்தனர். இவர்களின் எண்ணிக்கை குறைவானது என்றும் இவர்களை மக்கள் புறந்தள்ளியே வந்தனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

80 களின் பிற்கூறுக் கலைகளில் ஒரு வளர்ச்சியும் அதனோடு இணைந்த மாற்றமும் நிகழ்ந்தது. போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதோடு அரச பயங்கரவாதத்திற்கு மக்கள் எவ்வாறு முகங்கொடுப்பது என்பதும் ஓர் போர்க்கால வாழ்வுக்கான முன்னேற்பாட்டை வலியுறுத்துவனவாகவும் இந்தக் கால கட்டத்துக் கலை இருந்தது. அரசியல் சதுரங்கத்தில் வீழாமல் போராட்டத்தைக் காப்பாற்றி முன்னெடுக்க வேண்டும் என்ற அவதானம் அன்றைய இலக்கியத்தின் அடிநாதம். அன்றைய எழுச்சி அரசின் இன ஒடுக்கலுக்கெதிரான மிகப்பெரிய சவால். அத்தோடு அரசின் பகிரங்கப் போர் நடவடிக்கைகளால் மக்களடைந்த துன்ப, துயரங்கள், அவர்களின் நெருக்கடி வாழ்வு என்பனவும் நெருக்கடி வாழ்வினூடும் போராட்டத்துக்கு மக்கள் வழங்கும் ஆதரவு, ஈடுபாடு என்பவை நிரந்த விடுதலைக்கான சகித்தல்தான் என்றும் அன்றைய படைப்புக்கள் இனங்காட்டின.

**போர் – அதன் தாக்க விளைவுகள் என்பவனவே இன்றைய கலையின் பிரதான பொருள். ஒரு நிரந்தர விடுதலைக்கு இந்தப் போரை எதிர்கொள்வதே சாத்தியம் என்பதும் இதில் அடங்கும்.**

80களின் பின்பகுதியில் தமிழீழத்தின் வாழ்வும், பிரச்சினைகளும், சிக்கல்களும் 87க்குப் பின்னர் வெளியான பெரும்பாலான படைப்புக்களில் பதிவாகியுள்ளன. இந்திய இராணுவ வருகையும் அதன் செயற்பாடுகளையும் விளைவுகளையும் இந்தப் படைப்புக்களினூடு ஒரு வாசகன் நன்கு அறிய முடியும்.

இப்போது –

90களில் இன்னொரு பாய்ச்சலும் புதிய முறைமையும் ஏற்பட்டுள்ளது. இனவாதத்தின் முதிர்ச்சியும் போராட்டத்தின் வளர்ச்சியும் போர் ஒன்றில் வந்து சேர்ந்துள்ளது. இது தவிர்க்க முடியாததும்கூட.

போர் – அதன் தாக்க விளைவுகள் என்பனவே இன்றைய கலையின் பிரதான பொருள். ஒரு நிரந்தர விடுதலைக்கு இந்தப் போரை எதிர்கொள்வதே சாத்தியம் என்பதும் இதில் அடங்கும்.

எங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், எங்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவும் இன்றைய கலையில் தொனிக்கிறது. இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயரும் துயர வாழ்விலிருந்து எதிரியை வென்ற மிக்கும் தீரச்செயல் வரைக்கும் சூழலுடன் பதியமான நம் வாழ்வின் பிடுங்குதலிலிருந்து உறவுகள் சிதைந்த நிலையில் தனித்து நின்று வாழ முயற்சிக்கும் ஒவ்வொரு கணப்பதிவும் அதறகப்பாலிலும் இன்றைய கலையின் பொருள் இருக்கிறது.

நம் வாழ்வு கடந்த 40 – 50 ஆண்டுகளில் கண்டுள்ள மாற்றத்துக்கு இந்தக் காலத்தின் கலைகள் சாட்சி. எவரெவர் எந்தெந்தத் திசைகளில் நின்றார்கள்; எவற்றின் பெறுமானம் எத்தகையது என்பவற்றையெல்லாம் அவ்வக்காலக் கலைவெளிப்படுத்தலுக்கூடாக வாசகன் – பார்வையாளன் இனங்காண்கிறான். பார்வையாளனின் – வாசகனின் இந்த இனங்காணுதல் என்பதே கலைஞனதும் ஒரு கலையினதும் நிலை எத்தகையது என்பதையும் தீர்மானிக்கும். கலைக்கும் கலைஞனுக்கும் இருக்கும் பெறுமானத்தின் சம விகிதமே வாசகன் அல்லது பார்வையாளன் இடத்தும் உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள 40 – 50 ஆண்டு காலத்தின் படிமுறை வளர்ச்சியாய் ஏற்பட்டுள்ள கலைப் போக்கினையும் உட்சாரத்தையும் அவதானிக்கும் ஒருவர், தமிழர்களின் பாரிய பிரச்சினையாக தேசிய இனப்பிரச்சினையே இருந்து வந்துள்ளதைக் காணமுடியும். இந்தப் பெரும் பிரச்சினை அன்றிலிருந்து இன்று வரை தமிழர் வாழ்வை முற்றுகைக்கும் நெருக்குதலுக்கும் உட்படுத்தி வந்துள்ளது என்பதையும் அவதானிக்கலாம். சமூகப் பிரச்சினைகளின் உள்ளடக்கத்தைப் பேசும் அதேநிலையில் தமிழர் வாழ்வின் அரசியல் பிரச்சினையையும் இணைத்துச் சொல்லும் இன்றைய கலையைப் போன்று அன்று இல்லாதிருந்ததே பெருங்குறை. தாம்,



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தம் நலன் என்று செயற்பட முனைந்த சிலரின் முனைப்படைந்த நடவடிக்கைகளாலேயே இந்தத் தவறான பிரதிபிம்பம் சிருஷ்டிக்கப்பட்டது.

ஒரு கலைஞனுக்கு இருக்கவேண்டியது காலத்தை ஊடறுத்துப் பார்க்கும் திறனும், பிரச்சினையின் சாரத்தை அதன் தாற்பரியத்துடன் புரிந்துகொள்ளும் ஆற்றலும், இவற்றோடு தனது சிந்தனையையும் அனுபவத்தையும் படைப்பாகக் கொண்டுதரும் ஆளுமையுமே. காலத்தின் வளர்ச்சிப் போக்கில் ஒரு பிரச்சினை எவ்வாறு அற்றுப்போகும் என்னும் தீர்க்கமான பார்வையுடைய கலைஞன் தன்னுடைய படைப்பின் வளர்ச்சியிலும் பார்வை விருத்தியிலும் முன்னிற்பான்.

ஒரு சமூகம் மாற்றத்தை நோக்கி நகரும் போது, அதன் பல்வேறு நடத்தைகளும் ஒழுக்கமடைந்துவரும். அப்போது மாற்றத்தை நோக்கி நகருவதற்கான தடைகள் பற்றியும் வழிமுறைகள் பற்றியும் தீவிரமாக யோசிக்கப்படுமேயன்றி இறந்துபோகும் பிரச்சினைகள் குறித்து பிரலாபிக்க வேண்டிய அவசியம் குறைவு. எமது போராட்ட எழுச்சியிலும் முனைப்பிலும் கூட இதனை அவதானிக்கலாம். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நெருக்குதலும் அதற்கெதிரான போரிடலிலுமே நாம் பெரும் கவனம் கொள்ளவேண்டியுள்ளது. இதுவே முதன்மைப் பிரச்சினை. இந்த முதன்மைப் பிரச்சினையிலும் அதனை எதிர்கொள்வதிலும் சமூகத்தின் உபபிரச்சினைகள் காலப்போக்கில் மறைகின்றன. அதேவேளையில் சில பிரச்சினைகளில் மாற்றம்கூட ஏற்பட்டுள்ளது; ஏற்பட்டும் வருகின்றது. இதுவே போராட்டத்தின் இயல்பு. இந்நிலையில்தான் தமிழ்த் தேசிய ஒருமைப்பாடு சிங்களப் பேரினவாதத்திற்கெதிரான குரலாக ஓங்கி ஒலிக்கத் தொடங்கியதும் செயற்படும் தன்மையைத் தூண்டியதும்.

ஆனால் இன்றும் ஒரு தீர்க்கமான அரசியல் பார்வையோ நடைமுறைச் சாத்தியம் பற்றிய சரியான கணிப்போ, சூழலின் யதார்த்தம் குறித்த கவனிப்போ இல்லாமல் 'தேசிய இலக்கியம்' என்ற வாய்ப்பாட்டுடன் சிலர் பாடுபடுகின்றனர். அரசினதும் அரச சார்புடைய தொடர்புச்சாதனங்களிலும், கலை இலக்கிய அமைப்புக்கள் மற்றும் கலாச்சார நிறுவனங்களிலும் இவர்கள் தம் செயற்பாட்டை தொடர்கின்றனர். பல சந்தர்ப்பங்களிலும் முண்டியடித்துக்கொண்டு போட்டிகளென்றும் இலக்கியப் படைப்

## சிறீலங்காவின் 50வது வருட ஜனநாயக வளர்ச்சி

சிறீலங்காவின் ஜனநாயகம் எத்தகைய வன்முறைக் களமாக மாறி வருகிறது என்பதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவல சுட்டுக் கொல்லப்பட்டமையும், இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுசந்தா புஞ்சிநிலமேயும், முன்னாள் இரத்தினபுரி மாவட்ட, மேஜர் ஒருவரும் தேடப்படுவதும் சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

ஆனால் இவ்வன்முறைச் சம்பவமானது, சிறீலங்கா அரசியலில் முதல் சம்பவமல்ல. கடந்த பல வருடங்களாக இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. இதனை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியாளர்கள் என்றோ, பொ.ஜ. முன்னணி ஆட்சியாளர்கள் என்றோ வேறுபடுத்திக் காட்ட முடியாது.. இரு தரப்பினரும் வன்முறையில் ஈடுபட்டதுக்கான போதிய சான்றுகள் நிறையவே உண்டு. ஆகையினால் நாலந்த எல்லாவல சுட்டுக் கொல்லப்பட்டமையானது, சிறீலங்கா அரசியலில் உருவாகிவிட்ட வன்முறைக் கலாச்சாரத்தில் ஒரு அம்சமென்றே கொள்ளுதல் பொருத்தம். ஆனால் இவ் வன்முறைக் கலாச்சாரத்தை சிங்கள ஆட்சியாளர்கள் தொடக்கி வைத்தது தப்பில்லை என்பது மட்டும்தான் முக்கியமானது. சிங்கள ஆட்சியாளர்கள் தமது நாட்டிற்கு அரைநூற்றாண்டுகால ஜனநாயக பாரம்பரியம் உண்டு என மார் தட்டுவது உண்டு. ஆனால் சிறீலங்காவில் 50 வருட காலம் வரையும், ஜனநாயக அமைப்பின் ஆட்சி முறையும் நடைமுறையும் இருந்ததே ஒழிய அங்கு ஜனநாயகப் பண்புகள் எவையும் பேணப்பட்டதாக இல்லை. எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் ஆட்சியில் இருக்கும் போது எந்தத் தரப்பினரும் எதிர்க்கட்சியினரின் ஜனநாயகப் பண்புகளை மனத்தில் கொண்டு நடக்கவில்லை. அத்தோடு ஆட்சியில் எவர் இருந்த போதிலும் அரசியல் கோரிக்கைகளை அவர்கள் வன்முறை கொண்டு அடக்க முற்பட்டனர். இவை சிறுபான்மை மக்கள் கொண்ட கோரிக்கைகளாக இருந்தாலும் சரி, சிங்கள மக்கள் கொண்ட கோரிக்கைகளாக இருந்தாலும் சரி வன்முறை கொண்டு அடக்குவதிலேயே அரசு முயற்சித்தது. அதாவது அரசியல் இராஜதந்திர அணுகுமுறைகள் என்பது ஆட்சியாளர்களிடம் காணப்படவில்லை. இதன் காரணமாகவே பல ஆண்டு காலமாக இப் பிரச்சினை தீர்க்கப்படாமலும் இரத்தக்களறி தொடர்வதாகவும் உள்ளது. ஆனால் இவ்வரசியல் கோரிக்கைகளுக்கு எதிராக வன்முறையை ஆட்சியாளர்கள் ஏவிய பொழுது முழு இலங்கைக்குமான ஆயுத கலாச்சாரத்தை அறிமுகம் செய்கின்றனர் என்று அவர்கள் கருதவில்லை. இது சிறீலங்காவின் ஜனநாயகப் பாரம்பரியத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகவே கருதினர். ஆனால் இவ்வன்முறைக் கலாச்சார வழி முறையும் சிங்கள ஆட்சியாளர்களின் பாசையில் கூறுவதானால் ஜனநாயக வடிவில் சிங்கள இளைஞர்களையும் யுவதிகளையும் கொன்றொழிப்பதற்கு வழிசமைத்தது. அதாவது தனது அரசியல் எதிர்ப்புகளை அடக்குவதற்கான வழிமுறையாக ஆயுத வன்முறை கைக்கொள்ளப்பட்டது.

ஆனால், இன்று அதாவது இனப்பிரச்சினைக்கு ஆயுத வன்முறை மூலம் சிங்கள ஆட்சியாளர்கள் பதிலளிக்க முற்பட்டபோதே சிறீலங்கா ஜனநாயகத்தில் ஆயுதக் கலாச்சாரம் பூரணம் பெற்றது என்பதே சரியானதாகும். இன்றைய நிலையில் அதன் வளர்ச்சியானது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் சுட்டுக் கொல்லும் நிலை வரை சென்றுள்ளது மட்டுமேயாகும். ஆகையினால் சிறீலங்கா ஜனநாயகத்தில் புற்றுநோயாக ஆயுதக் கலாச்சாரம் என்றோ புகுந்து விட்டது என்பது நிதர்சனமாகும். இதனைக் குணப்படுத்துதல் என்பது விரைவில் சாத்தியமானதில்லை. ஏனெனில் சிறீலங்காவின் ஜனநாயகத்தில் இருந்து இப்புற்று நோயை அகற்றுவதெனில் ஒட்டுமொத்தமாக இலங்கை பூராவும் அரசு கைக்கொள்ளும் ஆயுத வன்முறையில் இருந்து விடுபட அது தயாராக இருந்தால் மட்டுமே அது சாத்தியமானதாகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாக்கங்கள், பேச்சு, நாடகம், கலந்துரையாடல் என்றும் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றார்கள். இனவாத அரசின் சாகித்தியமண்டலப் பரிசினைப் பெறுவதற்காகவும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் இலக்கிய விழாக்களை 'முற்போக்கானவை' என்று கூறியும் முன்னின்று முண்டியடிக்கிறார்கள்.

'தாம் அரசியல் பேசவில்லை; தமது படைப்புக்களில் அரசியல் இல்லை; சமூகப் பிரச்சினை பற்றியும் சமாதானம் பற்றியுமே பேசுகின்றோம்' என்று ஒரு வாக்குமூலத்தை இவர்கள் முன்வைக்கலாம். ஆனால், இனப்படுகொலை செய்யும் அரசின் அங்கத்துவமாகச் செயற்படும் அமைப்புக்களுடன் பாதிப்படையும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர் எந்த நிலையில் இணைந்து செயற்பட முடியும்? இவற்றைவிட போரில் மக்களுடையும் துன்பங்களைப் பற்றியும் துயரங்களைப் பற்றியும் எழுதுகின்றோம்; பேசுகின்றோம் என்று கூறி மக்கள் மீதும் சமூக வாழ்வின் மீதும் அதிக அக்கறை கொண்டவர்களாக சிலர் காட்டிக்கொள்கின்றனர். போராட்ட இலக்கியம் படைத்தோர் என்ற பட்டியலிட்டு தம்மை அந்த வகையிலும் நிலைநிறுத்திக் கொள்கின்றனர். உண்மையில் மக்கள் அனுபவிக்கும் துன்ப வாழ்வுக்கும் துயரத்துக்கும் அரசே காரணம் என்பதை தெளிவாக்குவதில்லை இவர்கள். பிரதான பிரச்சினையாகவும் தேசியப் பிரச்சினையாகவும் தேசிய இனப்பிரச்சினை இருக்கும்போது அதைத் தவிர்த்து சாதி, பிரதேச, வர்க்கப் பிரச்சினைகளை முக்கிய பிரச்சினைகளாக சித்தரித்துக்காட்டும் போது தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களை திசைதிருப்பி விட முனைகின்றனர். அத்தோடு போரினால் மக்களுக்கு ஏற்படும் வாழ்க்கை நெருக்கடிகளையும் அவலங்களையும் மட்டும் பெரிதாகக் காட்டி மக்களுக்கு அச்சமூட்டி அவர்களைப் போராட்டத்திலிருந்து பிடுங்கியெடுக்கவும் முனைகின்றார்கள். இதனோடு, நடுநிலையாளர்களென்று கூறும் ஒரு சாராரும் உள்ளனர். ஒரு போராட்டத்தில் 'நடுநிலை வகிக்கின்றோம்' என்று கூறி எவரும் நிற்பது சாத்தியமற்றது. அது மறைமுகமாக எதிரிக்குச் சாதகமாகவே அமையும். சரி அல்லது பிழை என்ற ஏதோ ஒன்றில்தான் நிற்கமுடியும். இரண்டுக்குமிடையில் எப்படி ஒன்றிருக்க முடியும்?

இன்றைய கல்வியில் 'படைப்புக்களில் ஆய்வு முறைமை' என்ற ரீதியில் கற்றல் செயற்பாடு நடைபெறுகிறது. ஆயின் ஒரு கால வாழ்வின் யதார்த்தம் படைப்பாக்கப்படும்போதுதானே அந்தக் காலப் படைப்பினூடாக அந்தக் காலத்தையும் பிரச்சினைகளையும் அக்கால மனிதர்களின் வாழ்வையும் இனங்காண முடியும். இவற்றை இன்று புறந்தள்ளிவிட்டு இவற்றுக்கு மாறான ஒரு தோற்றத்தைக் காட்டும் படைப்புக்களூடாக எக்காலத்தையும் எந்தப் பிரச்சினைகளையும் எந்த மனிதர்களையும் காணமுடியும்? இவர்கள் ஏன் இதுபற்றிக் கூட யோசிக்கவில்லை?

இன்று யாழ்ப்பாண வாழ்வு எத்தகையதாக இருக்கிறது? 1996 ஏப்பிரலுக்குப் பின் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள் யாழ்ப்பாண மக்கள் வாழ்வில் அனுபவிக்கும் 'வாழ்வியல் யதார்த்தம்' மெல்ல மெல்லப் படைப்புக்களில் பதிவாகத் தொடங்கியுள்ளது. மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் பிரச்சினைகள் அவர்களின் மனவோட்டங்கள், உணர்வுகள் ஒருபுறமும், மறுபுறத்தில் அங்குள்ள சமூக வாழ்வு எத்தகைய நிலையில் சீரழிந்து செல்கின்றது என்பதைக் காட்டுபனவாகவும் அவை காணப்படுகின்றன. மறுபடியும் பாலியல் ஒழுக்கக் கேடுகள், கசிப்பு உற்பத்தி, ஊழல், லஞ்சம், அதிகாரம், திருட்டு, ஒழுக்கக் கேடான வீடியோப் படங்கள், கள்ளச் சந்தை, கோஷ்டி மோதல்கள் போன்றன நடைபெறத் தொடங்கியுள்ளன. இவற்றோடு மீண்டும் இராணுவச் சுற்றிவளைப்புக்களும் கைதுகளும், சித்திரவதைகளும், காணாமற் போதல்களும், மனிதப் புதைகுழிகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இவை வேதனைக்குரியவை.

இன்றைய யாழ்ப்பாணத்தின் இந்த வாழ்வு எல்லாத் தடைகளையும் மீறி மெய்மைத்தன்மையுடன் கலையாக வெளிப்பாடடையத் தொடங்கியுள்ளது. தங்கள் வாழ்வுக்கு தாங்களே உண்மையாக தமது அனுபவத்தையும் கணிப்பையும் சரியாக முன்வைத்து நகரும் போது ஒரு புதுவாழ்வு மலரும்.

சரியான வகையில் சமூகப் பிரச்சினையையும் அரசியல் பிரச்சினையையும் கணக்கிட்டுப் பேசும் இலக்கியமாக இன்றைய இலக்கியம் பரிணமித்து இருக்கின்றது. இந்த அடிப்படையை புரிந்துகொள்ளாதவர்கள் அரசியல் தெளிவற்ற, சமூகத்தை ஊடறுத்துப் பார்க்கும் பார்வையற்ற படைப்பாளிகளே. ★



தீயை அறிந்தவர்கள்
வரலாறு
தீயில் எரிந்தது 'போகியாய்'

மறுக்கப்பட்டவர்கள்
கிளர்ந்த போது
ஒடுக்கப்பட்டது 'புராணமானது'

முப்புரி நூலும்
முழு நீலக் கண்களும்
இப்பொழுது "அறிந்தவர்களை"
இயங்க விடுவது இல்லை

தலைமுறையாய்
தலைவர்களைக் கடவுளாக்கி விட்டு
இமைப்போதும் 'அறிந்தவர்கள்'
இறைந்திருக்கிறார்கள்
"பிரார்த்தனைப் பிணங்களாய்"

பெருவெளியில்
பயணிக்க வேண்டியவர்கள்
சமவெளியை இழந்து
கடைவிழியில் நீர்த் திரள
'கண்ணீரில் பொங்கல்'
வதையும் இனத்திலிருந்து
வாழ்த்தெப்படி பிறக்கும்

தலைமுறை தாயகம் தீர்க்க
தொலைவில் "தமிழீழம்"
தந்தையைத் தகனம் செய்த
நூற்றாண்டின் இடைவெளியில்
மகனொருவன் போரிடுகிறான்
மறுபடியும் "மானம் காக்க"

எழுச்சிப் பெற வேண்டிய
மகிழ்ச்சிக் குரல் இடுவோம்
"பிரபாகரன் என"

-அமுதமொழி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்மையின் மதிப்பு எங்கே போய்க்கொண்டிருக்கிறது...?

இன்று ஊரெங்கும், உலகமெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருப்பதில் அழகிப் போட்டிகளும், முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. 1951 இல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டு, மேற்குலக நாடுகளில் பரவிய இவை இன்று கீழைத்தேய நாடுகளையும் தீரா நோய் போலப் பலமாகப் பீடித்துள்ளன.

ஒரு காலத்தில் சோவியத் யூனியன், சீனா போன்ற சில நாடுகளில் அழகிப் போட்டி என்ற மூச்சுக்கூட விடமுடியாது. இன்று ஒரு சாதாரண, சிறிய நாடுகள் கூட தம் நாட்டை விளம்பரப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகிவிட்டது. பல நாடுகள் தமது பொருளாதார இலாப நோக்குக்காகவே இப்போட்டிகளை நடத்துகின்றன. தம் நாட்டுப் பெண் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அப்பெண்ணின் மூலம் வெளிநாட்டு மூலதனங்களை வளைத்துப் போட முயற்சிக்கலாம் என்ற பேராசையுடனேயே அரசுகள் அப்போட்டிகளை ஊக்குவிக்கின்றன. இனவாதம் மிதமிஞ்சிப் போயிருக்கும் சின்ன நாடான சிறீலங்கா கூட தன் நாட்டின் 'அழகி' என நடுவர்கள் தீர்மானித்த பெண்ணை உலகப் போட்டிக்கு அனுப்புகிறதென்றால், அரசுகளின் பேராசையை என்னவென்பது?

அண்மையில் உலக அழகிகளாக இரு இந்தியப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டுக்கான போட்டி நடப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட இடம் இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள பெங்களூர். போட்டியை இந்திய நிறுவனம் ஒன்று பொறுப்பேற்று நடாத்தியது. 'இது இந்தியாவுக்குக் கிடைத்த பெருமை, இதனால் இந்தியா உலகப் புகழ் பெறுகிறது' என்றெல்லாம் இந்திய முதலாளிகள் மார்தட்டிக் கொண்டிருந்த போதுதான் அந்தக் குரல் கேட்டது.

"இந்த ஆபாசப் போட்டியை நடக்க அனுமதித்தால் தீக்குளித்து உயிரையே மாய்த்துக் கொள்வோம்" என்று பெண்கள் அமைப்பு ஒன்று எதிர்ப்பைக் காட்டியது. இதனைத் தொடர்ந்து பல பெண்கள் இப் போட்டிக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். சட்டசபையில் இருந்து தெரு நுனிவரை போட்டி பற்றிய விவாதங்கள் தொடர்கின்றன.

"பெண்கள் ஒலிம்பிக் போட்டியில் வென்றிருந்தால், நோபல் பரிசு பெற்றிருந்தால் அதைப் பாராட்டலாம்.

பெண்களை சமூகம் கௌரவமானவர்களாகப் பார்ப்பதில்லை. இப்போட்டிகள் பெண்கள் ரசிக்கத் தகுந்தவர்கள், அனுபவிக்கத் தகுந்தவர்கள் என்ற எண்ணத்தைப் பரப்புகின்றன. பெண்கள் என்றால் அழகாகத்தான் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை இன்னும் வலுவாக்குகின்றன.

பெண்ணை மனிதராகப் பார்க்க வேண்டும். அவளுடைய சுய கௌரவத்தை மதிக்க வேண்டும்".

என்றெல்லாம் பெண்களின் குரல் கேட்கின்றன.



உலக அழகிப் போட்டியை எதிர்த்து நடைபெற்ற தீக்குளிப்பும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும்



போட்டியை நடாத்தியே தீருவதென்று சம்பந்தப்பட்ட நிறுவனமும், போட்டி நடந்தால் உலக அழகிகளை அரபிக்கடலில் தூக்கி எறிவோம் என்று எதிர்ப்பாளர்களும் மாறிமாறி கூறிக்கொண்டிருக்க,

அழகிப் போட்டிக்கான ஏற்பாடுகள் எந்தத் தடையுமின்றி நடந்தேறி தேர்வு முடிந்துவிட்டது.

நிகழ்ச்சி நடைபெற்ற மைதானத்தில், நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பாக, வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டு உச்ச எதிர்ப்புக் காட்டப்பட்டது. ஒரு இளைஞர் தீக்குளித்துள்ளார்.

அழகிப் போட்டிகள் ஆபாசமானவை. பெண்களைக் கொச்சைப் படுத்துபவை என்றெல்லாம் போட்டிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பெண்களை, பெண்கள் அமைப்புக்களை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் அழகிப் போட்டியையும் விட ஆபாசமாக தேவையற்ற விளம்பரங்களில் (சிகரட், ஆண்களுக்கான உடைகள்) பெண்கள் காட்டப்படுகின்றார்களே, இந்தியச் சினிமா பெண்களைப் பாலியல் பதுமைகளாக, சிறுமைப்படுத்திக் காட்டுகிறதே? இவற்றையெல்லாம் இந்தப் பெண்கள் அமைப்புகள் எதிர்க்குமாயின் பெண் உரிமைக்கு எதிரானவை என்று தடைசெய்யுமாயின், அது எல்லோராலும் வரவேற்கத்தக்க மாற்றமாக இருக்கும்.

ஒரு பெண்ணுக்கும் அவளைச் சார்ந்தவர்களுக்கும் பெருமை சேர்ப்பது பெண்ணின் அறிவும் ஆளுமையும் தான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்நிலைவாதம் (Feminism) என்றால் என்ன?

பெண்நிலைவாதம் (Feminism) என்றால் என்ன? இதனை ஓர் அண்மைக்காலக் கிறுக்குத்தனம் எனக் குறிப்பிடலாமா?

பெண்நிலைவாதம் என்ற சொல் 19–ஆம் நூற்றாண்டிலும் 20–ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முதன் முதலாக உபயோகிக்கப்பட்டது. அப்போது பெண்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தையே அது குறித்தது.

அவை,

★ கல்வி, வேலைவாய்ப்பு, உரிமைகள்

★ சொத்துடைமைக்கான உரிமை

★ வாக்களிக்கும் உரிமை

★ பாராளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை

★ பிறப்புக்கட்டுப்பாடு செய்யும் உரிமை

★ விவாகரத்து செய்யும் உரிமை

போன்ற ஏனைய உரிமைகள் ஆகும்.

மேற்குறிப்பிட்ட உரிமைகள் யாவும் இப்போது எமக்குக் கிடைத்துள்ளன. எனவே இன்று பெண் விடுதலை எனக் கருதப்படுவது யாது?

இன்று பெண்நிலைவாதம் பாரபட்சமான தன்மைகளுக்கெதிரான சட்டரீதியான சீர்திருத்தங்கள், கட்டுப்பாடுகளை அகற்றுதல் ஆகிய எல்லைகளைக் கடந்துவிட்டது.

★ பெண்கள் வீட்டில் ஆண்களுக்குக் கீழ்ப்படிதல்

★ குடும்ப அமைப்பினால் பெண்கள் சுரண்டப்படுதல்

★ தொழிலிலும், சமூகத்திலும், நாட்டின் கலாச்சாரத்திலும் பெண்கள் தொடர்ந்து குறைவான அந்தஸ்து உடையவராய் இருத்தல்

★ பெண்கள் உற்பத்தியிலும் சந்ததி உற்பத்தியிலும் ஈடுபடுவதால் ஏற்படும் இரட்டைச்சுமை

ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்களையும் உள்ளடக்கியதாக இன்று பெண்நிலைவாதம் அமைந்துள்ளது. இதனால் பெண்கள் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடுவதற்காக மட்டுமன்றி, அரசினாலும், சமூகத்தினாலும், ஆண்களினாலும் விதிக்கப்படுகின்ற சகல அடக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடி விடுதலை பெற வேண்டியவர்களாக உள்ளனர்.

பெண்கள்,

சுரண்டல் (உ+ம் சமனற்ற சம்பளம், குறைந்த சம்பளம்)

கீழ்ப்படிதல் (உ+ம் ஆண் ஆதிக்கத்திற்கு உட்படுதல்)


அடக்குமுறை (உ+ம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்)

ஆகியவற்றிற்கு இரையாவதுடன், அவர்கள் இவ்வாறான பிரச்சினைகளை ஏனைய பெண்களும் எதிர்நோக்குகின்றார்கள் என்பதனை உணர்ந்துள்ளனர். அத்துடன் தமது இந்த நிலைமை மாறுவதற்கும் சமுதாயத்தை மாற்றுவதற்கும் தாமே ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்பதையும் உணர்ந்துள்ளனர்.

ஆனால் அனேகமானோர் பெண்நிலைவாதமானது, ஒரு மேற்கத்தைய கோட்பாடு எனவும், அது எந்தவிதமான விமர்சன நோக்குமின்றி ஆசியப் பெண்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது எனவும் கூறுகின்றனர். இது உண்மையா?

அவ்வாறில்லை. பெண்நிலைவாதமானது 'அன்னியக் கருத்தமைவின் ஒரு பகுதியென்றோ, செயற்கையான முறையில் ஆசியப்பெண்களில் திணிக்கப்பட்டது என்றோ கூறமுடியாது. ஆசியாவின் ஜனநாயக உரிமைகள் பற்றியும், அரைவாசி மக்கட் தொகையினருக்கு அடிப்படை உரிமைகளே வழங்கப்படவில்லை என்ற நியாயமற்ற நிலை பற்றியும் ஒரு விழிப்புணர்வு தோன்றி வளர்ந்த போதே பெண்நிலைவாதமும், பெண்நிலைவாதப் போராட்டங்களும் எழுச்சியடைந்தன. ஆசியாவில் அரசியல் விழிப்புணர்வு உச்சக்கட்டத்தை அடைந்த குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டங்களில் பெண்நிலைவாத விழிப்புணர்வும் ஏற்பட்டது. குறிப்பாக 19–ஆம் நூற்றாண்டிலும் 20–ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும், உள்ளூர் சர்வாதிகார, நிலப்பிரபுத்துவ ஆட்சியாளருக்கு எதிராகவும், போராட்டங்கள் ஏற்பட்ட போதே பெண்நிலைவாத உணர்வும் ஏற்பட்டது.

(நன்றி: 'பெண்நிலைவாதம் பொருத்தமானதே')





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தொடர் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வினால், ஐதான குடித்தொகையும் பரந்த நிலப்பரப்புக்களையும் கொண்டிருந்த மாங்குளம், துணுக்காய், மாந்தை ஆகிய பகுதிகள் இன்று மிகுந்த குடித்தொகை செறிவான பகுதிகளாகிவிட்டன. இதனால் ஏற்பட்டிருக்கும் வதிவிட வசதியின்மை, உணவுத்தட்டுப்பாடு, குடிநீர் தட்டுப்பாடு, மருந்து மற்றும் மருத்துவ வசதியின்மை, சுகாதாரம் பேணமுடியாத நிலை – அதனால் ஏற்பட்டிருக்கும் தொற்றுநோய்கள், போக்குவரத்து வசதியின்மை, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றால் மக்கள் படும் துன்பங்களைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி ஜனாதிபதி சந்திரிகாவிற்கு, மாங்குளம், துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிகளில் உள்ள வெகுஜன அமைப்புக்களின் தொடர்பகத்தால் விடப்பட்ட வேண்டுகோளை இங்கே தருகிறோம்.

**வெகுஜன அமைப்புக்களின் தொடர்பகம்,**
**யோகபுரம் மத்தி கிராம அபிவிருத்திச்சங்கம்,**
**யோகபுரம்.**
**1997.01.07.**

**மாண்புமிகு ஜனாதிபதி,**
திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்கட்கு,
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு.

அம்மணி,

## மாங்குளம், துணுக்காய், மாந்தை கிழக்கு மக்களின் வேண்டுகோள்

மாங்குளம், துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிகளில் உள்ள வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் எமது சுகாதாரத் தேவைகளின் மிக மோசமான நிலையை தங்களின் உடனடியான மேலான கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

இங்கு 111,945 பேர் வசிக்கின்றார்கள். 1996 நவம்பர் முதலாம் திகதியிலிருந்து டிசம்பர் 15 வரை நாம் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள அரச வைத்தியசாலைகளான மல்லாவி, துணுக்காய், நட்டாங்கண்டல், மாங்குளம் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறவந்த நோயாளர்கள் 57394 பேரில் 55165 பேர் மலேரியா, நெருப்புக்காய்ச்சல், காய்ச்சல், செங்கண்மாரி ஆகிய நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர். (பின்னிணைப்பு – 1)

இவர்களை விட மேற்கூறிய பகுதிகளில் தனியார் மருத்துவ நிலையங்களிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும், மலேரியாவிற்கு வீடுகளிலும் சிகிச்சை பெற்றோர் 48316 ஆவர். இரண்டு தொகுதிகளிலும் இக்காலத்தில் மேற்படி நோய்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை 280 ஆகும். உதாரணமாக 2550 பேர் வாழுகின்ற ஆலங்குளம் கிராமத்தில் மட்டும் 1909 பேர் மலேரியா நோயாளிகளாவர்.

இத்தகைய பயங்கரமான நிலை ஏற்பட எதுவான காரணங்களை கீழே தருகின்றோம்.

### வதிவிடம்

நாம் குறிப்பிடும் பகுதிகளில் உள்ள வீடுகள் குடியேற்றத்திட்டத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்டவையாகும். இவை ஒவ்வொன்றும் 25 சதுர மீற்றர் பரப்புடையவை. இத்தகைய வீடுகள் மொத்தம் 1411 மட்டுமே இப்பகுதிகளில் உள்ளன. இவ்வீடுகளின் மொத்தப்பரப்பு 35275 சதுர மீற்றர். எனவே ஒரு சராசரி நபருக்குள்ள கொங்கிறீற் வதிவிடம் 0.32 சதுர மீற்றர் மட்டுமே ஆகும். ஏனைய வதிவிடங்கள் முழுவதும் நிலம் ஊறல் மண்ணும், கூரை கிடுகு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய பொலித்தீன் துணியும் கொண்ட குடிசைகளாகும். வெயிற் காலத்தில் வெயிலும், மழை காலத்தில் மழையும் இங்கு வதிவோரைப் பெரிதும் பாதிக்கின்றன. காடுகளில் அமைக்கப்பட்ட இக்குடிசைகள் யாவும் பாம்பும், நுளம்பும், வனவிலங்கு ஆபத்தும் நிறைந்தவை.

மேலும் 2233 பேர் மொத்தம் 2193 சதுர மீற்றர் பரப்புடைய 11 பாடசாலைகளில் வாழ்கின்றனர். இப்பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் இல்லை. இருக்கும் மூன்று மலசலகூடங்களும் தூர்ந்து போயுள்ளன. மேலும் பலர் எவ்வித வசதிகளுமற்ற பொது இடங்களில் வாழ்கிறார்கள்.

### மலசலகூடம்

இக்குடியேற்றத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு குழி மலசலகூடம் அமைக்கப்பட்டது. இப்போதுள்ள நிலையில் மலசலகூடம் அமைப்பதற்குத் தேவையான எந்தப் பொருட்களும் இங்கில்லை. மலசலகூடங்களைத் திருத்த ஒரு கிலோ சீமெந்தைக்கூட ஆறு (06) வருடங்களாகப் பெற இயலவில்லை. இதனால் பழுதடைந்த மலசலகூடங்கள் கிருமிகளின் பெருக்கிடங்களாக மாறியுள்ளன. பெரும்பாலான மக்கள் வெளியிடங்களிலேயே மலம் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

### குடிநீர்

நாம் குறிப்பிடும் பகுதியிலுள்ள குடிநீர்க் கிணறுகள் 1207 மட்டுமே. இவற்றிலும் தொடர்ச்சியான வரட்சி காரணமாகவும், மக்கள் தொகைப் பெருக்கம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மற்றும் பிற பாவனை காரணமாகவும், பெரும்பாலான கிணறுகள் குடிநீர் பெற இயலாதனவாகிவிட்டன. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அமைத்தும், முன்பிருந்த பழுதடைந்தவற்றைத் திருத்தியும் 39 குழாய்க்கிணறுகள் பாவனைக்கு வந்துள்ளன. தங்கள் தடைகள் காரணமாகத் திறந்த கிணறுகள் குளோரினைக் கண்டு பன்னிரண்டு மாதங்களாகின்றன. பலர் பாவனைக்கு உதவாத குளத்து நீரையே குடிப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

## உணவு

விவசாய உள்ளீடுகள், கோழித்தீன், கால்நடை உணவுகள் உட்பட எல்லாவற்றிற்கும் உள்ள தடைகளாலும் கடும் வரட்சியாலும் உள்ளூர் உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. தாங்கள் அனுப்பும் மட்டுப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் அளவு, அதிகரித்துள்ள மக்கள் தொகைக்குப் போதியதாகாது. தங்களின் கடல் வலயச் சட்டம் காரணமாக மீனும் கிடையாத பொருளாகிவிட்டது. எனவே பசியும் போசாக்கின்மையும் அதிகரிக்க, நோய்கள் அதிகம் தொற்றிக்கொள்கின்றன.

## உளநிலை

இடப்பெயர்வு, சொத்திழப்பு, இடம்பெயர்ந்தோருக்கு தமது சொந்த இடங்களைக் கொடுத்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை, தொழிலின்மை, வருமானமின்மை, விமானக்குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, யுத்தபயம், பாம்பு, வனவிலங்குகள் பயம் என்பவற்றினால் எல்லா மக்களுமே குறிப்பாக சிறுவர், கர்ப்பிணித்தாய்மார், நோயாளிகள் ஆகியோர் உளநிலை பாதிப்புற்றவர்களாகி, உடல் நோய்கள் அதிகரித்து உள நோய்களின் தாக்கத்திற்கு ஆளாகின்றார்கள்.

## வைத்திய வசதி

எம்மால் குறித்துரைக்கப்படும் 920 சதுர கிலோமீற்றர் பரப்புடையதும் 111945 மக்களைக் கொண்டதுமான பகுதியில் துணுக்காய் மத்திய மருந்தகம், மாங்குளம் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும், நட்டாங்கண்டல் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும், மல்லாவி சுற்றயல்கூறு வைத்தியசாலை ஆகிய நான்கு வைத்தியசாலகள் மட்டுமே உள்ளன. இலங்கையின் வைத்தியர்கள் : மக்கள் விகிதம் 1992ல் 2403 : 100,000 ஆக இருக்க நாம் குறிப்பிடும் பகுதியில் அதே ஆண்டில் 13.04 : 100.000 ஆக இருந்தது. இப்போது இது நிரந்தரமாக இங்குள்ள வைத்தியர்களை மட்டும் கணக்கெடுக்கும் போது 5 : 100.000 (இவ் ஐவரும் பதிவு / உதவி வைத்திய அதிகாரிகளாவர்) ஆகவும் இடம் பெயர்ந்து வந்துள்ள நிலையில் சேவை நோக்கோடு இவ்வைத்தியசாலைகளில் இணைந்துள்ள வைத்தியர்களையும் கணக்கிலெடுக்கும் போது இது 9 : 100.000 ஆகவும் உள்ளது. இடம்பெயர்ந்து இணைந்துள்ள வைத்தியர்களின் சேவை இப்பகுதிக்குக் கிடைக்காவிடின் இறப்பு விகிதம் தற்போதுள்ளதைவிடப் பன்மடங்காகியிருக்கும்.

மல்லாவி வைத்தியசாலைக்கு மட்டும் நாளொன்றுக்கு சராசரியாக 850 நோயாளர் சிகிச்சைக்கு வருகிறார்கள். இவ்வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் கடமையில் இருக்கக்கூடிய வைத்தியர்களின் எண்ணிக்கை இடம்பெயர்ந்து இணைந்த வைத்தியர்களையும் சேர்த்துக், காலையில் இரண்டும் மாலையில் ஒன்றும் ஆகும். ஆகவே ஒரு நோயாளிக்கு 40 செக்கன்களுக்கு மேல் செலவிட முடியாது வைத்தியர்கள் திண்டாட வேண்டியுள்ளது. இவ் வைத்தியசாலையில் வைத்தியரை ஒரு நாளில் 40 செக்கன்களாவது சந்திக்கக்கூடிய கடைசி நோயாளி அதிகாலை 5 மணிக்கே வரிசையில் நிற்க அந்த நேரத்தின் பின்பு வருபவர்கள் வைத்தியரைச் சந்திக்கவே இயலாத நிலையும் ஏற்படுகிறது. இதற்கிடையில் நோய் பன்மடங்காகிடக்கூடும்.

குறிப்பிட்ட நான்கு வைத்தியசாலையிலும் மகப்பேறு தவிர்ந்த உள்ளகப் படுக்கை வசதி மல்லாவியில் மட்டுமே உள்ளது. அங்கு ஆக 28 நோயாளிகள் மட்டுமே தங்கியிருந்து சிகிச்சை பெற இயலும். இன்றோ கட்டிலின் கீழும், விறாந்தைகளிலும் மரநிழலிலும் தங்கியிருந்து நாளொன்றுக்குச் சராசரியாக 178 பேர் சிகிச்சை பெறுகிறார்கள். இட நெருக்கடி காரணமாக இங்கு உள்ளக சிகிச்சை அவசியமான மேலும் பலருக்கு இவ்வசதியை வழங்கமுடியாதுள்ளது. நாம் குறிப்பிடும் பகுதிக்கு மட்டுமல்லாது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவின் ஒரு பகுதி ஆகிய இடங்களுக்கு ஒரே ஒரு சத்திர சிகிச்சை நிபுணரும், ஒரேயொரு மகப்பேற்று நிபுணரும் (MSF) மல்லாவியில் மட்டும் உள்ளனர். கண், பல் எந்தவித சிகிச்சை வசதிகளோ நிபுணத்துவ சேவைகளோ எவ்விடத்திலும் இல்லை.

இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை முதலிய ஆய்வுகூட வசதிகள் ஈ.சி.ஜி போன்ற விசேட வசதிகள் எதுவுமில்லை. இதனால் சிக்கல் நிறைந்த நோயாளிகளின் நோய்களைக் கண்டறிய இயலவில்லை; பரிகாரமும் இல்லை; இரத்த வங்கியும் இல்லை; மரணங்கள் பெருகுகின்றன.

## போக்குவரத்து

ஐதான குடித்தொகையும், பரந்த நிலப்பரப்பும் கொண்ட இப்பகுதி இன்று குடித்தொகை செறிவான பகுதியாகிவிட்டது. போக்குவரத்து வாகனங்கள் இல்லை, எரிபொருள் இல்லை, ஒழுங்கான வீதிகள் இல்லை, சைக்கிள்களிலும், மாட்டு வண்டிகளிலும் குண்டும் குழிகளுமான வழிகளால் நோயாளி 82 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து வைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது. ஏனைய நோய்கள், பாம்புக்கடி என்பவற்றுக்கு நோயாளி வைத்தியசாலைக்கு வரவேண்டிய சராசரித் தூரம் 20 கிலோ மீற்றர் ஆகும். இதனால் பாம்புக்கடியுண்டவர், இருதய நோயாளிகள் வழியிலோ வீட்டிலோ இறக்க நேரிடுகின்றது.

கடும் சுகவீனமுற்ற நோயாளியை வசதியற்ற மல்லாவி வைத்தியசாலையில் வைத்து சிகிச்சையளிக்க இயலாதவிடத்து அவர் வவுனியாவிற்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அனுப்பப்பட வேண்டும். இதற்கான போக்குவரத்து வாகனம், எரிபொருள், தூரம் சீரற்ற வீதி ஆகிய பிரச்சினைகளைவிட தாண்டிக்குளம் தடைமுகாம் பெரிய பிரச்சினையாகும். இதனால் நோயாளிகளை வைத்தியசாலையின் மூலமாக அனுப்புதலோ, அவர்கள் தாமாகச் செல்வதோ இலகுவான காரியமல்ல. கடந்த நவம்பர் 4ம் திகதி முதல் டிசம்பர் 15ம் திகதி வரை மல்லாவி வைத்தியசாலையிலுள்ள ஒரேயொரு அம்புலன்ஸ் வண்டி தடைமுகாமில் நோயாளரைக் கொண்டு சென்ற போது ஏற்பட்ட தாமதத்தால் வழியில் இறந்தோர்கள் எண்ணிக்கை *6* ஆகும். மேலும் பலர் அப்பாதை தடைப்பட்டிருந்த காலத்தில் மேலதிக சிகிச்சை வசதியற்ற நிலையில் இறந்தனர்.

## தடை மருந்துகள்

மலத்தியோன், குளோரின், லைசோல் ஆகிய தொற்றுநீக்கிகள், கிருமிநாசினிகள் என்பவற்றுக்கு தாங்கள் விதித்துள்ள தடைகள், கட்டுப்பாடுகள் காரணமாக மலேரியா ஒழிப்பு இயக்கம், பொது சௌக்கிய உத்தியோகத்தர் கடமைகள், சௌக்கிய தாதிச் சேவை என்பன ஸ்தம்பிதமடைந்துள்ளன. ஈ, நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளது. இப்பகுதிக்கு மக்கள் இடப்பெயர்வுக்குமுன் *3* மாதத்திற்கு *120* பெட்டி (*3600* கி.கி) வீதம் மலத்தியோன் தேவையாக இருந்தபோதும் தங்களால் அனுப்பப்பட்டது *21* பெட்டி(*630* கி.கி) மட்டுமே. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு தாங்கள் அனுப்பி வைக்கும் நுளம்பு ஒழிப்புக்கான ஐக்கொன் (Icon) நீர் நிலைகளில் குடம்பிகளை ஒழிக்கப் பயன்படும் அபேற் (Abate) ஆகியவற்றைக் கண்ணாலும் காணவில்லை.

## தடுப்பு மருந்துகள்

குழந்தைகளுக்குத் தேவையான தடுப்பு மருந்துகளான பி.ஜி.சி, முக்கூட்டு மருந்து, விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து என்பன *1996* நவம்பர் மாத ஆரம்பத்திலேயே முடிவடைந்துவிட்டன. இதனால் உரிய வயதில், உரிய காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தியளிக்கும் திட்டம் நடைபெறவில்லை. எனவே மக்கள் அனைவரும், எதிர்கால சந்ததிகள் உட்பட, நோயாளிகளாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தாங்கள் நாட்டின் ஏனைய பாகங்களுக்குத் தவறாது வழங்கும் குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார் போசாக்கு உணவாகிய "திரிபோசா" இங்கு காணவும் கிடைப்பதில்லை. பல்வேறு காரணங்களால் குழந்தைகளின் பிறப்பு நிறை படிப்படியாகக் குறைந்து செல்கின்றது. மல்லாவி வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளில் நிறை குறைவானவைகளின் வீதம் ஒக்டோபர், நவெம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் முறையே *11.0. 14.07, 18.04* ஆக அதிகரித்துச் சென்றது. கருச்சிதைவுகளும் அதிகரித்துச் செல்கின்றது.

## மருந்துகள்

இப்பகுதிக்குத் தேவையான அரச வைத்தியசாலைகளால் கோரப்பட்ட மருந்துகளில் தங்களால் அனுப்பப்பட்டவை ஒரு சிறு பகுதி மட்டுமே ஆகும். இடம்பெயர்வு காரணமாக மக்கள் தொகை பன்மடங்கு அதிகரிக்க தாங்கள் அனுப்பியது முன்னைய தேவைக்கே போதாததாகவுள்ளது. இதனால் பாரிய மருந்துத் தட்டுப்பாடு இப்போது ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நெருப்புக்காச்சலுக்குரிய குளோறம்பெனிக்கோல், மலேரியாவிற்கான குயினைன், மன நோய்க்கான மருந்துகள் என்பன சிறிதளவும் அனுப்பப்படவில்லை. தனியாரால் கொண்டுவரக்கூடிய மருந்துகளுக்கும் தடை விதித்துள்ளீர்கள். இக்காரணத்தால் ஓரளவுக்காவது மருத்துவ வசதியளித்த தனியார் சிகிச்சை நிலையங்களும் மூடப்பட்டு வருகின்றன. தடைகளின் உச்சக்கட்டமாக தனியொருவர் தாண்டிக்குளம் தடை முகாமால் கொண்டுவரக்கூடிய சாதாரண பனடோல் விலை எட்டு ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. ஏனைய மருந்துகள் பற்றிக் கூறத்தேவையில்லை.

## பொது

உலக சுகாதார நிறுவனம் *2000*–ம் ஆண்டில் அனைவருக்கும் சுகநலம் என்ற வகையில் முயல தாங்களோ மலத்தியோன் குளோரின் என்பவற்றிக்குத் தடை வித்து குளோறோக்குயின், குளோறோம்பெனிக்கோல், குயினைன் பனடோல் முதலானவற்றிக்குத் தடை விதித்து வதிவிட வசதி, உணவு வசதி, பொருளாதார வசதியற்ற மக்களை நோயாளிகளாக்கி, *1935*–ம் ஆண்டளவில் மலேரியா இப்பகுதிகளின் உயிர்க்கொல்லியாக இருந்த காலகட்டத்திற்கு எம்மைக் கொண்டு வந்துள்ளீர்கள்.

இப்பகுதிக்கு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை மரணத்தின் விளிம்பிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். *1996* டிசம்பர் மாதம் மட்டும் மல்லாவி வைத்தியசாலையில் ஏற்பட்ட *58* மரணங்கள் மலேரியாவால் ஏற்பட்டன.

சமாதானம், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்ற வாசகங்களுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தாங்கள் உயிர்வாழும் எங்கள் அடிப்படை உரிமைக்கே குழி தோண்டுவது எம்மை விரக்தியின் எல்லைக்குக் கொண்டுவந்துள்ளது.

## தீர்வு

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி பதவிக்கு வந்த தாங்கள் எமது உயிர்களைக் காப்பதற்கான நடவடிக்கையில் உடனடியாக இறங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

பிரதி: எதிர்க்கட்சித் தலைவர் / சுகாதார அமைச்சர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருள் விலகிய காலம்

உறக்கம் கலைந்து சோமன் கண் விழித்தான். எவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டிருந்தான் என்பது அவனுக்கு ஞாபகத்தில் இல்லை.

கிடந்தபடியே தலையைத் திருப்பி வீதியைப் பார்த்தான். வீதி ஆளரவமற்றுப்போய்க் கிடந்தது.

அவன் அந்த இடிந்த கட்டிடத்துக்கு வந்தது நேற்றா, அல்லது நேற்றைய முன்தினமா, அதுவும் கூட அவ்வளவாக ஞாபகத்தில் இல்லை. ஏதோ கனவு கண்டு மறந்தும் மறக்காமல் இருப்பது மாதிரியும் இருந்தது.

அது ஒரு கடையாக இருந்திருக்க வேண்டும். வீதியோரத்திலேயே கிடந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி சில பொருட்கள் எடுக்கப்படாமல் வெளித் தெரிந்தன. உட்சுவரில் ஆங்காங்கு 'ஷெல் பீஸ்' பட்ட வடுக்கள். ஓடுகளும், கல்லுகளும், பனஞ்சலாகைகளும், மரந்தடிகளும் கும்பல் கும்பலாயும் அங்கொன்றும் இங்கொன்றுமாயும் சிதறிப் போயிருந்தன. முன்பக்கத் தாழ்வாரப் 'பிளேற்' உடைபட்டு கொங்கிறீற்றுக்குள் இடப்பட்ட இரும்புக் கம்பிகள் தெரியக் கிடந்தது. அதுதான் அவனது வெயில் மழைக் காப்பிடமாய்ப் போனது.

கிடந்தபடியே மேலே பார்த்தான். சரிந்திருந்த சுவரினூடே நிர்மலமாய் நீலமும், சாம்பல் நிறமும் கலந்த நிறத்தில் காலையா மாலையா என்று கூடக் கூறமுடியாதளவுக்கு வானம்.

வெளிர் நீலம் பூசப்பட்ட கடையில் உட்பக்க சுவரோர மூலையில் அவனது உடமையென்று சொல்லக்கூடிய ஒரு தோற்பை இருந்தது. அதற்குள் அதன் கொள்ளளவுக்கும் மீறிய பொருட்களைத் திணித்திருந்தமையால் பை விம்மிப் புடைத்து ஆங்காங்கு உள்ளிருக்கும் பொருட்களின் உறுத்தல்கள் தெரிந்தன.

சுவரின் அடிப்பாகத்தில் இருந்து பல்லி ஒன்று மேல் நோக்கி இளைப்பாறி இளைப்பாறிப் போனது. இத்தனைக்கும் இது எப்படி உயிர்வாழ முடிந்தது? இந்தச் 'ஷெல்' மழைக்குள் அது எவ்வாறு உயிர் தப்பியது? என்று நினைக்கக் கூட அவனுக்கு சக்தியோ அவகாசமோ அல்லது அவசியம் இல்லையோ பார்வையை மீண்டும் வீதிக்குச் செலுத்தினான். உடல் அப்படியே இருக்க தலை மட்டும் திரும்பிக்கொண்டது.

இப்போது வீதியில் ஒரு வயதான பெண்ணும், ஒரு பதினேழு வயதிற்குள் மதிக்கத்தக்க இளம் பெண்ணும் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த வயதான அம்மா நீலக்கட்டம் போட்ட





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சேலை கட்டியிருந்தாள். தலையில் ஏதோ சுமைகள் அமுத்த இடது கை மேலே பிடித்திருந்தது. மறு கையில் கறுப்பு நிறத்தில் பெட்டி ஒன்று தொங்கியது. அந்தப் பெண் சைக்கிளை உருட்டியபடி சென்றாள். சைக்கிளின் பின் கரியலில் உரப்பையில் நிரம்பிய சாமான்கள் கிடந்தன. இருவரும் வேகமாய்ப் போய் சந்தியால் திரும்ப சந்தியில் நின்ற பாலை மரம் மறைக்கப் பார்வையில் இருந்தும் விலகிப் போனார்கள்.

சோமனுக்கு உடலெல்லாம் மசமசவென்று உடையோடு ஒட்டியது. வாய் கசகசவென்றிருந்தது. கால், கை, முதுகெல்லாம் ஏதோ ஊர்வதும் கடிப்பதும் போலிருந்தது.

கடைசியாய் எப்போது சாப்பிட்டேன் என்றுகூட அவனுக்கு நினைவில் இல்லை.

வானத்தைப் பார்த்து மலங்க மலங்க விழித்தான். கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு திரும்பியபோது — முன்பிருந்த வாழ்வு சீரழிந்து உருப்படாமல் போனது. நெஞ்சுக்குள் வலித்தது. இப்படி எத்தனை காலம் இடம் பெயர்ந்து இடம்பெயர்ந்து முகவரி இழந்து முடங்கிப் போய்க் கிடப்பது. மனைவி பிள்ளைகளது ஞாபகம் இதயத்தைக் கிழித்துப் போட்டது. அழ வேண்டும் போல் இருந்தது. தொண்டை கம்மியது. கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

தீவகத்தில் பிறந்து வளர்ந்த வனப்பான நினைவுகள் மனசை குடைந்தன. ஈரக்கடல் நனைக்கும் அந்தத் தீவுத்திடலின் தூரங்களிலெல்லாம் அவள் ஓடி விளையாடும் நாட்களும் பின்னாளில் துளசியைக் கல்யாணம் செய்து கொண்ட அந்த வசீகரப் பொழுதுகளும் கண்களில் நிழலாடின.

இளநீல நிறக் கண்களும், மஞ்சள் நிறக் கால் கைகளில் பொன்னிற ரோமங்களும் ஐந்தரை அடிக்குக்கிட்ட வளர்ந்திருந்த தோற்றமும் கொண்டு எந்தவொரு ஆண்மகனையும் கவர்ந்து விடுமளவிற்கு கவர்ச்சியாய் இருந்தாள் துளசி. அவள் சோமனையும் கவர்ந்து விட்டதில் எந்தவித ஆச்சரியமும் இருக்கவில்லை.

ஆனால் அவனது தகப்பன் செல்லத்துரையருக்கு மட்டும் அவளைப் பிடித்துப் போகவில்லை. "ஏன்ரா கழுதை! உனக்கு ஊரில வேற பொட்டையள் கிடைக்கேல்லையே. அவளைப் போய் செய்யப் போறன் எண்டுறாய்? ......"



அவன் எதுவுமே பேசவில்லை. அவரது எதிர்ப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாமல் ஒருநாள் துளசியைக் கல்யாணம் செய்து கொண்டான்.

ஒன்றை இழந்துதானே இன்னொன்றைப் பெறவேண்டுமாம். தந்தையின் அன்பை இழந்து துளசியின் துணையைத் தேடிக்கொண்டு தனிக்குடித்தனம் போய்விட்டான்.

பின்னாளில் ஒருமுறை தாய் மட்டும் வந்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு வரும்படி கூறி அழுதுவிட்டுப் போனாள்.

துளசி எவ்வளவு வற்புறுத்தியும் அவன் தகப்பனின் முகத்தில் விழிப்பதற்கு மறுத்துவிட்டான். அவளும் அடிக்கடி கேட்பாள். அவன் சம்மதிக்காமல் விடவே அலுத்துப்போய் அவளும் விட்டு விட்டாள்.

தகப்பன் ஏன் அவளை வெறுத்தார் என்பது கடைசி வரைக்கும் அவனுக்குத் தெரியவில்லை.

அதன் பின் ஒரு நாள் சிறீலங்கா இராணுவத்தின் முற்றுகைக்குள் தீவகம் நசிந்து போனதால், பிறந்த மண்ணை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலமைக்குத் தள்ளப்பட்ட போது, சிறுபிள்ளை போல் தேம்பித் தேம்பி அழுதான்.

துளசி கலங்கிய கண்களோடு பின்னால் நடந்துவர ஒரு பொம்மையைப் போல் முன்னால் நகர்ந்து பண்ணைப் பாலத்தைக் கடந்து இருவரும் போனார்கள்.

பிறகு தாய் தந்தையினரின் நிலை பற்றியே தெரியாமல் போனது. அவர்கள் தீவகத்தை விட்டு வந்தார்களா? — அல்லது பிறந்த ஊரை விட்டு வர முடியாமல் தவித்துப் போய் தனித்துக் கிடந்தார்களா? தனித்துக் கிடந்தவர்களை இராணுவம் என்ன பண்ணியதோ? எதுவும் தெரியாமல் போனதோடு அவர்களைப் பற்றிய நினைவுகளும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது.

அதன்பின் குழந்தைகளோடு வலிகாமத்தில் வாழ்ந்த வாழ்க்கையையும் குலைத்து, கிளாலிக் கடல்நீரேரி கடந்து கிளிநொச்சிக்கு வந்தார்கள். வந்த மறுவாரமே ஒரு பலசரக்குக் கடையில் அவன் உதவியாளனாகச் சேர்ந்து கொண்டதோடு கடை முதலாளியின் காணியிலேயே சிறு கொட்டிலையும் கட்டிக்கொண்டான்.

சோமன் கடையை விட்டு வரும் வரையும் துளசி பிள்ளைகளோடு மணிக்கணக்காய் காத்துக் கிடப்பாள். அந்த வேளைகளில் நினைவுகள் அலைக்களிக்கும். ஒவ்வொரு இடமாய்க் குந்தியெழும்பும் அவல வாழ்க்கையை நினைத்து கல்லாகிப் போவாள். அவள் அப்படி கலங்கிப் போயிருக்கும் சில வேளைகளில் படலைச் சத்தம் கேட்கும். கண்களைத் துடைத்தபடி எழுந்து பார்ப்பாள். சோமன் வந்துகொண்டிருப்பான்.

அன்றும் வழமைபோல் அவன் கடைக்குப்போய் விட்டிருந்தான், துளசியும், பிள்ளைகளும் அவனுக்காகக் காத்துக்கிடந்தார்கள்.

முல்லைக்கோணேஸ்



www.tamileelamarchive.com

"டும்... டுடும் ...டம்..டமார்..." என்ற பேரொலிகளோடு கிளிநொச்சி நகரே 'ஷெல்' மழையில் குளித்தது. கட்டிடங்கள் இடிந்து கற்கள் சொரிந்து விழும் சத்தங்கள்; மரங்கள் முறிந்து விழும் சத்தங்கள் – ஓடுபவர்கள் – ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு விழுபவர்கள் – அலறுபவர்கள் – அமளிதுமளிப் பட்டு வேகமாய் விரையும் வாகனங்கள் இத்தனையும் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட கொடூரத்தின் விளைவுகளே.

சோமன் வேலை பார்த்த கடைக் கருகிலும் சலீர் பளீரென சத்தங்கள். காதடைக்க வெளியே பாய்ந்து வெறி பிடித்தவனாய் ஓடினான். பிரதான தார்ச்சாலையில் இருந்து இறங்கி வீட்டை நோக்கிப் போகும் ஒற்றையடிப்பாதையில் மூச்சிரைக்க விரைந்தான்.

அவனுக்கு முன்னாலும் எதிரிலும் நிறையப் பேர் ஓடினார்கள். நகரெங்கும் ஆங்காங்கே பெரும் சத்தங்கள் கேட்ட வண்ணமேயிருந்தன.

இளைக்க இளைக்க ஓடி வந்தவன் படலை திறந்து பார்வையைக் கொட்டில் இருந்த பக்கம் பரப்பினான். கொட்டிலின் மேலாக, பக்கத்தில் நின்றிருந்த வேப்பமரம் முறிந்து விழுந்து கிடந்தது.

கால்கள் இயங்க மறுத்தும் தள்ளாடியபடி அருகில் சென்றான். நெஞ்சு திக் திக்கென்று வேகமாய் அடித்தது. கிளைக்குள் துளசியும் பிள்ளைகளும் குலைந்து போய்க் கிடந்தார்கள். மூச்சையற்று விடும் போல் இருந்தது.. " ஆ... ஆ ..." என்று சத்தம் தொண்டைக்குள்ளேயே அடங்கிப் போக அலறினான்.

அந்தச் சம்பவங்கள் நடந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. அதன் பிறகு தன்னியல்பிழந்து திரிந்தான். நடந்து நடந்து திருமுறிகண்டி கடந்து வந்தான். ஒரு நாளைக்கு ஒரு நேரம் கூட உண்பது குறைவு, சில வேளைகளில் இரண்டு நாள் கழித்தும் சாப்பிடுவான்.

தெருவோர மர நிழல்களும். இடிபாடடைந்த கட்டிடங்களும் அவனுக்குப் புகலிடமளித்தன.

'பீம் .... பீம்' எங்கோ மிக அருகில் 'கிபீர்' விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் குண்டுத் தாக்குதல் செய்து கொண்டு வட்டமடித்துப் போனதால் அவன் நினைவு கலைந்தது.

அவை தூரப் போய்விட்ட பின்னும் இரைச்சல் இன்னும் அவன் காதுகளில் கேட்ட வண்ணமேயிருந்தது.

குளிர் காற்று வீசியது. வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். கருமுகில்கள் திரண்டு கொண்டு வந்தன. மரங்கள் பேயாட்டம் ஆடின, உடல் சிலிர்த்தது, தெற்குப் புறமிருந்து சோவென்ற சத்தத்தோடு மழை பெய்து கொண்டு வந்தது. அவன் கிடந்த படியே கிடந்தான். பெரிய பெரிய துளிகளாய் விழுந்தன. அவன் கிடந்த படியே கிடந்தான். மழை பெய்து கொண்டிருந்தது. அவன் கிடந்தபடியே கிடந்தான். தார் வீதியில் மழைத்துளியின் தெறிப்பு ஒரு அடி உயரத்துக்கும் மேலாக வெள்ளைத் தூறலாய் தெரிந்தது.

வெள்ளம் பாயுமளவிற்கு பெரும் மழை பொழிந்தது.

அவன் கிடந்த கட்டிடத்திற்கருகில் இருந்த ஓடையில் செம்பாட்டு நிறத்தில் வெள்ளம் பாய்ந்தது.

வானம் மூடிக் கிடந்தது. இப்போதைக்கு விடும் மழை போல் தெரியவில்லை. ஆனால் அவன் கிடந்த படியே கிடந்தான்.

வெள்ளத்தில் அள்ளுண்டு என்னென்னமோ வெல்லாம் போயின.

அவன் தலையில் இருந்து வடிந்த தண்ணீர் கடவாய் வழியே வாய்க்குள் போய் உவர்த்தது.

திடீரென்று எங்கோ இருந்து ஒரு பெரும் காற்றுக்குச் சுழல் வீசியடித்தது.

மழைச்சாரல் ஒருபாடாய்ப் பெய்யாமல் சிதறிப் பெய்தது.

காற்றுச் சுழன்றடித்ததால் தென்புறமிருந்து வந்த மழை முகிற்கூட்டம் கலைந்து போவது நன்றாய்த் தெரிந்தது.

முகிற் கூட்டத்தினிடையே நிர்மலமான வானத்தின் ஒரு ஊடு தெரிந்தது. மழைச் சாரலும் மெதுவாய் நின்று முழுதாய் ஓய்ந்துபோனது. காற்று மட்டும் விடாமல் அடித்துக் கொண்டேயிருந்தது.

ஓடி ஒளிந்த கரு முகில்களுக்கிடையே சூரியனின் ஒளிக்கீற்றொன்று அவன் முகத்தில் விழுந்து தகதகத்தது. களைப்பும் சோர்வும் நீங்கியது போலிருந்தது. ★

## யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் பாலியல் வன்முறைகள்

**யாழ்ப்பாணத்தில் நடக்கும் இராணுவத்தினரின் மிருகத்தனமான பாலியல் வன்முறைகள் பற்றி தகவல்கள் கொழும்புத் தமிழ் வெளியீடுகளில் வெளிவருகின்றன. அவற்றிலிருந்து சில தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.**

சில இராணுவத்தினர் தம்மால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்களின் புகைப்படங்களை எடுத்துள்ளார்கள். இக்காம வெறியர்கள் இப்படங்களை தமது நண்பர்களுக்குக் காட்டித் தமது கெட்டித்தனத்தைப் பற்றி பெருமை அடித்துக்கொள்ளவதற்காக இப்படிச் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவியிடம் தன்னைத் திருமணம் செய்யுமாறு இராணுவத்தினன் ஒருவன் கேட்டான். மாணவி மறுத்து விட்டார். மறுநாளே அவர் "புலி" என்ற குற்றச்சாட்டில் சிறைப்பிடிக்கப்பட்டார். அதன்பின் அவர் பற்றிய தகவல் இல்லை.

அரியாலையில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியைக் கடந்து சென்று வந்த ஆசிரியை ஒருவர் இராணுவத்தினரால் கடத்தப்பட்டார். அதன்பின் அவர்பற்றிய தகவல் எதுவுமில்லை.

மீசாலையில் இராணுவத்தினர் தமது ரோந்துகளின் போது, அழகான பெண்கள் இருக்கும் வீடுகளை அவதானித்துள்ளனர். மறு நாள் அங்கிருந்த குடிசை ஒன்றிற்குச் சென்று அங்கிருந்த பெண்ணை அவரின் தந்தையின் முன்னாலேயே பாலியல் வல்லுறவு செய்ய முயன்றனர். தந்தையால் மகளைக் காப்பாற்ற முடியவில்லை. அப்பெண் இராணுவத்தினரின் மிருக வெறிக்கு ஆளாகிக் கொலை செய்யப்பட்டார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# படை மாட்சி

உலகத் தமிழ் மறை வள்ளுவர் திருக்குறளில் படைமாட்சி என்னும் அதிகாரத்தில் படை ஒன்றின் சிறப்புத் தன்மைகளை சிறப்பாக எடுத்துக் கூறி இருக்கின்றார். வள்ளுவர் போரியல் துறையின் நுணுக்கங்களை கூர்ந்து ஆராய்ந்து குறள் தந்தமை தமிழர்கள் போர்க்கலையில் சிறப்புற்று வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றாகின்றது. தமிழர் வீரமும் போர் ஒழுக்கமும் நிறைந்து படை நடத்தியுள்ளார்கள் என்பதனை வள்ளுவர் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார். தமிழர் தம் போர்க்கலை முதிர்ச்சி பெற்றிருந்தது என்பதனை எண்ணும் போது,

*'இயற்குணம் புலிக்குணம்*
*கொண்ணர்தமிழன்*
*போர்க்கலை அவன் உதிரத்தில்*
*புதைந்து'*

என எண்ணத் தோன்றுகிறது.

பல நூற்றாண்டுகள் தாண்டி இன்று எமது படைமாட்சியை வள்ளுவன் படைமாட்சியுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் எமக்குப் பல உண்மைகள் புலனாகும்.

*'உறுப்பறிந்து ஊறஞ்சா*
*வெல்படை வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை'*

என்று கூறுகின்றார் வள்ளுவர். உறுப்புகள் எல்லாம் அமைந்து எந்த துன்பத்தினையும் தாங்கி இடையூறுகளுக்கெல்லாம் அஞ்சாமல் வெற்றியை ஈட்டும் படைதான் ஒரு வேந்தனின் தலைமைச் செல்வம் என்கிறார் வள்ளுவர்.

ஈழத்தில் விடுதலைப் புலிகளின் வீரகாவியங்களைப் படிக்கும் போதும் கேட்கும் போதும் காணும்போதும் வள்ளுவன் குறளைத்தாண்டி ஒரு படி மேலாக பெரும் சிறப்பினைக் கொண்ட படை எங்கள் வேங்கைப் படை. உறுப்பமைந்து என்பது எல்லா வசதிகளும் கொண்ட ஒரு படை, ஆனால் விடுதலைப் புலிகள் எதிர்த்துப் போராடும், போராடிய மேலாதிக்க படைகளும், வல்லாதிக்கப் படைகளும் வள்ளுவர் கூறியதுபோல் எல்லா வசதிகளையும் உடைய படைகளாகும். ஆனால் விடுதலைப் புலிகள் ஊறுகளுக்கும், துன்பங்களுக்கும் அஞ்சாமல் வெல்படையாக நின்று போராடி உறுப்படைந்த படைகளை எல்லாம் வெற்றி காண்கின்றனர். வள்ளுவன் இன்று இங்கிருந்தால் குறளை மாற்றி எழுதியிருப்பாரோ!

இப்படியாக..........

*'ஈகை தற்கொடை இரண்டும்*
*சேர்படை*
*தலைவன் வாகை என்றும் நிலை'*

தன்னலமற்ற ஈகத்தினாலும் வேண்டின் உயிரைத் தற்கொடையாகக் கொடுத்தேனும் உயரிய இலட்சியத்தை அடையும் வீரர்களை இணைத்த படைத்தலைவன் வாகை சூடிக்கொள்வது என்றும் நிலையானது. வள்ளுவர் கூறியதுபோல் உறுப்பமைய எமது படை அமைந்துவிட்டால், தமிழர்கள் உலகில் மீண்டும் பழம் பெருமையுடன் வாழ்ந்துவிடலாம். கடந்தகால போர் வெற்றிகள் தமிழர்களின் விடிவு வெகு தொலைவில் இல்லை என்பதை பறைசாற்றுகின்றது. எனவே உறுப்பமையும் படையாக புலிப்படை மாறி வருகின்றது என்பதும் உண்மை.

வள்ளுவர் மேலும் கூறுகின்றார்,

*'மறமானமும் மாண்ட*
*வழிச்செலவு தேற்றம்*
*என நான்கே ஏமம் படைக்கு'*

போர் மறமும், தன்மான உணர்வும், சிறப்பாக சென்று சேரும் வழிச் செலவுத் திறமும், தெளிந்த போர் வினை நுட்பமும் ஒரு படையின் சிறப்புக்கு வழி சமைக்கின்றன. இத்தகை இயல்புகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மிகையாகக் கொண்டிருப்பதனால்தான் அப்படை ஏமம் உடைய படையாக திகழ்கிறது. தமிழர்களின் தன்மான உணர்வினை மதிக்காது எதிரிகள் ஏழனம் செய்யும் பொழுதெல்லாம் அவர்களை நையப் புடைத்து, தமிழன் புலிப்படை உலகின் சிறந்த ஒரு படையணியாகத் திகழ்கின்றது. கனக விஜயன் கரிகாலச் சோழனின் படை வலிமையை ஏழனம் செய்தான் என்பதற்காய் அவன் மீது படை எடுத்து சிறைப் பிடித்து, அவன் செருக்கடக்கி தலையில் கல் சுமக்கச் செய்து கல்லணையைக் கட்டிச் சென்றார் கரிகாலச் சோழன். இன்று மீண்டும் கரிகாலன் காலம் உருவாகியுள்ளது. இறப்புப் பற்றிய செய்தி தெரிந்திருந்தும் உறுதியுடன் சென்று எதிரிப்படை அழிக்கும் கரும்புலி வீரர்களுக்கு நிகர் இவ்வுலகில் யார் உண்டு. வள்ளுவர் பெண்களைப் பற்றி வாழ்க்கைத் துணை நலத்தில் கூறுமிடமெல்லாம் பெண்ணடிமைத் தன்மையை வெளிப் படுத்துகின்றார். பெண்கள் குடும்ப வாழ்க்கைக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்வது எப்படி என்பதைக் கூறியுள்ளாரே தவிர பெண்கள் போர்க் கலையில் ஆற்ற வேண்டிய பணி பற்றி ஏதும் எங்கும் குறிப்பிடவில்லை. வள்ளுவர் வாழ்ந்த காலத்திலும் அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலும் பெண்கள் போர்க்களங்களுக்குச் செல்வதை வழக்காகக் கொண்டிருக்கவில்லை. இன்று தமிழர் வரலாற்றில் புதுத் திருப்பமுடன் தோன்றிய புதுமைப் பெண்களின் வீரகாவியங்களைப் பாட ஓராயிரம் வள்ளுவர் தோன்ற வேண்டும்.

இப்படியாக........

*'பெண்மையுடன் சேரணி*
*பெரும் படை*
*தன்மையுடை பெரிது'*

இது இனத்தின் அரைப்பகுதியாக உள்ள பெண் இனத்தையும் படையில் சேர்த்துக்கொள்வதன் ஊடாக அப்படை பெரும் படையாகி வெற்றித் தன்மைகளை பெரிதாக்கிக் கொள்ளும்.

வள்ளுவர் மேலும் கூறுகின்றார்

*'நிலை மக்கள் சால*
*உடைத்தெனினும் தானை*
*தலை மக்கள் இல்வழி இல்'*

நிலைத்து நின்று போராடும் மன உறுதியுடைய ஆற்றல்கொண்ட வீரர்களையும், தளபதிகளையும் ஒரு படை கொண்டிருந்தாலும், அப்படையை வழிநடத்திச் செல்ல நல்ல தலைமை இல்லாது போனால் அப்படை அழிந்து அதன் தலைமைகளையும் அழித்துவிடும்.

ஈழப்போராட்ட வரலாற்றிலே இந்திய வல்லாதிக்க சதி வலையில் எமது தளபதிகள் பலரை நாம் இழந்த போதும், எமது சிறப்புமிகு தலைமையினால் எமது போராட்டம் பன்மடங்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர் போர்க் கலையில் சிறப்புற்றிருந்தார்கள் என்பதை வள்ளுவர் கூறியதிலும் சிறப்பாக, தமிழன் போர்க்கலையை சிறப்புச் செய்துள்ளார்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். புதிய புறநானூறு எழுதும் புதுயுகம் இது.

ஏ. மணிவண்ணன்
(டென்மார்க்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு: ஏசியன் அச்சகம், லண்டன். 0181 6462885

www.tamileelamarchive.com